# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 14 Issue - 10

அக்டோபர் 2021 - ஸபர் - ரபியுல் அவ்வல் 1443




## ஆகஸ்ட் 5-2019க்குப் பின்

# கஷ்மீர்



## தாலிபான்களின் பேட்டி



## குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிரான தீர்மானம்

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர் களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

அல்குர்ஆன்: 4:1


**04** ஆகஸ்ட் 5, 2019க்குப் பின் கஷ்மீர்

**20** கஷ்மீர் சித்ரவதைகளின் கொடூரங்கள்

**34** சிலுவைப் போர் 2.0

**42** CAAக்கு எதிரான தீர்மானம்

**48** இந்து அமைப்புகளுக்கு வெளிநாட்டு கொரானா நிதி

**50** இஸ்லாமும், பெண்களும் மகளிர் மன்றம் - தொடர்

**52** உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும்

**54** வயிற்றுப்புண் - மருத்துவம்

**58** வழ.ஹென்றி தீபன் சிறப்பு பேட்டி



# வைகறை வெளிச்சம்

அக்டோபர் 2021 - ஸபர் - ரபீஉல் அவ்வல் 1443

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**

52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in



# ஆகஸ்ட் 5 2019க்குப் பின் கஷ்மீர்

அன்பார்ந்த வாசகர்களே! சென்ற வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் - 2021 இதழில்,கஷ்மீர் முதல் அனைத்து முனைகளிலும் தோல்வியடைந்த மோடி அரசு என்றொரு கட்டுரையை வெளியிட்டோம். வாசகர்கள் அதனை வெகுவாகப் பாராட்டி இருந்தார்கள்.

**பணமதிப்பு நீக்கம்**

GST பொருள்கள் மற்றும் சேவைவரி, தேசிய குடியுரிமை பதிவேடு இப்படி ஒவ்வொன்றிலும் மோடி அரசு எப்படி தோற்றது என்பதைப் பட்டிய லிட்டிருந்தோம். விளக்கங்களை தந்திருந்தோம்.

இறுதியில் கஷ்மீரில் எப்படி இவர்கள் தோல்வியைச் சந்தித்தார்கள் என்பதை அடுத்த இதழில் காண்போம் எனக்கூறி இருந்தோம். காரணம், கஷ்மீரில் நடக்கும் அநியாயங்களை எழுத ஏடு தாங்காது.அதனை இங்கே தருகின்றோம்.

கஷ்மீரில் ஆகஸ்ட் - 5,2019ல் ஒருபெரும் அறிவிப்பை செய்தார்கள். கஷ்மீர் சிறப்பு



அந்தஸ்தை தரும் பிரிவு 37D ஐ நீக்குகின்றோம்.இனி கஷ்மீர் தனிமாநிலம் அல்ல அது இனி ஒன்றிய அரசின் ஓர் ஒன்றிய பிரதேசம் என்றார்கள்.

அத்தோடு அதற்கான சட்டத்தையும் கொண்டு வந்தார்கள். நாடாளு மன்றத்தில் தங்களுக்கிருக்கும் மிருகப் பலத்தைப் பயன்படுத்தி, கொண்டு வந்த சட்டங்களைத் தப்பட்டை யோடு நிறைவேற்றும் செய்தார்கள்.

இந்த சட்டம், நிறைவேற்றப்பட்ட நாளை வரலாற்று சிறப்புமிக்க நாள் எனக் கூப்பாடு, கொண்டாட்டம்.

மெத்த மமதையோடு,ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர், ஆயிரம் தலைவெட்டி அமித்ஷா, இனி நாங்கள்(POK) என்ற Pak Occured Kashmir கஷ்மீரையும் கைப்பற்றுவோம்.

அக்சை சின் (Aksai Chin) என்ற பெயரிலிருக்கும் கஷ்மீரையும் கைப்பற்றுவோம் என்றார். அக்சை சின் என்ற காஷ்மீரின் பகுதி, சீனாவின் கையிலிருக்கின்றது.

கஷ்மீரில் அரசியல் நிர்ணயச்சட்டம் பிரிவு 370ல் கொடுக்கப் பட்ட 96 சிறப்பு சலுகைகளில் அல்லது சிறப்பம்சங்களில் 92 ஏற்கனவே பறிபோய்விட்டது. காங்கிரஸ் ஆட்சிதான் அதைச் செய்தது.

“காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் மெல்ல மெல்லப் பிடுங்கிக் கொண்டோம். மீதமுள்ள நாலு சலுகைகளைப் பிடுங்கிட இப்படி ஒரு சட்டம் தேவையா?” என்றார்கள் காங்கிரஸ்காரர்கள். அவற்றையும் காலப்போக்கில் பிடுங்கி விட்டிருக்கலாம். அதற்காக தனிச்சட்டம் தேவையில்லை என்றார்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள். ஏனைய எதிர்க் கட்சியினர் இநத பிரிவு 370ஐ விலக்கியதே தவறு என்றார்கள்.

“ முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீரை உருவாக்கிட அன்று தொட்டே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பாசிச ஒன்றிய அரசின், துணையோடு பீடு நடைபோடுகின்றன ”

இந்தியா விடுதலையடைந்த நாள் முதலே கஷ்மீரை நம்மோடு இணைத்திடுவதற்கு இருக்கும் ஒரே வழி கஷ்மீர் மக்களை இதயத்தால் நம்மோடு இணைத்திடுவதே என்ற பல மனித உரிமை ஆர்வலர்கள் கூறிவரு கின்றார்கள். இதனை வலியுறுத்தி நாம் செய்திமடல், விடியல் வெள்ளி, வைகறை வெளிச்சம் ஆகியவற்றில் மிகவும் தெளிவாகக் கூறிவந்தோம்.

கஷ்மீரில் நடக்கும் அநியாயங்களை மக்கள் மன்றத்தில் வைத்ததோடு கஷ்மீரில் பெண்கள் எத்தகையதொரு மன உளைச்சலை சந்திக்கின்றார்கள் என்பதை கஷ்மீரின் பாதி விதவைகள் என்ற நூலில் விளக்கி இருந்தோம்.



அதிலும் இதையே குறிப்பிட்டிருந்தோம். அந்த மக்கள் இந்திய நீதிமன்றங்களில் தான் நீதி கேட்டார்கள் ஆனால் நாம் நீதியை மறுத்து அந்த பக்கத்திலுள்ள விட்டோம்

ஆனால் 2014 முதல் ஒன்றிய அரசின் ஆட்சியில் ஒட்டிக்கொண்ட பாசிஸ்டுகள் எதையும் காதில் போட்டுக் கொள்ளவதில்லை. காரணம் கஷ்மீர் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பூமி. இவர்கள் முஸ்லிம்களின் எதிரி. கடந்து 200 ஆண்டுகளாக முஸ்லிம்களைக் கொலை செய்து கொண்டிருப்பவர்கள். திரும்பும் திசையெல்லாம் அவர்களை நசுக்கிக் கொண்டிருப்பவர்கள்.

காலகாலமாக, சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர் களும், ஊடகங்களும் மக்கள் மன்றத்தில் ஒரு பெரும் தோற்றத்தை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. அது, கஷ்மீர் மக்கள், இந்தியாவிலிருந்து தனித்து நின்றார்கள். அவர்கள் ஏனைய மக்களைவிட சிறப்பானவர்கள் எனக் காட்டுகின்றார்கள். அவர்களை இந்தியாவோடு இணைத்தாக வேண்டும். அவர்களின் தனி அந்தஸ்தை அகற்றியாக வேண்டும். நாம் அவர்களை இந்தியாவோடு இணைக்க எடுத்த முயற்சிகளையெல்லாம், அவர்கள் முறியடிக்கின்றார்கள்.

அவர்கள் அத்தனை பேரும் தீவிரவாதிகள் என்றெல்லாம் தொடர்ந்து பிரச்சாரங்களைச் செய்தார்கள்.

சங்கப்பரிவாரத்தினர் இன்னும் ஒருபடி மேலேபோய் சில சதிவேலைகளைச் செய்தார்கள். நாடெங்கும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பல கஷ்மீர் இளைஞர்கள் மேலும் (இந்தியாவின், இதர பகுதிகளில் வாழும் முஸ்லிம்களையும், இப்படியே பழி வாங்கினார்கள்)

நாட்டு மக்களின் நெஞ்சை உலுக்கிய,நாடாளுமன்ற தாக்குதலிலும், தங்கள் கைவசமிருந்த கஷ்மீர் இளைஞர்களையே பயன்படுத்தினர். அப்பாவி அப்சல் குருவை தூக்கிலேப் போட்டு மக்களிடம் கஷ்மீர் முஸ்லிம்கள் என்றால் தீவிரவாதிகள் என்ற பிரம்மையை ஏற்படுத்தினார்கள், ஏற்படுத்தி விட்டார்கள்.

இதனால் கஷ்மீரில் என்ன உரிமை மீறல் நடந்தாலும், கொலை, கொள்ளை நடந்தாலும், நாட்டின் இதரப் பகுதியில் வாழும் மக்கள், தீவிரவாதிகள்தானே தாக்கப்படுகின்றார்கள் என கண்டுகொள்வதே இல்லை.

கஷ்மீரில் கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் இவற்றை செய்யும் பாதுகாப்புப் படையினரை, பாதுகாத்திட ஒரு தனிச்சட்டமே இருக்கின்றது. அதைத்தான் என்கின்ற அப்சா என்கின்றோம். "APSA"- Armed Forces special Powers Act - ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகார சட்டம்.

தீவிரவாதிகள் என்ற முத்திரையைப்போல், கஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்தைத் தரும், அரசியல் சாசனச் சட்டத்தை குத்திக் காட்டினார்கள். ஆனால் ஏதார்த்தத்தில் நம் நாட்டில், கஷ்மீருக்கு மட்டுந்தான் இந்த சிறப்பு அந்தஸ்து இருக்கின்றது என்றில்லை. இன்னும் பல மாநிலங்கள் இதைப்போன்ற சிறப்பு அந்தஸ்தைப் பெற்று வருகின்றது. இந்திய அரசியல் சட்டத்தை சற்றே பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

- வாசகர்களின் வசதி கருதி அவற்றையும் இங்கே சுருக்கமாக கோடிட்டுக் காட்டுகின்றோம்.

- *370:* அரசியல் சாசன சட்டப்பிரிவு *370-* காஷ்மீருக்கு தனி அந்தஸ்தை வழங்குகின்றது.
- *371:* அரசியல் சாசன சட்டப்பிரிவு *371-* மராட்டிய மாநிலத்திற்கும்,குஜராத் மாநிலத்திற்கும் சிறப்பு அந்தஸ்து வழங்குகின்றது.
- *371-ஏ:* நாகலாந்து மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்தை வழங்குகின்றது. அது இப்படிக் கூறுகின்றது.
- நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் எந்தச் சட்டமும், பின்வருவனவற்றில் நாகாலாந்திற்கு செல்லாது.
- அ) நாகா மக்களின் மத சடங்குகள் சமுதாய பழக்க வழக்கங்கள்.
- ஆ) நாகா மக்களின் பண்பாடுகள், காலந்தொட்டே இருந்து வரும் சம்பிரதாயங்கள்.

- இ) நாகா மக்களின் சிவில் மற்றும் குற்றவியல் விவகாரங்களில் நாகா மக்கள் தங்கள் பரப்புரைச் சட்டங்களையே பின்பற்றுவார்கள். நாடாளு மன்றத்தில் இயற்றப்படும் எந்தச்சட்டமும், அவர்களைப் பாதிக்காது.

- ஈ) நாகலாந்து மாநிலத்தின் நிலம் மற்றும் இதர வளங்களை மற்றவர்களின் பெயருக்கு மாற்றிட (பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எந்தச் சட்டமும் நாகலந்துக்குச் சொல்லாது. இப்போது நாகாலாந்து மக்கள் தங்களுக்கென தனி கொடியை கேட்கின்றார்கள். இல்லையேல் நாங்கள் பிரிந்து போய்விடுவோம் என்கின்றார்கள்.

- 371 -பி: பிரிவு 370 -பி, அசாம் மாநிலத்திற்கு சில விவகாரங்களில் சிறப்பு அந்தஸ்து வழங்குகின்றது.

- 371-சி: மணிப்பூர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்தை வழங்குகின்றது.

- 371டி: ஆந்திர மாநிலத்திற்கு சில சிறப்பு சலுகைகளை வழங்குகின்றது.

- 371-இ: ஆந்திர மாநிலத்திற்கு மத்தியப் பல்கலைக்கழகம்.

- 371-எப்: சிக்கிம் மாநிலத்திற்கு ஒரு தனி சிறப்பை வழங்குகின்றது.

- 371-ஜி: மிசோரம் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்துகளை வழங்குகின்றது.

- 371-எச்: அருணாச்சலப் பிரதேசத்திற்கு சில சிறப்பு சலுகைகளை வழங்குகின்றது.

ஆக இப்படி பல மாநிலங்களுக்கு நமது அரசியல் சாசனச் சட்டம், சிறப்பு அந்தஸ்துகளை வழங்கி இருக்கின்றது. ஏனெனில் இப்படி சிறப்பு சலுகைகளை வழங்கித்தான், அந்த மாநிலத்தையும் அந்த மக்களையும் ஒன்றிய அரசோடு பிணைத்திருக்கின்றோம்.

இதனால்தான் டெல்லியில் இருக்கும் அரசை ஒன்றிய அரசு “மாநிலங்கள் இணைந்த” Union of States என்கின்றோம்.

source : Constitution of India. Part -1

இந்தியாவைக் குறிப்பிட Union of India -இந்திய ஒன்றியம். இதில் நாகலாந்தில் அதை தனிநாடாக ஆக்கிட ஒரு பெரும் போரே Naga liberation Front - நாகா விடுதலை முன்னணி நடத்திக் கொண்டிருக்கின்றது. அந்த அமைப்புடன் தொடர்ந்து நமது ஒன்றிய அரசு பேசிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறெல்லாம் இருக்க கஷ்மீர் ஏன் குறி வைக்கப்படுகின்றது. என்றால், அது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அழகான வளமான நிலப்பரப்பு.

முஸ்லிம் இல்லாத கஷ்மீரை உருவாக்குவதே அங்கே நோக்கம். இதில் முதல் நடவடிக்கையையும், முன்னணி நடவடிக்கையையும் எடுத்தது, காங்கிரஸ் அரசுதான். இந்நிலையில் ஆகஸ்ட்-5, 2019ல் மோடி அரசு கொண்டு வந்த அத்தனை நடவடிக்கைகளும் தோற்றுப்போய் நிற்கின்றன.

## ஆகஸ்ட் 5 2019 செய்த பிரகடனங்கள்

- 2019, ஆகஸ்ட் 5ல் தாங்கள் கொண்டுவந்த சட்டத்தால் கஷ்மீர் அதிகமான பலன்களை அறுவடைச் செய்ய போகின்றது என்றார்கள். அவையாவன...

- கஷ்மீர் மக்கள் எல்லா வளர்ச்சித் திட்டங்களையும் பெறுவார்கள். அதனால் மக்கள் எல்லாம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வார்கள்.

- இதன் குறிப்புப் பொருள் என்னவெனில் கஷ்மீர்,அரசியல் சாசன சட்டம் பிரிவு 370 இன் கீழ் இருப்பதால், கஷ்மீரில் ஒன்றிய அரசு எல்லா நலத்திட்டங்களையும் அங்கு கொண்டு சென்றிட இயலவில்லை என்பதாகும்.

- இனி,அதாவது கஷ்மீர் பெற்றுவந்த சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டு விட்டதால், இனி நாட்டின் இதரப் பகுதியிலுள்ள முதலாளிகள் எல்லாம் கஷ்மீரில் ஏராளமாக முதலீடு செய்வார்கள். கஷ்மீர் மணம் பூத்துக்குலுங்கும், பண மரங்களைப் பெறும்.

- பாகிஸ்தானும், சைனாவும் கைவசம் வைத்துள்ள கஷ்மீர் பகுதிகளைக் கையகப்படுத்துவது, இதற்காக எவ்வளவு உயிரை வேண்டுமானாலும் தங்களது அரசு தியாகம் செய்யும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பிரகடனம் இங்கே நினைவுகூறத்தக்கது.

- கஷ்மீரில் நடந்துவரும் வம்சாவழி ஆட்சியை அகற்றுவது, இந்த வம்சாவழி ஆட்சியில்தான் கஷ்மீர் வளர்ச்சிப் பாதையை எட்டிப் பிடிக்காமலேயே போய்விட்டது. (இது இந்த இந்துத்துவ பாசிஸ்டுகள் சொல்லும் பச்சையான, கொச்சையான

பொய்- இதை பின்னால் தேவையானால் விவாதிப்போம்)

- கஷ்மீரில் நடந்துகொண்டிருக்கும் வன்முறைகளை ஒழிப்பது.
- கஷ்மீர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது,அல்லது கஷ்மீர் மக்களுக்கு வேலைகளை வாரிவழங்குவது.
- விக்கிப்பீடியாவில் இவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி : அரசியல் சாசன சட்டம், 370 ஐயும் பிரிவு 354 ஐயும் விலக்கியதால்
- கஷ்மீரில் கல்வி பெறும் உரிமையை மக்கள் பெறுவார்கள். இடஒதுக்கீடு போன்றவற்றிலும் இடம்பெறுவார்கள். இப்படி எண்ணிறந்து பிரகடனங்கள்.

### விளைவு

ஆனால்,அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370 அகற்றப்பட்டவுடன், கஷ்மீர் பொங்கி எழுந்தது. உடனேயே இண்டர்நெட், இணையதளம் எல்லாவற்றையும் இழுத்து மூடினார்கள்.

மொத்த காஷ்மீரையும், இருட்டுக்குள் தள்ளினார்கள். உலகிலேயே அதிகமாக இண்டர்நெட் துண்டிக்கப்பட்ட இடம் கஷ்மீர்தான் என்ற பெயரைப் பெற்றுத் தந்தார்கள்.

இண்டர்நெட் தொடர்பு மூடப்பட்டதால் கஷ்மீரில் இயங்கிக் கொண்டிருந்த தொழில் நிறுவனங்கள் இயங்கிட இயலாத நிலை ஏற்பட்டது. இதனால், இருந்த எல்லா வேலை வாய்ப்புகளையும் மக்கள் இழந்தார்கள். வறுமை தாண்டவமாடியது. கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன. இதுதான் (Right to Information) என்ற தகவல் அறியும் உரிமை என்ற தளத்தில் நடந்தது.

அதுபோலவே எல்லாக் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டதால், கல்வி பெறும் உரிமையும் (Right to Education ) காற்றிலே பறந்தது.

கல்வி பெற முடியாத மாணவர்களை வாழவும் விடவில்லை. அவர்களை சிறைபிடித்தார்கள். இப்படி 6000 பேர் கைது செய்யப்பட்டார்கள். இது மிகவும் குறைந்த எண்ணிக்கை. (DC : 6 -8 -2021)

காலமெல்லாம் இந்திய ஒன்றிய அரசுக்கு கூஜா தூக்கிய காஷ்மீர் மாநிலத்து அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் காணாமலாக்கப்பட்டார்கள். சில தலைவர்கள் எங்கே சிறை வைக்கப் பட்டிருந்தார்கள் என்பதை அவர்கள் சிறையிலிருந்து வெளியே வரும் வரை அறிந்திட இயலவில்லை.




கஷ்மீரில் ஆகஸ்ட்-5, 2019ல் ஆட்சியில் இருந்தவர், அதாவது கஷ்மீரில் முதலமைச்சராக இருந்தவர் மெஹ்பூபா முஃத்தி. இவர் மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர். இவர் பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துத்தான் முதலமைச்சராக இருந்தார். இவரும் ஆகஸ்ட் - 5, 2019 அன்று காணாமலாக்கப்பட்டார். இதே மோடி அரசால்! இவருடைய மகள் பலமுறை RTI என்ற தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எங்கள் அம்மா எங்கே இருக்கின்றார் என்பதைத் தெரிந்திட முயற்சி செய்தார். பதில் கிடைக்கவில்லை. நீதிமன்றங்களை அணுகினார். அங்கேயும் நீதி கிடைக்கவில்லை. அவர்தான் கடைசியாக விடுதலை செய்யப்பட்ட அரசியல் தலைவர்.

இதேபோல் இன்னும் 1000 சிறைகள். மெஹ்பூபா முஃத்திதான் கஷ்மீர் மக்களுக்கு அதிகமான துரோகத்தைச் செய்தவர். ஏனைய அரசியல் கட்சியின் தலைவர்களும் முதலமைச்சராக இருந்த அத்தனை பேரும் கஷ்மீர் மக்களுக்குத் தொடர்ந்து துரோகத்தைத்தான் செய்தார்கள். இதனை "வைகறை வெளிச்சம்" இதழில் கஷ்மீர் துரோகத்தின் வரலாறு என அட்டைப்படக் கட்டுரையாகத் தந்தோம். (பார்க்க வைகறை வெளிச்சம்)

அரசியல் தலைவர்களை மட்டுமல்ல,அப்பாவி மக்களையும், மாணவர்களையும் கைது செய்தார்கள், சிறையிலடைத்தார்கள். சித்திரவதை செய்தார்கள். இளைஞர்களை கஷ்மீர் சிறைகளிலே வைத்திடாமல் கஷ்மீருக்கு வெளியே உள்ள சிறைகளில் வைத்தார்கள். அவர்கள் இனி கஷ்மீர் வாடையே இல்லாமல் வரவேண்டும் என்பது இலக்கு.

ஏன்! குழந்தைகளையும், இரண்டு வயது முதல் உள்ள குழந்தைகளையும் கைது செய்தார்கள். இப்படிக் கைது செய்யப்பட்ட குழந்தைகள் ஆயிரத்திற்கும்மேல் என்றொரு கணக்குண்டு. (ஆதாரம் : டெக்கான் க்ரானிக்கிள் 6.8.2021)

குழந்தைகளையும் UAPA-என்ற உபா சட்டத்தின்கீழ் கைது செய்தார்கள்.




இந்தக் குழந்தைகளும் காஷ்மீருக்கு வெளியேதான் வளர்க்கப்படுகின்றார்கள். அவர்கள் கஷ்மீரை சார்ந்தவர்கள் என்பது இனி அவர்களுக்குத் தெரிந்திடக்கூடாது என்பது இலக்கு!

மக்கள் எல்லாம் பெற்று பெருவாழ்வு வாழப் போகின்றார்கள். கஷ்மீருக்குத் தன்னாட்சியைத் தரும் அரசியல் சாசனப் பிரிவு 370யும் நீக்குதல் என்ற சண்டமாருதத்தில் கஷ்மீர் கண்ட பலன் இதுதான்.

சிலபல அரசியல் தலைவர்களை விடுதலைச் செய்துவிட்டதால், சிறைபிடிக்கப்பட்ட எல்லோரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என எவரும் கருதிட வேண்டாம். இன்னும் பல ஆயிரம் பேருக்குமேல் சிறையில் இருக்கின்றார்கள்.

(ஆதாரம்: டெக்கான் க்ரானிக்கிள், ஆங்கிலம் நாளிதழ் தலையங்கம், 8.6. 2021)

ஆக முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீரை உருவாக்கிட அன்று தொட்டே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பாசிச ஒன்றிய அரசின், துணையோடு பீடு நடைபோடுகின்றன.

இதற்காகத்தான், ஆகஸ்ட் - 5, 2019ம் நாள் அதாவது கஷ்மீரின் தன்னாட்சியைத் தரும் அரசியல் சாசனத்தின் பிரிவு 370, 35-ஏ, இவை நீக்கப்பட்ட நாளிலேயே 40,000 படைவீரர்களை கஷ்மீருக்குள் புகுத்தினார்கள்.

இந்த வகையில் கஷ்மீருக்கு இன்னொரு சிறப்பு அந்தஸ்து இருக்கின்றது. அது The Largest Militarised Zone in the World.

அதாவது உலகிலேயே அதிகமாக இராணுவ மயமாக்கப்பட்ட மண்டலம். (கஷ்மீர்).

இந்த பணிகளையெல்லாம் தொடங்கி அதாவது, முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீரை உருவாக்குவது, கஷ்மீரை இராணுவ மயமாக்குவது ஆகியப் பணிகளைத் தொடங்கி தொய்வில்லாமல் தொடர்ந்து செய்து கொண்டிருந்த பெருமை காங்கிரஸ் கட்சிக்கே முதலில் சேரும்.

ஆக 370ஐ அகற்றிவிட்டால் எல்லாம், கஷ்மீருக்குக் கிடைத்துவிடும் என்ற மாயைப் பொய்யானது. குழந்தைகளை கைது செய்வதால் கதறும் தாய்மார்கள். வேலையும் பறிபோய் சிறையிலும் வாடவேண்டும் என்ற நிலைக்கு வந்த வாலிபர்கள், இவர்களுக்கிடையேதான் கஷ்மீர் மக்கள் உழன்று கொண்டிருக்கின்றார்கள். ஏற்கனவே கஷ்மீர் தாய்மார்களுக்கு, என்னென்ன அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் கஷ்மீரின் பாதி விதவைகள் என்ற நூலில் வெளியிட்டிருக்கின்றோம். அந்த நூலின் பல ஆயிரம் பிரதிகள் மக்களை எட்டிவிட்டதால், அதனை இங்கே விரித்துரைக்க விரும்பவில்லை.

## இதர நோக்கங்கள் தோல்வி

கஷ்மீரின் தனி அந்தஸ்தை நீக்கிடும் சட்டம். கஷ்மீரை மனு அமைப்பிற்கு உள்ளாகும் சட்டம், Jammu and Kashmir Reorganization Act -2019 ஆகியவற்றிற்குப் பின்னால் இன்னொரு நோக்கமிருந்தது என்கின்றார்கள் இப்போதைய ஆய்வாளர்கள். அது சீனா, இமாலயப்பிரதேசத்தின் வழி பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய

நாடுகளுக்குப் போட்டுக்கொண்டிருக்கும் நெடுஞ்சாலையைத் தடுப்பதுதான். (Front Line )

இந்த நெடுஞ்சாலை சீனாவின் கையிலிருக்கும், கஷ்மீரின் பகுதி வழியாகச் சென்று கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியின் பெயர்தான் ஆக்ஷிசின் என்பது.

உள்துறை அமைச்சர் அமித்ஷா நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட்-5,2019ல்,பேசும்போது இந்தப் பகுதியையும், நாம் கைப்பற்றுவோம். பாகிஸ்தானின் கையிலிருக்கும், கஷ்மீரையும் சேர்த்து எனக் கூறினார். என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டோம்.

அமித்ஷாவின் இந்த அறிவிப்பில் இருந்த ஆக்ரோஷத்தின் அளவுக்கு நடந்திருந்தால்,

நமது ஒன்றிய அரசு உடனேயே அதற்கான நடவடிக்கைகளில் இறங்கி இருக்க வேண்டும். ஆனால், இவர்கள் கஷ்மீர் மக்களை அழிக்கப் போகின்றோம் என்ற அகமகிழ்ச்சியில் அமிழ்ந்திருந்த நோக்கில், சீனா விஸீத்துக் கொண்டது. அது அந்தப் பகுதியில் சாலைகளை அமைப்பதில் கவனமாக இருந்தது. சாலைகளைப் போட்டு முடிந்தது.

பலநூறு சதுர கிலோமீட்டர் நமது பகுதியை அதாவது இந்தியாவிற்கு சொந்தமானப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. நம்மால் அதனை இன்றளவும் மீட்டிட இயலவில்லை. இதுகுறித்து சரியான நம்பகமான எந்தச் செய்தியையும் இன்றளவும் நாட்டு மக்களுக்கு தந்திடவில்லை. நமது இராணுவ வீரர்களில் 20 பேரை இழந்தோம்.

ஏப்ரல் 20, 2020 முதல் சீனா நமது எல்லையில் தொடங்கிய இராணுவத் தாக்குதல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இதனை நம் நாட்டு நாளிதழ்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. அண்மையில் தி டெக்கான் கிரானிக்கள் என்ற ஆங்கில நாளிதழ் தன்னுடைய தலையங்கத்தில் பொட்டில் அறைந்தாற்போல் கேட்டிருந்தது.

ஆனால், ஒன்று மட்டும் எல்லோருக்கும் தெரிந்தது. சீனாவோடு நாம் ஏழுமுறை பேசிவிட்டோம். அல்லாமல் சீனாவோடு தெளிவான தாக்குதல் எதையும் நடத்திடவில்லை. ஆனால், ஏழுமுறை பேசிய பின்னரும் தெளிவுகள் எதுவும் ஏற்படவில்லை.

இத்தனையும் நடந்திருக்காது அமித்ஷாவும் மோடியும் நாங்கள் சீனாவின் கையிலிருக்கும் கஷ்மீரையும் மீட்போம் என வாய்நீளம் காட்டாமலிருந்திருந்தால். Carava :Monthly, Aug - 2020. அப்படி முண்டாதட்டியவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் இத்தோடு நிற்கவில்லை விவகாரம்.




### பாகிஸ்தானில் சீனா

ஆகஸ்ட்-5,2019ல் நமது இந்துத்துவ பாசிஸ்டுகள் போட்ட கும்மாளத்தில் வேறொன்றும் நடந்தது. எப்படி சீனா விழித்துக்கொண்டதோ அதேபோல் பாகிஸ்தானும் விஸீத்துக்கொண்டது. பாகிஸ்தான் தன் கையிலிருக்கும் கஷ்மீரை பாதுகாத்திட ஒரு பெரும் நடவடிக்கையை மேற்கொண்டது. அது யாரும் சற்றும் எதிர்பார்க்காத ஒன்று.

### பாகிஸ்தான் மேற்கொண்ட நடவடிக்கை

1963ம் ஆண்டே பாகிஸ்தான் நமக்குச் சொந்தமான (இந்தியாவுக்குச்) சொந்தமான லடாக்கின் ஒருபகுதியை சீனாவுக்கு விட்டுத் தந்துவிட்டது இது சுமார் 5180 சதுர கிலோமீட்டர் என்கின்றார்கள். இதன் மூலம் பாகிஸ்தான் மிகவும் தந்திரமாக சீனாவை இந்த விவகாரத்திற்குள் அதாவது கஷ்மீர் விவகாரத்திற்குள் கொண்டுவந்து இணைத்துவிட்டது எனலாம்.

பாகிஸ்தானின் இந்த சதி வலைக்குள் அமித்ஷாவின் ஆகஸ்ட் -5,2019வது அறிவிப்பு நமது இந்தியாவை சிக்கவைத்துவிட்டது. அங்கே சீனா ஒரு பெரும் இராணுவத்தை அமைத்துவிட்டது. (Source: Caravan,Aug-2020)

### தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொண்ட பாகிஸ்தான்

ஒரு வகையில் பாகிஸ்தான், இந்த விவகாரத்தில் தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொண்டது என்றே சொல்லவேண்டும். காரணம், பாகிஸ்தான் தன் எல்லைக்குள் சீனாவை நுழைய விட்டுவிட்டது. அத்தோடு சீனா தனது இராணுவத்தை அமைத்துக்கொள்ள, தனது கையிலுள்ள கஷ்மீரில் 584 சதுர

கிலோமீட்டர்களை விட்டுத் தந்துள்ளது. இந்தப் பகுதியில் சீனா தன் இராணுவத்தை அமைத்து வருகின்றது.

இப்படி இராணுவத் தளத்தை அமைத்துக் கொண்டுள்ள சீனா அந்தப் பகுதியை மீண்டும் பாகிஸ்தானிடம் ஒப்படைக்குமா, என்பது சந்தேகமே! இந்தியாவிடம் சீனா அப்படித்தான் நடந்து கொள்கின்றது. நம்மிடமிருந்து அபகரித்த 38,000 சதுர கிலோமீட்டர்களை 1967 போரில் அபகரித்த பகுதிகளை இன்னமும் தரவில்லை. நடத்திய பேச்சுவார்த்தைகள் எதுவும் பயனளிக்கவில்லை. இந்தப் பகுதி பாகிஸ்தானைப் போல் நாமாகத் தந்ததில்லை. அதுவாகப் பிடித்துக்கொண்டது. ஆக இப்போது சீனாவிடம், பாகிஸ்தான் தந்துள்ளப் பகுதி மீண்டும் பாகிஸ்தானுக்கு கிடைப்பது கஷ்டமே!

பாகிஸ்தான், இன்னொரு இமாலயத் தவறையும் இங்கே செய்திருக்கின்றது. சீனா இப்போது பாகிஸ்தானுக்கு நண்பனைப்போல் காட்சி தரலாம். ஆனால்,பின்னாளில் காலை வாரிவிடும். இதுதான் இன்றளவும் சீனா காட்டிவரும் வெளிநாட்டுக் கொள்கை. சீனா நம்பத்தகுந்த ஒரு நாடல்ல.

அடுத்து சீனாவின் இராஜாங்கக் கொள்கைகள் முஸ்லிம் விரோதத்தையும், இஸ்லாமிய வெறுப்பையும் மையமாகக் கொண்டது. பொதுவுடைமைக் கொள்கையை கொண்ட நாள்முதலே முஸ்லிம்களை எப்படி நடத்தி வருகின்றது என்பதையும் வைத்துப் பார்த்தாலே இது புலப்படும். இப்போது தன் பிடியில் இருக்கும் உகியூர் முஸ்லிம்களை அது நடத்தும் விதமும் இந்த உண்மைகளை நமக்குச் சொல்லும்.

பாகிஸ்தானின் பிரதமர் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான், கண்டும் காணாததைப்போல் இருந்து வருகின்றார். ஆனால், பாகிஸ்தான் மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இந்த சீனா உறவை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார்கள். அண்மையில் பாகிஸ்தானில் நடந்த போராட்டங் களிலேயே இதுதான் மிகப்பெரிய போராட்டம். ஆனால், இம்ரான்கான் சமாளித்துவிட்டார்.

## இந்தியாவின் நிலைப்பாடு

காஷ்மீர் நிலவரம் மிகவும் மோசமானது. குறிப்பாக (POK) பாகிஸ்தானின் கையிலுள்ள கஷ்மீரில் சீனாவே நம்மை எதிர்கொள்ளப் போகின்றது. இனி கஷ்மீர் பிரச்சனை மூன்று நாடுகளைக் கொண்ட பிரச்சனை என்பதை இந்தியா புரிந்து வைத்திருக்கின்றது. நமது இராணுவ தளபதிகள் இதை தெரிந்து கொண்டுள்ளார்கள்.



பாகிஸ்தான் கைவசமுள்ள கஷ்மீரில் சீனா நிரந்தர இராணுவ கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதை நமது பாதுகாப்பு அமைச்சர் (இராஜ்நாத்சிங், முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.தலைவர்) இரண்டொருமுறை நமது நாடாளுமன்றத்தில் மறைத்தார். பின்னர் ஒப்புக்கொண்டார்.

நமது பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் தயங்கித் தயங்கி ஒத்துக்கொண்டதற்கான காரணம், அத்தனைப் பிரச்சனைகளும் உள்துறை அமைச்சர் ஆயிரம் தலைவெட்டி அமித்ஷாவின் ஆகஸ்ட்-5, 2019 நாடாளுமன்ற உளறல் என்பது அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம்தான். (விரிவான தகவல்களுக்குப் பார்க்க, Caravan Aug 2020)

இந்த நிலையில், இன்றைய ஆகஸ்டு-5,2019 கஷ்மீர் சண்டமாருதம் நமக்கு இனிவரும் நாள்களில் ஒருபெரும், தலைவலியாகவே இருக்கும் என்பது திண்ணம். ஆனால் அழிந்து கொண்டிருப்பது கஷ்மீர் மக்கள்.

இந்த வகையில் - இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நின்று பார்த்திடும்போது கஷ்மீர் பிரச்சனையில் அந்த மக்களை நிர்மூலமாக்கியதைத் தவிர நாம் சாதித்தது எதுவுமில்லை. அல்லாமல் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக ஆக்கிவிட்டோம்.

இந்த வகையில் அரசியல் சாசனப் பிரிவு 370 நீக்கம், தோல்வி மட்டுமல்ல, அது எதிர்பாராத எதிர்விளைவுகளை ஏற்படுத்துவது. இதனை நமது இந்தியப் பத்திரிகையில் இடம்பெற்ற கட்டுரை ஒன்று இப்படிக் கூறுகின்றது.

“சிலர் கஷ்மீரில் தீவிரவாதம் குறைந்திருக்கின்றது என்கிறார்கள். ஆனால், நாம் மக்களை ஒட்டு மொத்தமாக எல்லோரையும் முடக்கிப் போட்டு விட்டோம். ஐந்தாயிரத்திற்கும்(5000) மேற்பட்டவர்களை கைது செய்திருக்கின்றோம். உலகில் வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இணையதள சேவைகளை 213 நாள்களுக்கு முடக்கிப் போட்டுவிட்டோம். பாதுகாப்பு படையினரின் கைகளில் அந்த மக்கள் தினமும் சித்திரவதைகளை அனுபவித்துக்



கொண்டிருக்கின்றார்கள்."

"அதேபோல் பாதுகாப்புப்படையின் குவிப்பு, அந்த நிலத்தை பாதுகாப்புப் படையினர் மட்டும் நடமாடும் பூமியாக மாற்றி இருக்கின்றது."

"மாணவர்கள் பள்ளிக்குச் சென்று பாடம்படிக்கவில்லை. ஏனெனில் ஆகஸ்ட்- 5,2019 அறிவிப்பிற்குப்பின் மாணவர்கள் வீதிக்கு வந்து போராடுவார்கள் எனப் பயந்து பள்ளிகளை மூடிவிட்டார்கள். ஆன்லைன் "Online" பாடமும், நடப்பதில்லை."

தொழில்கள் எல்லாம் முடங்கிவிட்டன. வருமானமின்றி மக்கள் வாடுகின்றார்கள்.

கஷ்மீரில் ஆகஸ்ட்-5,2019 க்கு பின் பூரண அமைதி நிலவும் என்றும், அதனால் பெரும் பண முதலைகளெல்லாம், அங்கே சென்று முதலீடுகளைச் செய்திட இருக்கின்றார்கள். 400 ஆலை அரசர்கள் புரிந்துணர்வு (Memorandum of Understanding) ஒப்பந்தங்களைப் போட்டிருக்கின்றார்கள். தொழில்கள் உடனேயே தொடங்கப்படும். வேலைவாய்ப்புகள் பெருகும், வளம் கொழிக்கும் என்ற கூப்பாடுகளும் இரண்டாண்டுகளுக்குப்பின் உப்பு சப்பற்றது எனத் தெரிகின்றது. TH(E)June 24,2021

கொரோனா அந்த மக்களைக் கொன்று குவித்ததையும் கண்டுகொள்ளவில்லை. அந்த மக்கள் எப்படியாவது மடிந்தால் போதும் என்ற மனநிலையே அதிகாரவர்க்கத்தில் நிலவுகின்றது. இதில் மட்டுந்தான் ஆட்சியாளர்கள் விரும்பியது நடக்கின்றது.

### அமித்ஷாவின் உளறல்

இது பத்திரிக்கையின் அலசல் இன்னும் பல கசப்பான உண்மைகளையே நமக்கு முன் கொண்டுவந்து காட்டுகின்றது.

இதனால் சீனா - LAC Line of Actual Control பகுதியில், பல தொல்லைகளை உருவாக்கிவிட்டது. (இதனை ஏற்கனவே விவாதித்துவிட்டோம்)

அத்தனை ஆவேச பிரகடனங்களுக்குப் பின்னரும், முன்னர் கஷ்மீரை அழித்தவர்கள் எனக்கூறிய அதே அரசியல் தலைவர்களை டெல்லிக்கு அழைத்துப் பேசியது. 24.7.2021ல் ஒரு பெரும் அவமானம். ஏனெனில் இந்த அரசியல் தலைவர்கள் மீது மோடியும் அமித்ஷாவும் பாடாத வசைகள் இல்லை. சொல்லாத பொல்லாங்கு இல்லை. இது புதிய இந்தியாவைப்போல், புதிய கஷ்மீர் கோரும் புளித்துப்போன செய்தியாகிவிட்டது.

யதார்த்தத்தில் இந்த கஷ்மீர் தலைவர்கள் அதாவது 24.7.2021ல் மோடி அழைத்துப் பேசிய தலைவர்கள், பாரம்பரியமாக பதவிக்காகவும், பணத்திற்காகவும் அந்த மக்களுக்குத் தீராத துரோகத்தை செய்தவர்கள்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் என்ன பேசினார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. போட்டோவுக்குப் போஸ்கொடுத்ததைத் தவிர.

ஆனால் ஒன்று பளிச்சென பிரகடனமானது. அது, கஷ்மீரில் எல்லாமே தோற்றுப்போனது என்பதை மோடியே பிரகடனப்படுத்தியது போலிருந்தது. இதற்கான அத்தாட்சி என்னவெனில் அன்றிலிருந்துதான் எல்லாப் பத்திரிக்கைகளும், காட்சி ஊடகங்களும் ஆகஸ்ட்-5,2019க்கு இரண்டாண்டுகளுக்குப்பின் எனக் கட்டுரைகளை எழுதத் தொடங்கின. மோடி, அமித்ஷாவின் பிரகடனங்கள் வெத்துவேட்டுகள் என்பதை மக்களுக்குப் புரியவைத்தன.

# தேசப்பிரிவினையின் போது
# கஷ்மீர்

கடந்த ஆகஸ்ட் 15, 2021ல் நம் நாடு அதன் 75வது விடுதலை நாளைக் கொண்டாடியது. அப்போது பிரதமர் மோடி ஓர் அறிவிப்பை செய்தார். அந்த அறிவிப்பு ஆகஸ்ட் 14ம் நாள் தேசபிரிவினையின் நாள் என அனுஷ்டித்து விடவேண்டும் என்பதே!

உடனேயே பத்திரிகையாளர்கள் பலரும் தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? என்பன போன்ற கட்டுரைகளை எழுதினார்கள். நாம் ஏற்கனவே தேசப் பிரிவினைக்கு யார் காரணம்? என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றோம். வாசகர்கள் அதனைப் பரவலாக் கிடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதமர் மோடியின் அறிவிப்பிற்குப் பின் கரன் தாப்பூர் என்ற பிரபல பத்திரிக்கையாளர் டெக்கான் க்ரானிக்கிள் Deccan Chronicle என்ற ஆங்கில நாளிதழில் கட்டுரை ஒன்றை எழுதினார். தேசப்பிரிவினையின் போது கஷ்மீரில் என்ன நடந்தது என்பதை இப்படிக் குறிப்பிடுகின்றார்.


“அப்போது ஜம்மு பகுதி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பகுதி. சில வாரங்களில், தொடர்ந்து நடந்த வகுப்புக்கலவரங்கள், கூட்டுப்படுகொலைகள், கட்டாயப்படுத்தப்பட்டு மக்கள் வெளியேற்றப்பட்டது போன்றவை அந்தப்பகுதியை, ஜம்மு பகுதியை இந்துத்துவ பெரும்பான்மை மாநிலமாக மாற்றிவிட்டது.”

எழுத்தாளர்களும், வரலாற்றாசிரியர்களும் அங்கு கொலை செய்யப்பட்டவர்களும், கட்டாயப்படுத்தப்பட்ட மக்களும் (முஸ்லிம்களும்) லட்சகணக்கில் (Hundreds of Thousands) என்கின்றார்கள்.

ஜனவரி 1948ல் ஸ்பெக்டேட்டர் என்ற பத்திரிகையில், வேரோஸ் அலெக்சாண்டர் என்பவர் இப்படி எழுதினார்.

“ஜம்மு பகுதியில் வாழ்ந்த இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் வெளிப்படையாகக் கிடைத்த அரசின் ஒப்புதலுடன், அதிகாரிகளின் துணையோடும் தங்கள் முஸ்லிம் அண்டைவீட்டார்களை வீட்டைவிட்டு ஜம்மு பகுதியை விட்டு துரத்தினார்கள்.”

மகாத்மா காந்திஜியை ஆதாரமாகக் காட்டி அவர் இப்படி எழுதினார். இரண்டு லட்சம் பேர் கணக்கில் வரவில்லை என எழுதினார். கிறிஸ்டோபர் செனிடன் என்பவர், தான் எழுதிய “கஷ்மீர் எழுதப்படாத வரலாறு” என்ற நூலில் இப்படி எழுதினார். “(70,000) எழுபது ஆயிரத்திலிருந்து இரண்டு லட்சத்து முப்பத்தேழாயிரம் வரை கொலை செய்யப்பட்டார்கள்.”




அர்ஜுன் அப்பாதுரை என்பவரும், ஏரியன் மேக் என்பவரும், “இந்தியாவின் உலகம்” என்ற நூலில், “இரண்டு லட்சம் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஐந்து லட்சம் முஸ்லிம்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டார்கள்.” என்று எழுதினார்கள்.

அன்றைய நாள் பத்திரிக்கை “The States Man” தி ஸ்டேட்ஸ்மேன், 5 லட்சம் முஸ்லிம்கள் வரை கொலை செய்யப்பட்டார்கள் என்று எழுதியது.

இன்னும் பல எழுத்தாளர்கள், இந்த இன சுத்திகரிப்பை அதிக ஆதாரங்களுடன் எழுதி இருக்கின்றார்கள். இந்தக் கொடுமையையும் ஆகஸ்ட் 14களில் நினைவு கூற வேண்டும்.

***- MGM***


Source :
1. The Spectator.January 1948, Article by Horace Alexander.
2. Christopher Suedden. "Kashmir the Unwritten History.
3. India's World by Arjun Appadurri and Arien Mack.
4. The States Man.



“டெல்லியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டபோது, இந்தியா முழுவதும் 15 நாள்கள் மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார்கள். ஆனால் ஒட்டுமொத்த கிராமமும் கற்பழிக்கப்பட்டபோது எதுவுமில்லை நமக்கு. எங்கே நமக்கு நியாயம் கிடைத்தது?”

**கற்பழிக்கப்பட்ட பெண் தன்னிடம் கூறியதாக சமூக ஆர்வலர் ஹர்ஸ் மந்தர் அவர்கள் குறிப்பிட்டது**

# கஷ்மீர் கற்பழிப்புகளுக்கு எப்போது நீதி?

ஹர்ஸ் மந்தர் என்ற சமூக ஆர்வலர் 1991ம் ஆண்டு கஷ்மீரில் நடந்த கூட்டுக் கற்பழிப்பு பற்றி ஜூன் 30, ஞாயிறு 2013ல் தி ஹிந்து -வில் எழுதிய கட்டுரையை இங்கே தருகின்றோம்.

**கா**ஷ்மீர் *1991*,பிப்ரவரி *23*ம் நாள். குனான் போஷ்புரா என்ற கிராமம்!

பனிபடர்ந்த அந்தகிராமத்தில் மக்கள் வீட்டின் கதவுகளை இறுக்க அடைத்துக் கொண்டு, வீடுகளில் தீயைமூட்டி குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். “கங் கிரீஸ்” என்ற வகை இரும்பு அடுப்பை அனல்மூட்டி அவர்கள் தங்கள் உடலைச் சூடேற்றிக் கொள்வார்கள். இது வழக்கம். இரவு அமைதியாக அந்த கிராமத்தில் நகர்ந்து கொண்டிருந்தது.

ஆனால்,அந்த அமைதியை ஒட்டு மொத்தமாகக் கலைத்தனர்.

நமது இராணுவத்தினர் எல்லா வீடுகளிலும் ஒன்றுபோல் கதவுகளைத் தட்டிய சப்தம் ஊரை உலுக்கிற்று.

ஆமாம் இராணுவம் வந்துவிட்டது. இன்னொருமுறை அந்த கிராமத்தைத் துளாவி எடுத்திட, இல்லை அல்லோல கல்லோலப்படுத்திட.

வழக்கம்போல் இப்போதும், கிராமத்தில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை அப்புறப்படுத்திட வந்தோம் என்பதே காரணமாக சொல்லப் பட்டது. அந்தநேரம் போராளிகளின் உச்ச கட்ட நேரம் என்பதையும் ஒரு காரணமாகக் காட்டினார்கள்.

வீடுகளினுள்ளே புகுவதும், ஆண்களைத் தனிமைப்படுத்தி வெளியே இழுத்து வருவதும்,நமது இராணுவத்தின் இடைவிடா வேலையாக இருந்தது. அந்த ஆண்களிடம் போராளிகளைப் பற்றிய விசாரணையை நடத்தப் போகின்றோம் எனக் கூறுவது மற்றொரு பாவனை.

அந்த இரவில் பிப்ரவரி *23, 1991* அன்று இரவு எல்லா ஆண்களும், இரண்டு வீடுகளுக்குள் இழுத்துச் செல்லப் பட்டார்கள். இந்த இரண்டு வீடுகளும் சித்திரவதைக் கூடங்களாகவும் விசாரணை மையங்களாகவும் மாற்றப்பட்டன.

ஆண்களைக் குப்புறப்படுக்க வைத்தார்கள். மிளகுப்பொடியைக் கலக்கிய தண்ணீரில் அவர்களின் முகங்களை “மூழ்க” வைத்தார்கள். அதன்பின் பழுக்கக் காய்ச்சிய இரும்பால் சூடு போட்டார்கள். பின்னர் மின்சாரத்தை உடலில் பாய்ச்சினார்கள்.

இப்படி சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருந்த ஆண்களின் வீடுகளில் அவர்களுக்கு தெரியாமல் இராணுவத்தினர் புகுந்தார்கள். அங்கே *8* வயது குழந்தைகள் முதல் *80* வயதான பெண்கள் வரை அனைவரையும் கற்பழித்தார்கள். ஒவ்வொரு பெண்ணையும் முறைவைத்து அனைவரும் திரும்பத் திரும்ப கற்பழித்தார்கள்.

அவர்களின் மழலைகளும் அவர்களோடு சேர்ந்து அழுதார்கள். ஓலமிட்டார்கள். ஒப்பாரி வைத்தார்கள். கண்டு கொள்வார் யாருமில்லை.

ஒரு பெண் இப்போதும் *22* ஆண்டுகளுக்குப் பின்னும், தனக்கு நிகழ்ந்ததை எண்ணி திகிலடைகின்றாள். கண்ணீர் கரைபுரண்டோட நினைவு கூர்ந்தார். அவள் மயக்கமடைந்த







நிலையிலும், எட்டு இராணுவத்தினர் அவளைத் திரும்பத் திரும்ப கற்பழித்தார்கள். அந்த இராணுவத்தில் சிலர் குடித்திருந்தனர்.

இன்னொரு பெண் சொன்னாள்:

"ஒரு குழந்தை தன் தாய் திரும்பத்திரும்ப கற்பழிக்கப்படுவதை பொறுத்துக்கொள்ளாமல் அடைந்த அதிர்ச்சியில் ஜன்னல் வழியாகக் கீழே குதித்துவிட்டது. அதனால் கை கால்கள் உடைந்து உலகில் நிரந்தரமாக ஊனப்பட்டுப் போனது."

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது இரண்டு வீடுகளில் அந்த கிராமத்தைச் சார்ந்த ஆண்களெல்லாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் இராணுவத்தினர், ஆண்களிடம், இராணுவம் கிராமத்தைவிட்டு வெளியேறிய பின்னர்தான் நீங்களெல்லாம் உங்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டும் எனப் பிரகடனப்படுத்தினார்கள். வெளியேறினார்கள்.

அந்த ஆண்கள் வீடுகளுக்கு வந்தபோது தங்கள் குழந்தைகள், மனைவிமார்கள், தாய்மார்கள் எல்லாம் நிர்வாணமாகவும், பிறப்புறுப்பிலிருந்து இரத்தம் வழிந்தோடவும் மயக்கமுற்ற நிலையிலும் கிடந்தார்கள். வீட்டிலிருந்த பெண்களோடு இதர பொருட்களும் உடைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் கிடந்தன.

இரண்டு நாள் கழித்துதான் அவர்கள் தங்களுக்கு நடந்தவை பற்றி, காவல் நிலையத்தில் புகார் செய்திடும் நெஞ்சுரத்தைப் பெற்றார்கள். ஆனால், காவல் நிலையத்தில் அவர்களின் புகார்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

### மாவட்ட நீதிபதி

அந்த மக்கள் அங்குள்ள மாவட்ட நீதிபதியிடம் முறையிட்டார்கள். அவரும் செவிசாய்க்கவில்லை. மாவட்ட நீதிபதி S.M.யாசீனின் வீட்டை முற்றுகையிட்டார்கள். அதன்பின் மாவட்ட நீதிபதி அந்த கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டார். அவர் தனது அறிக்கையில் "இராணுவ வீரர்கள் Behaved like violent beasts - காட்டு மிருகங்களைப் போல் நடந்து கொண்டிருக்கின்றார்கள்" எனக் குறிப்பிட்டார். அந்த மாவட்ட நீதிபதி தந்த அழுத்தங்களின் கீழ் மார்ச் 18ம் நாள் 1991ல் ஒரு (FIR) முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தார்கள்.

### கண்டுபிடிக்க முடியவில்லையாம்

ஒரு மாதம் கழித்து அரசு வழக்குத் துறை இயக்குநர் -'Director of Prosecution' காவல்துறை தயாரித்த வழக்கு, நீதிமன்றங்களில் வழக்குத் தொடரும் தகுதியில் இல்லை - Unfit for launching criminal prosecution எனக் கூறி வழக்கை மூடிவிட்டார்.



மக்கள் மீண்டும் போராடவே வழக்கு மீண்டும் உயிர்பெற்றது. ஆனால், அக்டோபர் 21ம் நாள் இந்த வழக்கு கற்பழித்தவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற போர்வையில் மூடப்பட்டது. 'perpetrators were untraced'

சுதந்திர இந்தியாவில் நடந்த மிகப்பெரிய கூட்டு கற்பழிப்பு கஷ்மீரின் குனான் போஷ்புரா கிராமத்தில் நடந்ததுதான். ஆனால், அடுத்த 11 மாதங்களுக்கு இது பற்றி எந்தப் பேச்சும் எழவில்லை. காரணம், நீண்ட நாள்களாக அந்த மாநிலம், குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீஸீருந்தது, சீரழிந்தது. அதன்பின்னர் தேர்தல்கள் நடந்தன. ஆட்சிகள் வந்து போயின. இந்த ஆட்சியில் முதலமைச்சராக வந்தவர்கள் யாருக்கும், இந்தக் கோர நிகழ்வையும், அதனால் பாதிக்கப்பட்டவர்களையும் நினைத்துப் பார்க்க நேரமில்லை.

அதேபோல் அந்த மாநிலத்தில் அரசியல் நடத்திய எந்த அரசியல்வாதிக்கும் அது பற்றி நினைத்துப் பார்க்க நேரமிருக்கவில்லை.

### நீதி தேடிட நிதி : 2004 2011

2004ம் ஆண்டு அந்த கிராமவாசிகளே இந்த கோர நிகழ்வுக்கு மீண்டும் நீதி தேடிட புறப்பட்டார்கள். அவர்கள் வயல்வெளிகளில் உழைத்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த வர்கள். வயல்வெளிகளில் உழைக்காதவர்கள் அங்குமிங்கும் ஓடி கூலி வேலை செய்து வயிறு பிழைத்துக் கொண்டிருந்தார்கள்.

எனினும், கஷ்மீரில் நீதி தேடிட நிதியும் தேவைப்படும் என்பதனால் அவர்கள் தங்கள் கடின உழைப்பிற்குப் பின் கிடைத்த வருவாயில்



ஒரு பகுதியை அநியாயத்திற்கெதிரான இந்தப் போருக்காகத் தந்தார்கள்.

ஓரளவுக்கு நிதியைத் திரட்டிய பின், மாநில மனித உரிமை ஆணையத்திடம் ஓர் மனுவைச் சமர்ப்பித்தார்கள். (state Human Rights Commission)

அப்போது கற்பழிக்கப்பட்டவர்களில் உயிருடன் இருந்தவர்களில் பலரின் வாக்கு மூலங்களைக் கமிஷன் பதிவுசெய்தது.

இதில் கிராமத்தவர்கள் ஒரு முக்கியமான அணுகுமுறையை மேற்கொண்டார்கள். கற்பழிக்கப்பட்ட பெண்களில், திருமணமான வர்களையே கமிஷன் முன் நிறுத்தினார்கள். கற்பழிப்புக்குள்ளான பெண்களில் திருமணமாகா தவர்களை ஆணையத்தின் முன் நிறுத்திடவில்லை. காரணம், அவர்களின் திருமணங்களை அது பாதிக்கும் என்பதே!

தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி சாட்சியங்களின் மேல் முடிவெடுக்க மனித உரிமை ஆணையம் (கமிஷன்) ஏழாண்டுகள் எடுத்துக்கொண்டது.

## 4ஆவது இராஜபுத்னா ரைபிள்ஸ் கற்பழித்தார்கள்

அக்டோபர் 16ம் நாள் 2011ல் இந்த மனித உரிமை ஆணையம் தன் முடிவை அறிவித்தது. அதில் குனான் போஷ்புராவில் 23 /24 - 2- 1991 அன்று மொத்த கிராமத்துப் பெண்களையும் கற்பழித்தது, நான்காவது இராஜபுத்னா ரைபிள்ஸ்,68,மவுண்டன் பிரிக்கேட்தான் எனப் பிரகடனப்படுத்தியது.

personnel of the 4th Rajputana rifles, 68,Mountain Brigade, had raped women of kunan poshpura on the nights of February 23-24,199

அத்தோடு பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் இரண்டு லட்சம் ரூபாய் மாநில அரசு கொடுக்க வேண்டும் என்றும் கூறியது.

இன்னும் இந்த கற்பழிப்பு தொடர்பாகப் பதியப்பட்ட (கிரிமினல்) தண்டனைக்குரிய குற்றங்களை ஒரு சிறப்புக் காவல்பிரிவு விசாரணை செய்திட வேண்டும் என்றும், அதை மாவட்ட தலைமைக் காவலரின் அந்தஸ்துக்குக் குறையாமல் (SSP) ஆய்வுசெய்திட வேண்டும் எனவும் அந்த விசாரணை அதன் இயல்பான முடிவை அடையும் வரை இயல்பாக விட்டுவிட வேண்டும்; அது ஓர் குறிப்பிட்ட கால வரையறைக்குள் முடிந்திட வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தியது.

## சட்டசபை சத்த சபை

மாநில, மனித உரிமை ஆணையத்தின் இந்த முடிவும் இந்தப் பிரகடனங்களும் கூட மாநில அரசை செயல்பட்டிடச் செய்திடவில்லை. ஆனால், மனித உரிமை! ஆணையத்தின் அறிக்கை கஷ்மீர் மாநில சட்டசபைக்குள் ஓர் பயங்கர அமளியை ஏற்படுத்தியது. இதனால் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் செயல்பட்டிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். அவர் தனது பங்காக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த வயோதிகர்கள் சிலரை அழைத்து வந்து முதலமைச்சரைச் சந்திக்க வைத்தார். இதில் வேடிக்கை என்னவெனில் அவர்தான் கஷ்மீர் மாநிலத்தின் சட்ட அமைச்சர். அவர், பின்னர் 39 பெண்களுக்கு தலா ஒருவருக்கு ஒரு லட்சம் வீதம் விநியோகித்தார். ஆனாலும் அந்த கிரிமினல் வழக்கை மீண்டும் விசாரிக்க எந்த நடவடிக்கையும் இல்லை.

பின்னர் இந்த கற்பழிப்பு வழக்குகளை



பல்கலைக்கழக மாணவிகள் கையிலெடுத்தனர். அவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு 2013ம் ஆண்டு மார்ச் 13ம் நாள் கொண்டுசெல்ல, அந்த கிராமத்துப் பெண்களுக்கு உதவி செய்தார்கள். உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில், மாநில மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரைகளை மாநில அரசு செயல்படுத்திட வேண்டும் என ஆணை பிறப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பத்திரிக்கையாளர் சீமா முஸ்தபா

ஜூன் 2013ல் சீமா முஸ்தபா என்ற மூத்த பத்திரிகையாளர் (centre for policy Analysis) கொள்கை அலசல்களுக்கான மையம் என்ற அமைப்பைச் சார்ந்த சிலருக்கு அழைப்பு ஒன்றை விடுத்தார். அந்த அழைப்பில், இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் அந்தக் கற்பழிப்புகளுக்குப் பின்னும், எஞ்சி இருப்பவர்களைச் சென்று பார்க்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் குழுவில், ஷெஹ்பா பாரூக்கி இவர் (AIDWA) (கம்யூனிஸ்டுகளின் பெண்கள் அமைப்பைச் சார்ந்தவர்) முஹம்மத் சலீம். இவர் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்டுகள்)ஐ சார்ந்தவர். பாலச்சந்திரன் கம்யூனிஸ்ட் கட்சி( இந்தியா), என். இராம் மோகன், இவர் ஓய்வுபெற்ற ஓர் காவல்துறை அதிகாரி.ஜான் டயால் (இவர் பிரசித்தி பெற்ற மனித உரிமை ஆர்வலர்), நான் (ஹர்ஷ் மந்தர்) ஆகியோர் இடம் பெற்றோம்.

## 22ஆண்டுகளாக நெருப்பில்

காஷ்மீரின் குனான் போஷ்புரா சென்ற நாங்கள் அங்குள்ள ஆண்களையும் பெண்களையும் சந்தித்தோம். 22 ஆண்டுகளாகியும் அவர்களுக்கு ஏற்பட்ட புண்கள், வடுக்கள், காயங்கள், கதறல்கள் அடங்கவில்லை என்பது மட்டும் பட்டவர்த் தனமாகத் தெரிந்தது. அவர்களின் ஆதங்கங்களும் ஆத்திரங்களும் அடங்கவில்லை. அவர்களைப் பார்த்திடும்போது இராணுவத்தினரின் இந்த ஈனச் செயல் 22 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது போல் இல்லை. ஏதோ நேற்று நடந்ததைப்போல் அந்த மக்கள் உணர்ந்தார்கள்.

பல பெண்களால் பேசிட முடியவில்லை. அவர்களால் தேம்பித் தேம்பி அழத்தான் முடிந்தது. ஆறாத ஆற்றாமைக்கு அவர்கள் ஆட்பட்டு நின்றார்கள். அவர்களுள் ஒருத்தி, “அவர் வயதானவர். அவளுடைய வயதான தாய் அன்று கற்பழிக்கப்பட்டாள். அவள் நிரந்தரமாக ஊனப்பட்டாள். அவள் உரக்கக் கத்தினாள். இப்படி, டெல்லியில் ஒரு பெண் கற்பழிக்கப் பட்டபோது, இந்தியா முழுவதும் 15 நாள்கள் மெழுகுவர்த்தி கொளுத்தினார்கள். ஒட்டுமொத்த கிராமமும் கற்பழிக்கப்பட்டபோது, எந்தச் சலனமுமில்லை. எங்கே எங்களுக்கு நியாயம் கிடைத்தது..?”

## குற்ற உணர்வு

இளைஞர்கள் ஒரு பெரும் குற்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஏனெனில், அவர்களிடம் தங்கள் நண்பர்கள், உன் அக்கா அல்லது உன் அம்மா என்று கற்பழிக்கப்பட்டாளா? என வினவுகின்றனர். இதனால் அவமானப்பட்டு நிற்கின்றார்கள். இந்த அவமான எண்ணங்களால் அலைக்கழிக்கப் பட்டவர்களாகவே வாழ்கின்றார்கள். பெண்களில் பலர் மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் தங்கள் பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொடுக்க முடியாதோ, என்ற அச்சத்தால் அதிகமாக மனநிலை பாதிக்கப்பட்டு பிதற்றுகின்றார்கள். அவர்களின் மனங்களில் அந்த இரவின் நினைவுகள் அடிக்கடி வந்து அலைக்கழிக்கின்றது. அந்த நினைவுகள் வரும் போதெல்லாம் அலறித் துடிக்கின்றார்கள். மெல்லமெல்ல அந்த நினைவுகள் அவர்களின் வாழ்க்கையை சீரழித்துவிட்டன.

**வழக்கை மூடிட முயற்சி**

உயர் நீதிமன்றம் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என ஆணை பிறப்பித்த பின்னரும், காவல்துறை தனது போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் குப்புவாரா மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்கள். அதில் குனான் போஷ்புரா கற்பழிப்பு வழக்கை ஒட்டுமொத்தமாக மூடிட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். இஃது மே 13ம் நாள் நடந்தது. இந்த அறிக்கையிலும் அவர்கள் கற்பழித்தவர்களைக் கண்டுபிடித்திட இயலாது என்றே குறிப்பிட்டார்கள்.

**விடாமுயற்சி**

ஆனால், ஜூலை 10ம் நாள் கற்பழிப்புக்கு ஆளானவர்களில் எஞ்சியவர்கள், காவல் துறையினர் மனுவுக்கு எதிர் மனுவைத் தாக்கல் செய்தார்கள். அந்த மனுவில், "காவல்துறையினர் வேண்டுமென்றே குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். கற்பழித்தவர்கள் நான்காவது இராஜபுத்தனா ரைபிள்ஸ்-ஐச் சார்ந்தவர்கள் 125 பேர்தான் என்பதை ஆதாரப்பூர்வமாக ஆதாரங்களுடன் தெரிவித்த பின்னரும் காவல்துறையினர் அவர்களை விசாரிக்கவில்லை. இன்னார்தான் செய்தார்கள் என்பதைக் காட்டிடும் அளவில் நடத்தப்படும் அணிவகுப்பையும் நடத்திடவில்லை" என்பதைத் தெரிவித்தார்கள்.

ஜூன் 18,2013 அன்று மாவட்ட நீதிபதி ஜீலானி காவல்துறையின் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார். அத்தோடு காவல்துறையிடம், குற்றம் செய்தவர்களின் அடையாளத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து நிறுத்த ஆணையிட்டார்.

நீதி கிடைக்காமல் வாழ்வது எப்படி? ஏன் வாழ்ந்திட வேண்டும் என்கின்றார்.கிராமத்துத் தலைவர்களுள் ஒருவர்.

ஆதாரம் : The Hindu, Sunday June 30, 2013.

குறிப்பு : கஷ்மீர் மக்கள் வன்முறையிலேயே நாட்டம் உள்ளவர்கள். அவர்கள் ஆயுதந்தாங்கியே போராடிப் பழக்கப்பட்டவர்கள் என்றெல்லாம் ஒரு பிரமையை நாட்டு மக்களின் மனங்களி ளெல்லாம் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள். அரசாங்கத்தை பரிபாலனம் செய்வோர்.


இங்கே அனைத்தையும் இழந்த மக்கள் ஒரு சிறு கல்லைக் கூட எடுத்து எறிந்திடவில்லை. மாறாக, மன போட்டே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.


வேர்கள்
பதிப்பகம்

## கஷ்மீரின் பாதி விதவைகள்

## பிப்ரவரி 23, 1991

டெல்லியில் ஒரு பெண்
கற்பழிக்கப்பட்டபோது,
இந்தியா முழுவதும் 15
நாள்கள் மெழுகுவர்த்தியைக்
கொளுத்தினார்கள். ஆனால்
ஒட்டுமொத்த கிராமமும்
கற்பழிக்கப்பட்ட போது எதுவுமில்லை.
எங்கே நமக்கு நியாயம் கிடைத்தது?




**தொகுப்பு: மு.குலாம் முஹம்மது**

**விலை: 70/-**

கொரியர் கட்டணம் தனி
140 Pages

For Order: 8148129887
8072773868



# கஷ்மீர்

## சித்ரவதைகளின் கொடூரங்கள்

“எனக்கு வலி உயிர் போகிறது. இந்த வலி குறைய வேண்டும்“ என்று கூறிவிட்டு “என் வலது கண்ணால் நான் பார்க்க முடியுமா? என்று உமர் தந்தையைப் பார்த்து கேட்கிறான்.”

காஷ்மீரைப் பொருத்தவரை இங்கு நடக்கும் சித்திரவதைகளை பற்றிதான் அதிகம் பேசப்படாமல் உள்ளது. நீங்கள் இங்குள்ள கிராமங்களுக்கு செல்வீர்களானால் ஒவ்வொரு கிராமத்திலும் சித்திரவதை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இருக்கிறார்கள். ஆண்களை மட்டும் இராணுவம் வதை செய்யவில்லை. பெண்கள், குழந்தைகள் வயதானவர்கள் அனைவரும் சித்திரவதைக்கு ஆளாக்கி உள்ளனர்.

### 1500பேர் ஆண்மையற்றவர்களாக ஆக்கப்பட்டனர்

1500 பேர் தங்கள் பிறப்பு உறுப்புகளில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதனால் ஆண்மையற்று போய் இருப்பதை பர்வேஸ் என்ற மனித உரிமை ஆர்வலர் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்.

### ஆண்களுக்கும் வன்புணர்ச்சி

இராணுவத்தினரால் வன்புணர்ச்சி செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை அவர் விவரிக்கிறார். இப்படிப்பட்ட ஒரு வழக்கில் இராணுவத்தின் இத்தகைய வரம்பு மீறிய செயல் ஒளிப்பதிவு செய்யப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னரும் இதுவரை எந்த நடவடிக்கையும் அவர்கள் மீது இல்லை என்றும் குறிப்பிடுகிறார்.

### தன் மாமிசமே தனக்கு உணவு

பர்வேஸ் தான் ஆவணப்படுத்தியதிலேயே மிக மோசமான சித்திரவதை ஒன்றைப்பற்றிக் கூறுகிறார். "நான் மிகக் கொடூரமான சித்திரவதை வழக்குகளை ஆவணப்படுத்தி உள்ளேன். ஆனால் இது சித்திரவதையின் உச்சம். 60வயது முதியவர் ஒருவரை இராணுவம் தனிமைச்சிறையில் அடைத்து வைத்தது. இந்த கால கட்டத்தில் அந்த முதியவருக்கு சாப்பிட எதுவும் கொடுக்கப் படவில்லை. ஒற்றைத்தவிர. அவருடைய உடலின் சதை மட்டுமே அவருக்கு உணவாக கொடுக்கப் பட்டது. அவர்கள் அவர் உடலிலிருந்து சதையை அறுத்து எடுத்து அவருக்கு உணவாக வழங்கினார்கள். இது மட்டுமே ஒரு மாத காலமாக அவருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி என்னை உலுக்கிவிட்டது. கஷ்மீரில் நூற்றுக்கணக்கான குவாண்டனாமோ சிறைகள் உள்ளன. ஏன் அதைப் பற்றி யாரும் பேசுவதில்லை?

### கஷ்மீரில் 5 சதவீத மக்கள் அழிக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டுவிட்டனர்

பெல்லெட் குண்டுகளால் ஒரு முறைப்படுத்தப் பட்ட இனப்படுகொலை கஷ்மீரில் நடத்தப்பட்டு வருகிறது. கஷ்மிர் ரீடர் என்ற இதழ் கஷ்மீரில் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களையும் படுகொலைகளையும் இவ்வாறு தான் வர்ணிக்கிறது. இந்தியாவில் இஸ்ரேலில் நடப்பது போன்ற "முறைப்படுத்தப்பட்ட இனப்படு கொலையையும்" "எல்லா காஷ்மீரிகளையும் ஊனப்ப்படுத்துதல்" என்பதையும் செயல்முறையில் ஏற்றுக்கொண்டுள்ளதை கஷ்மிர் ரீடர் இதழ் படம் பிடித்து காட்டுகிறது.

கஷ்மீரின் மொத்த மக்கள்தொகை 71,98,114 (2011ன் கணக்கெடுப்பின் படி) ஜம்மு-கஷ்மீர் மொத்தம் சேர்த்து 1,25,48925. அதாவது கஷ்மீரில் 72 இலட்சம் ஜம்முவில் 53.5 இலட்சம்.

கடந்த 21ஆண்டுகளில் கஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத் தட்ட ஒரு லட்சம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். 60ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். (இவர்கள் இராணுவத்தால் அழைத்துச் செல்லப் பட்டவர்கள் அவர்களின் நிலை என்னவென்று வெளியிடப்படவில்லை. ஆனால் அவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். (படிக்க வேர்கள் பதிப்பகத்தின் - கஷ்மீரின் பாதி விதவைகள்)

இது கிட்டத்தட்ட 2.2 சதவீதம் அதாவது காஷ்மீர் மக்கள் தொகையில் 2.2 சதவீதம் பேர் கொல்லப் பட்டு விட்டனர். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேருக்கு மேலாக ஏதாவது ஒரு வகையில் ஊனப்படுத்தப்பட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட 2.8 சதவீதம். காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 5 சதவீதம் பேர் கொல்லப்பட்டு விட்டனர். இனி மீதமுள்ளவர்களை முறையாக கொல்லவும் ஊனப்படுத்தவும் இந்திய அரசு முயன்று வருகிறது.

தடை செய்யப்பட்ட இந்த குண்டுகள் கஷ்மீரில் சகட்டுமேனிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள், வீட்டில் இருக்கும் பெண்கள், முதியவர்கள் என பாரபட்சம் பாராமல் இந்த குண்டுகளுக்கு குறியாகியுள்ளனர்.

இந்த குண்டு வெடித்தவுடன் இதிலிருந்து வெளிப்படும் குண்டு சற்று தூரம் சென்று 600 குண்டுகளாக சிதறி எதிரிகளின் மேல் பாயும். இதனை பயன்படுத்தும் போது 500 மீட்டர் தொலைவிலிருந்து முழங்காலுக்குக் கீழே சுட வேண்டும். இல்லையெனில் இது உயிரைக்கூட பறித்து விடும். கஷ்மீரில் இந்த குண்டுகள் வெகு அருகாமையில் வைத்து சுடப்பட்டுள்ளன. அதுவும் காயங்கள் அனைத்தும் முகங்களிலும், முதுகுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவ மேஜர் ஒருவரிடம் NDTV இவ்வாறு கேள்வி எழுப்பியது. "ஏன் உங்கள் இராணுவத்தினர் பொது மக்களின் மீது முழங்காலுக்கு மேலே சுட்டனர்? ஏன் முகங்களில் காயம் ஏற்படுத்தினர்?"



இரண்டே நாளில் 100 பேர் குருடாகும் அளவிற்கு ஏன் இந்த கொடூரத் தாக்குதல்?"

இதற்கு அந்த மேஜர், "எங்கள் ராணுவத்தினர் முழங்காலுக்கு கீழே தான் சுட்டனர். ஆனால் பொதுமக்கள் இராணுவத்தினரை தாக்க கற்களை எடுக்க கீழே குனிந்ததினால் முகத்தில் காயம்பட்டது" என பதிலளித்தார்.

அதற்கு பர்காதக் என்ற ஊடக நெறியாளர் "ஆயிரம் பேருக்கு மேல் முகத்தில் காயம் பட்டுள்ளது. ஆயிரம் பேரும் நீங்கள் முழங்காலில் சுடும் போது வேண்டுமென்றே முகத்தை காட்டினரா? 500 மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்து சுட வேண்டியவர்கள் 50 மீட்டருக்கு குறைவான இடைவெளியில் இருந்து சுடப்பட்டது ஏன்?" என பதில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் ஒன்றும் தர இயலவில்லை அந்த மேஜரால்.

இந்த பெல்லெட் குண்டுகளால் ஏற்படும் பாதிப்பு இன்னொன்று. இவை உங்கள் உடலில் நிரந்தர வடுக்களை ஏற்படுத்திவிடும். இதன் காரணமாக நீங்கள் குணம் அடைந்த பின்னும் உங்களை கலவரத்தில் ஈடுபட்டவர் என அடையாளப்படுத்தி பின்னர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் அல்லவா?

**5 வயது சிறுவனின் கண்களில் ஊசி ஏற்றி குருடாக்கிய CRPF**

அழகான சிறுவன் நசீர். ஸ்ரீமகாராஜா ஹரிசிங் மருத்துவமனையின் (SMHS) 26ம் எண் படுக்கையில் கிடத்தப்பட்டான்.

அவன் படுக்கையில் இருந்து விழிக்கும் போதெல்லாம் பீதி வயப்பட்டு கத்துகிறான். "ஆர்மிஹா ஆயி, ஆர்மிஹா ஆயி யிம்ஹா லாயன்மியா" (இராணுவம் வந்துவிட்டது, இராணுவம் வந்துவிட்டது, என்னை அடிக்க இராணுவம் வந்துவிட்டது) என்று கத்துகிறான் எனக்கூறி கதறி அழுகிறார் நசீரின் தந்தை முஹம்மது அல்தாஃப். இவர்கள் கோகெர்நாக் என்னும் இடத்தில் வசிப்பவர்கள்.

நசீர் அஹமதுவிற்கு ஐந்து வயது. அவன் தன் தந்தையுடன் அனந்தநாக் (Anantnag) என்னுமிடத்திற்கு சென்று குழந்தையின் கண்களில் ஏற்பட்டிருந்த தொற்றிற்கும் தன்னுடைய பாட்டிக்கும் மருந்து வாங்கி விட்டு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஷெர்போரா என்னுமிடத்தை அடைந்தனர். அங்கே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அல்தாஃப் தன் தாயாரை பாதுகாக்க நினைத்தார். தன் தாயார், மகன் இருவரையும் ஒரே நேரத்தில் அந்த சந்தர்ப்பத்தில் கூட்டிசெல்வது கடினம் என்று நினைத்தார். அவர் தன் மகன் நசீரை அருகிலுள்ள ஒரு சந்தை (தெருவை) காட்டி அங்கேயே அமர்ந்து கொள்ளும் படி பணித்தார். தான் திரும்பி வரும்வரை அங்கேயே உட்கார்ந்து கொண்டு இரு என்று கூறிவிட்டு சென்றார். தன் தாயாரை பாதுகாப்பாக கொண்டு சென்று விட்டுவிட்டு மீண்டும் நசீரிடம் திரும்பினார்.

"அந்த சூழலில் நான் என் தாயாருடன் சென்று கொண்டிருந்தபோது நசீரும் வந்தால் அவன் காயப்பட்டு விடக்கூடும் என பயந்தேன்" என்கிறார் அல்தாப்.

திரும்பி வந்து பார்த்தபோது அவரால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத கொடுமை அவர் மகனுக்கு நிகழ்ந்து விட்டிருந்தது. நசீர் தரையில் வீழ்ந்து கிடந்தான். தன் கண்களைத் தேய்த்த படி அழுது கொண்டிருந்தான். நசீரால் அவனது வலியை தாங்க முடியாமல் மண்ணைக் கடித்து துப்பிக் கொண்டிருந்தான். அவனது கண்கள் எரிந்து கொண்டிருக்கும் தனலைப் போல சிகப்பாக இருந்தன. கண்ணை சுற்றி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அல்தாஃப் உடனடியாக அருகிலிருந்த இஸ்லாமாபாத் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த மருத்துவர்கள் ஆலோசனையின்படி பின்னர் SMHS மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்டான். இங்கே வந்த பின் தான் அவன் மருத்துவர்களிடம் உண்மையைக் கூறினான்.

CRPF-ஐ சேர்ந்த ஒருவன் முதலில் நசீரின்

கண்ணில் மண்ணை கொட்டியுள்ளான். பின்னர் ஊசியை அந்த குழந்தையின் கண்ணில் குத்தியுள்ளான். அதன் பின்னர் அறைந்துள்ளான். நசீரின் முகமெங்கும் அறை விழுந்த அடையாளங்கள் காணப்பட்டன.

அல்தாஃப் - நசீரின் தந்தைக்கு 28 வயதாகிறது. அவருக்கு மூன்று குழந்தைகள். அல்தாஃபின் கவலையெல்லாம் இந்த விஷயங்களை பற்றி எதுவும் தெரியாத தன் மனைவியிடம் எப்படி இதைச் சொல்ல போகிறோம் என்பது தான். தன் கிராமத்தை விட்டு செல்லும்போது நன்றாக இருந்த சிறுவன் தற்போது கண்ணை இழந்து விட்டான். மருத்துவர்கள் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்து விட்டனர். ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை.

நசீரின் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் 34 வயது ஷமீமா இருக்கிறார். அவர் தன் சகோதரன் உடலில் ஏற்பட்டுள்ள பெல்லட் குண்டு காயத்திற்கு மருத்துவம் பார்க்க வந்துள்ளார். அவரால் நசீருக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு தனக்கும் நசீரைப் போன்றே ஒரு குழந்தை உள்ளதாகவும் 5வயது குழந்தைகள் கூட அரசுப்படைகளால் தாக்கப்படுவது நம்பவே முடியாததாக உள்ளது எனவும் கூறுகிறார்.

“இது ஓர் இனப்படுகொலை, எங்கள் இனத்தையே அழிப்பதற்கான முயற்சி. அவர்கள் எங்கள் குழந்தைகளை இலக்காக கொண்டுள்ளார்கள்”. எனக் கூறுகிறார்.

அருகில் உள்ள இன்னொருவர், “இவர்கள் தெளிவாக இஸ்ரேலின் கொள்கைகளை கைக் கொண்டுள்ளார்கள். இதைத்தான் இஸ்ரேல் காசாவில் செய்கிறது. குழந்தைகளை கொல்வதன் மூலம் அந்த இனத்தையே கருவறுக்க நினைக்கிறது” என கொந்தளிக்கிறார்.

“உங்கள் கண்களின் கருவிழி காயப்படுத்தப் படும்போது நீங்கள் எப்படி தாங்கிக்கொள்ள இயலும். எனினும் இந்த மருத்துவமனையில் பலர் எனக்கு தைரியம் சொல்கின்றனர். இந்த வயது குழந்தைகளை இந்த உலகில் இவர்களைத் தவிர யார் தான் காயப்படுத்துவார் சொல்லுங்கள்”. என கதறி அழுதுக் கொண்டே கேள்வி எழுப்புகிறார் அல்தாஃப்.

### 5வயது ஜொஹ்ரா மஜீத்

5 வயது குழந்தை ஜொஹ்ரா மஜித், தன் கால்களிலும் வயிற்றிலும் பெல்லெட் குண்டுகளை ஏந்திக் கொண்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் கிடத்தப்பட்டாள். ஜூலை 1ம் தேதி ஞாயிற்றுகிழமை இரவு CRPF அவள் மீதும், அவள் குடும்பத்தார் மீதும் இந்த குண்டு மழையை பொழிந்து விட்டு சென்று விட்டனர் என அவள் குடும்பத்தார் கூறுகின்றார்கள்.



“இரவு 11.30 மணியளவில் காமார்வாரி என்ற இடத்தில் (Qamarwari) உள்ள எங்கள் வீட்டிற்கே இந்த சம்பவம் நடந்தது”. என்று ஜொஹ்ராவின் இளைய சகோதரி சோபியாவாணி ஜொஹ்ராவின் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் படுத்துக் கொண்டு கூறுகிறாள். சோபியாவுக்கும் இடது காலில் பெல்லெட் குண்டுகள் பாய்ந்துள்ளன.

“நாங்கள் எங்கள் சகோதரியை அவளுக்கு ஏற்பட்ட அலர்ஜிக்காக மருத்துவமனைக்கு ஒரு காரில் அழைத்து சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்கிருந்தோ வந்த காவலர்கள் எங்கள் மீது சுட்டனர். நாங்கள் கதறி அழுதுக் கொண்டிருந்த போது அங்கிருந்து சில அண்டை வீட்டுக்காரர்கள் அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஓர் ஆம்புலன்ஸை நிறுத்தி எங்களை ஏற்றி வந்து SMHS மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். எனது தந்தைக்கு கடுமையான காயம் ஏற்பட்டதால் அவரை SKIMS மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்” என்று சோபியா கூறுகிறாள்.

ஜொஹ்ராவை அவளுடைய அத்தை கவனித்து கொள்கிறார். “ஜொஹ்ரா தன்னிடம் உள்ள தின்பண்டங்களை அடுத்த படுக்கைகளில் உள்ளவர்களுக்கு கொடுத்து விடுவாள். ஆனால் அவள் கையில் உள்ள பாட்டிலை மட்டும் யாரும் தொட்டு விடக்கூடாது (அதில் குளிர்பானம் உள்ளது)” என கூறிக்கொண்டே அழுகிறார் அவளின் அத்தை.



"அந்த சிறுவனை பாருங்கள் அவன் தொடையில் துப்பாக்கி குண்டு புதைந்துள்ளது" என பாசித் ஏஜாஸ் என்ற சோபியானை சேர்ந்த 14 வயது சிறுவனை காட்டி கதறுகிறார்.

8வயது ஆசிப் ரஷீதும், 13 வயது மீர் அராஃபத்தும் பெல்லெட் குண்டுகளால் காயப்பட்டவர்களே. ஆனந்தநாக் பகுதியை சேர்ந்தவர்கள். நூற்றுக் கணக்கான குண்டுகள் அராஃபத்தின் உடலையும், முகத்தையும் அடிவயிற்றையும் துளைத்து உள்ளே சென்று விட்டன.

"அப்பா தயவு செய்து ஏதாவது செய்யுங்கள், வலியால் எனக்கு உயிர் போகிறது" என கதறுகிறான் அராஃபத். அராஃபத்தின் இருதயத்திற்குள்ளும், வயிற்றுக்குள்ளும், குடலுக்குள்ளும், அவனுடைய முதுகுத்தண்டுவடத்தை சில குண்டுகள் துளைத் திருப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர். அவன் உயிர் பிழைப்பான் என உறுதியாக கூற இயலாது எனக் கூறிவிட்டனர்.

சோபியான் மாவட்டத்தை சேர்ந்த இன்ஷா மாலிக் என்ற 14 வயது சிறுமி பெல்லெட் குண்டுகளால் பாதிக்கப்பட்டு இரு கண்களையும் இழந்து விட்டாள். அவளுக்கு இந்த சம்பவம் ஜூலை 12ம் தேதி நடந்தது. அவள் உடலை 100க்கும் மேற்பட்ட குண்டுகள் தாக்கின. அப்போது அவள் தன் வீட்டிற்குள் இருந்தாள்.

### இன்ஷா மாலிக்

ஒன்பதாம் வகுப்பு மாணவி இன்ஷா மாலிக். அவளுக்கு 14 வயது. சோபியான் மாவட்டத்தை சேர்ந்தவள். வகுப்பிலேயே முதல் மாணவி. படிப்பில் மட்டுமல்ல மற்ற அறிவுத்திறன் போட்டிகளிலும் முதலாக வருபவள். இன்று முகமெங்கும் பெல்லெட் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டு நினைவிழந்து படுத்த படுக்கையாக SMHS மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள்.

கஷ்மீரிகள் மேல் வெறுப்புடன் சி.ஆர்.பி.எஃப் விதைத்த குண்டுகள் அவள் முகமெங்கும் புதைந்து கிடக்கின்றன. இன்ஷா மாலிக் எந்த போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அவளுடைய தெருவிலும் அன்றைய தினம் எந்த போராட்டமும் நடைபெறவில்லை. அவர்களுடைய அண்டை கிராமங்களில் கூட எந்த போராட்டமும் நடைபெறவில்லை. அவள் எப்பொழுதும் போல் தன் வீட்டில் அமர்ந்து படித்து விட்டு இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த பாதுகாப்புப் படையினர் அவள் வீட்டிற்குள் பெல்லெட் குண்டுகளை ஏவினர். வீட்டிற்குள் விழுந்து வெடித்து சிதறிய அந்த பெல்லெட் குண்டு இன்ஷா மாலிக்கின் முகமெங்கும் பதிந்தது. அப்படியே அங்கேயே கதறிக்கொண்டு கீழே விழுந்து நினைவை இழந்தாள் இன்ஷா மாலிக். சில நொடிகளில் அவள் முகம் ஊதிய பலூனைப் போன்று வீங்கி விட்டது. அவள் உயிர் பிழைத்தாலும் இனி அவள் பார்ப்பது கடினம். அவளுக்கு பார்வை திரும்பாது. இனி அவளுக்கு இருட்டுதான் வாழ்க்கை.

### தமனா ஆஷிக்

துல்முல்லா கந்தர்பால் என்னும் இடத்தைச் சேர்ந்த 10 வயது மாணவி தமனா ஆஷிக். பெல்லட் குண்டுகளால் துளைக்கப்பட்டு தன்னுடைய இடது கண்ணை முழுமையாக இழந்துவிட்டாள். சம்பவம் நடந்தபோது வெளியே போராட்டம் நடந்து கொண்டிருந்தது. தமனா அப்போது, தன் வீட்டு சமையல் அறையில் நின்று கொண்டிருந்தாள். சி.ஆர்.பி.எஃப் சுட்ட குண்டுகள் வீட்டின் சமயல் அறைக்குள் விழுந்து வெடித்து அவள் கண்களில் பாய்ந்தன. அவள் SMHS மருத்துவமனையில் எட்டாம் எண் படுக்கையில் கிடத்தப்பட்டாள். அவளுடைய கண்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு விட்டதால் (Retinal Detachment) அவளுக்கு பார்வை திரும்ப கிடைக்க வாய்ப்பில்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

**உமர் நசீர்**

உமர் நசீரின் குடலில் பாய்ந்துள்ள பெல்லெட் குண்டுகளை நீக்க தற்போது அறுவை சிகிச்சை நடைபெற்று வருகிறது. "அப்போது எங்கள் வீட்டிற்கருகிலோ, எங்கள் பகுதியிலோ எந்த போராட்டமும் நடைபெறவில்லை. ஆனாலும் இது எவ்வாறு நடந்தது என்று தெரியவில்லை" எனக் கூறுகிறார் உமரின் தந்தை நசீர் அஹ்மத். எந்த விதமான போராட்டத்திலும் ஈடுபடாதவர்களை, அவர்களின் வீடுகளை நோக்கி பெல்லெட் குண்டுகளால் சுட்டு மகிழ்ந்து திளைத்திருக்கின்றனர் பாதுகாப்பு படையினர்.

உமரின் இரண்டு கண்களும் பெல்லெட் குண்டுகளால் துளைக்கப்பட்டுள்ளன. அவனுடைய முகத்தை, மண்டையோட்டை துளைத்துக் கொண்டு பல குண்டுகள் பாய்ந்துள்ளன. "அவனுடைய வலது கண்ணை சரிசெய்ய இயலாது. அவன் தன் பார்வையை மெல்ல இழந்து வருகிறான். அவனுடைய பார்வை நரம்புகள் (Injury in the optic nerve) பாதிக்கப் பட்டுள்ளன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

"எனக்கு வலி உயிர் போகிறது. இந்த வலி குறைய வேண்டும்" என்று கூறிவிட்டு "என் வலது கண்ணால் நான் பார்க்க முடியுமா? என்று உமர் தந்தையைப் பார்த்து கேட்கிறான். மகனை வெறுமையாக பார்த்துவிட்டு தந்தை கூறுகிறார், "பாருங்கள் என் மகனை என்ன செய்திருக்கிறார்கள்" என்ற அந்த வெற்றுப்பார்வை ஆயிரம் அர்த்தங்கள் கொண்டது.

**ஜுனைத் அஹ்மத்**

ஜுனைத் 11 வயது மாணவன். இவனுக்கு இடுப்பு பகுதியில் ஏற்பட்டுள்ள பெல்லெட் குண்டு காயம் காரணமாக அவனுடைய பிறப்புறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை சரி செய்ய இயலாது என மருத்துவர்கள் கைவிரித்துவிட்டனர். ஜுனைத்துடன் சேர்த்து 6 சிறுவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் நடந்த போது ஜுனைத்தும் அவனுடைய நண்பர்களும் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனர் என அவரின் உறவினர்கள் கூறுகின்றனர். தற்போது ஜுனைத் யாருடனும் பேசுவதில்லை. விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை வெற்றிகரமாக முடக்கிப் போட்டு விட்டனர் பாதுகாப்புப்படையினர்.

**உமர் காலித்**

"யா அல்லாஹ் என் மகனை குணமாக்கு" இதுதான் உமர் காலித்-ன் தாயின் பிரார்த்தனை. இவன் குல்காம் என்னும் இடத்தை சேர்ந்த 11 வயது மாணவன். இவனுக்கு இரண்டு கண்களிலும் குண்டுகள் பாய்ந்துள்ளன. இவனுடன் சேர்த்து இந்த இடத்தை சேர்ந்த 110 பொது மக்கள் பெல்லெட் குண்டுகளால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏழாம் எட்டாம் வார்டுகள் முழுமையாக பெல்லெட் குண்டுகளால் பாதிக்கப்பட்டவர்களால் நிரம்பியுள்ளது. இதுவரை 70 கண் அறுவை சிகிச்சைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

**80 வயது பெண்ணை படுகொலை செய்த பாதுகாப்பு படையினர்**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குப் பின்னர் 80 வயது ஹாஜிரா பேகம் என்பவர் இறந்துபோனார். அவருடைய மகன் சதாதுத்தின் தர், கம்பளம் நெய்பவர்.

"எங்கள் பகுதியில் களேபரம் நடந்து கொண்டிருந்தது. நாங்கள் பாதுகாப்புப் படையினருக்கு பயந்து இந்த முஹல்லாவை (பகுதியை) விட்டு வெளியேறிவிட்டோம். என் தாயார் வயதானவர். அவரால் வெளியே வரமுடியவில்லை. வீட்டிலேயே தங்கி விட்டார். 80 வயது பெண்ணை பாதுகாப்புப்படையினர் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று நம்பினோம். ஆனால் அந்த நம்பிக்கை வீணாகிவிட்டது."

என்ன நடந்தது என்பதை என் தாயார் அடுத்த நாள் பத்திரிகையாளர்களிடம் கூறியதை சாததுதீன் கூறினார்.

"இராணுவம் என்னுடைய வீட்டை அடைந்தது. சன்னல் கதவுகளை உடைத்து கீழே அமர்ந்து கொண்டிருந்த என் தாயாரின் மீது கண்ணாடி துண்டுகள் சிதறி விழுந்தன. என் தாயார் அதிர்ச்சியில் உறைந்தார். உள்ளே நுழைந்த ராணுவத்தினர் அதன் பின்னரும் என் தாயாரை சும்மாவிடவில்லை. அவர் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டுள்ளார். அதன் பின்னர் அதிர்ச்சியில் பேசாமல் ஆகிவிட்ட தாயாரை தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடியுள்ளனர். அதன் பின்னர் அவர் தாயார் யாரிடமும் பேசவில்லை. அந்த அதிர்ச்சி அவரை கடுமையாக தாக்கிவிட்டிருந்தது. ஆனால் இராணுவம் மீண்டும் நம் வீட்டிற்கு வந்து விடும் என்று மட்டும் கூறிக் கொண்டிருந்தார். அப்படியே தன் உயிரையும் விட்டுவிட்டார்" என்று கூறி கதறி அழுகிறார் தர்.

இப்படி எண்ணற்ற குழந்தைகளின் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்கள் படிப்பவர்கள் நெஞ்சங்களை ரத்தம் வடியச் செய்யும். சுருக்கம் கருதி ஒரு சில சம்பவங்களோடு நிறுத்திக் கொள்கிறோம்.

அபூ அப்ராஹ்

# கஷ்மீரின் தற்போதைய நிலை

கஷ்மீரில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது, என்பதை நமது “அக்கறையுள்ள குடிமக்களின் குழுமம்” CONCERNED CITIZENS GROUP (CCG)அடிக்கடி ஆய்வு செய்கின்றது. அந்த ஆய்வை வெளியிடுகின்றது.

இந்த அமைப்பு அண்மையில் கஷ்மீர் பற்றிய கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டது,

அதில் கஷ்மீரில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது, என்பதை தெளிவுபடுத்தியது இப்படி. (FRONT LINE, Aug 2021)

**நிருவாகம்:**

**ஆகஸ்ட் 5 ,2019 க்குப் பின்**

1 இவர்கள் மோடியும், அமித்ஷாவும் கவர்னரின் கீழ் சில அதிகாரிகளையும் நியமித்துத்தான் கஷ்மீரின் நிருவாகத்தை நடத்து கின்றார்கள். இந்த அதிகாரிகள் கொடுங் கோலர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். இயன்றமட்டும் சம்பாதித்திட வேண்டும் என்பதே இவர்களின் இலட்சியம்,

இதனால் எங்கு பார்த்தாலும் லஞ்சம், அதனால் மக்களிடையே விரக்தியே நிலவுகின்றது. வேண்டாத மக்களிடம் கொள்ளாத கொள்ளையை அடி என்பதே அதிகாரிகளின் போக்காக இருக்கின்றது.

2 இந்த அதிகாரிகள்,என்ன செய்தாலும் தட்டிக் கேட்பாரில்லை, இந்த அதிகாரிகள் தங்கள் செயல்களுக்கு மக்களிடம் பதில் சொல்லிட வேண்டியதில்லை, அதேபோல் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அவைகளுக்கும் பதில் சொல்லிட வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கே பதில் சொல்லிட வேண்டியவர்கள். அந்த அதிகாரிகளோ இந்தக் கொள்ளையின் பங்காளிகள். ஆக கூட்டுக்கொள்ளை அங்கே நடந்து கொண்டிருக்கின்றது.

3 இந்த அறிக்கையின் அதாவது அக்கறையுள்ள குடிமக்களின் குழுமத்தின் அறிக்கையின் முக்கியமான அறிவிப்புகளுள் ஒன்று மக்கள் - கஷ்மீர் மக்கள், இன்றைக்கு கஷ்மீரில் இருக்கின்ற அரசியல்வாதிகளை அறவே நம்பிடவில்லை.

மக்கள் இன்றைய அரசியல்வாதிகளிடம் நம்பிக்கை இழந்திருப்பது, மிகப்பெரிய திருப்பங்களை கஷ்மீரில் ஏற்படுத்திடும் என ஆய்வாளர்கள் கணிக்கின்றார்கள்

வைகறை வெளிச்சம் வாசகர்களைப் பொறுத்தவரை, நாம் அவர்களுக்கு பல அரிய





கொலை செய்து, காணாமலாக்கினார்கள். (விரிவான தகவல்களுக்கு படியுங்கள் - கஷ்மீரின் பாதி விதவைகள்)

அங்கிங்கெனாதபடி கஷ்மீர் எங்கும் ரகசிய கூட்டுப் புதைகுழிகள், ஆற்றில் தோண்டத் தோண்ட இளம் முஸ்லிம்களின் பிணங்கள். இதற்கு நீதி கேட்ட ஒரே அமைப்பு, "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களின் குழுமம்" தான்.

பாதுகாப்பு படையினரே குழந்தைகள் முதல் வயதான பெண்கள் வரை, எந்தப் பெண்களையும் விட்டு வைத்திடாமல் கற்பழித்தார்கள். *1991*ல் நடந்த குனான் போஸ்புரா என்ற இரண்டு கிராமங்களின் கூட்டு கற்பழிப்புகள் இதற்கு சாட்சி. இந்த கிராமங்களில் வாழ்ந்த அத்தனை பெண்களும் கற்பழிக்கப்பட்டார்கள். (பார்க்க தனி கட்டுரை)

இந்தக் குற்றங்களுக்கும் மாபாதகச் செயல்களுக்கும் காரணமாய் அமைந்த ஆயுதந்தாங்கிய படைகளின் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. காரணம் இந்த "அப்சா" என்ற ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் அங்கே செயலிலிருப்பது தான்.

காஷ்மீரின் அரசியல் கட்சிகள் தேர்தலில் நிற்கும்போதும், இந்த அப்சாவை மாற்றுவோம் என்றே வாக்களித்தன. ஆட்சியைப் பிடித்ததும், வாய்மூடி மௌனியாய் ஆகிவிடுகின்றன. இதில் கஷ்மீரில் கடைசி முதல்வராக இருந்த மெஹ்பூபா முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சி அள்ளிக்கொட்டிய ஆசை வார்த்தைகளுக்கும் அளவில்லை, செய்த துரோகங்களும் அளவில்லை.

தகவல்களைத் தந்து கொண்டேதான் இருக்கின்றோம். அதில் இந்த அரசியல்வாதிகள் பதவி வெறியில் அந்த மக்களுக்குச் செய்த துரோகங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி இருந்தோம்.

தொடர்ந்து அந்த மக்களுக்குத் துரோகத்தைச் செய்துதான் பதவிகளைப் பிடித்தார்கள். இதனால் ஒன்றிய அரசுகள் காங்கிரஸ், பா.ஜ.க செய்த கொலைகளையும் காணாமலாக்கப் பட்டவர்களையும் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை.

"அப்சா"என்ற ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் என்றச் சட்டந்தான் அங்கே அத்தனை அநியாயத்தையும் படைகள் நிகழ்த்திட காரணமாக அமைந்தது.

ஆயுதந்தாங்கிய படைகள் அங்கே செய்யாத சித்திரவதைகள் எதுவுமில்லை. அவர்கள் எழுபதாயிரம் *(70,000)* முஸ்லிம் இளைஞர்களைக்

இறுதியில் சிறையில் அதிக நாட்கள் இருந்ததும் இந்த மக்கள் துரோகிதான்.

இப்போது அவர்கள் நம்புகின்றவர்களே அவர்களை கொட்டடிகளில் அடைத்து அழகு பார்க்கின்றார்கள். அதனால் கஷ்மீர் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்ததில் ஆச்சரியம் அதிகமில்லை.

- இந்த நிலைதான் இனி தொடரும் என்பதே ஆய்வாளர்களின் (CCG) கருத்து.

### மாநிலம் ஒன்றிய அரசின் ஒட்டுப் பகுதி

கஷ்மீரை ஒன்றியப் பகுதியாக (UNION TERRITORY) அறிவித்தபின் ஓர் கண்துடைப்பு நாடகத்தை நடத்தினார்கள், அதாவது அங்கே நிருவாகம் என்ற போர்வையில் அடாவடித்தனங்களை அவிழ்த்து விடுபவர்கள் அங்கிருக்கின்ற துணை ஆளுநர் மனோஜ் சிங்கின் ஆலோசகர் பஷீர்கான் என்பவரை விட்டு மக்கள் குறைகேட்கும் நாள் ஒன்றை அறிவித்தார்கள். கஷ்மீர் மக்கள் இதை நம்பி அவரை அந்த நாளில் சந்தித்தார்கள்.

இந்த சந்திப்பின்போது சமூக ஆர்வலர் "சாஜாத் ரஷீத் சோபி" என்பவர் ஒரு குறையை முன்வைத்தார். அது காஷ்மீரில் இப்போது நிருவாகத்தில் நியமிக்கப்பட்டுள்ளவர்கள் எல்லோரும் கஷ்மீருக்கு வெளியே உள்ளவர்கள், அவர்களுக்கு கஷ்மீரைப் பற்றி எதுவுமே தெரியவில்லை, அதனால் அவர்களால் மக்களின் குறைகளைப் புரிந்து கொள்ளவே இயலவில்லை, இந்த நிலையை மாற்றிட வேண்டும் என்றார்.

உடனேயே, அவர் மீது வழக்கொன்றை பதிவு செய்தார்கள். மக்களுக்கிடையே பகைமையை வளர்க்கின்றார் என்ற பிரிவின் கீழ்! இப்படி மக்களின் குறையைத் தீர்க்கின்றார்கள்.

### 5. வியாபாரிகள்

அக்கறையுள்ள குடிமக்களின் குழுமம் கஷ்மீரிலுள்ள வியாபாரிகளையும் சந்தித்தது. அவர்கள் கஷ்மீரிகளின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ந்து வருகின்றது. இன்று பதவியேற்றிருக்கும் ஒன்றிய அரசு, பதவியேற்ற நாளிலிருந்து கஷ்மீரில் பல்வேறு கெடுபிடிகளையும் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றது. இதனால் தொடர்ந்து கடை அடைப்புகள் நடந்து கொண்டே இருந்தன. இதனால் வியாபாரம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது.

இன்றைய ஒன்றிய அரசு அடிக்கடி முஸ்லிம் இளைஞர்களை போலி எதிர்தாக்குதல் என்ற பெயரில் கொலை செய்துவிடுகின்றார்கள். சாவு ஊர்வலங்கள் - அதில் பாதுகாப்பு படையினரின் கெடுபிடிகள், கடை அடைப்புகள் - இதனால் வர்த்தக முடக்கம். இந்த சாவு ஊர்வலங்களில், தவறாமல் ஒரு துப்பாக்கிச் சூடு அல்லது இரண்டு துப்பாக்கிச்சூடு என பாதுகாப்புப் படையினர் நடத்தி வருகின்றார்கள். மிக அரிதாகவே இந்தப் பொது விதிக்கு விதிவிலக்கு. இதனால் தொடர் கடை அடைப்புகள். இப்படி வர்த்தக முடக்கம் எல்லா வியாபாரிகளையும் பிச்சைக்காரர்களாக்கி விடுகின்றது.

ஆகஸ்ட் 5, 2019க்குப்பின் கஷ்மீரில் எல்லா வளமும் நன்றாய் கொட்டும் என அறிவித்தார்கள். எல்லாவிதமான கெடுபிடிகளும். ஆயுதம் ஏந்தியவர்களே வீதியெங்கும் நிரப்பமாய் நிறைந்து நின்றார்கள். ஏனெனில் ஆகஸ்ட் 5, 2019க்கு முன்னரே ஒன்றிய அரசு பட்டாளத்தால் கஷ்மீரின்



பாதைகளையெல்லாம் நிரப்பி விட்டது. உலகில் மிகவும் அதிகமாக இராணுவமயமாக்கப்பட்ட பூமி கஷ்மீர், இதை ஏற்கனவே குறிப்பிட்டோம்.

இன்டர்நெட் என்ற வலைதளங்கள் அனைத்தும் இரண்டாண்டுகளாக முடக்கம். இதனால் (IT)ஐடி கம்பெனிகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் பெருமளவில் வேலைகளை இழந்தார்கள்.

இதனால் மக்களின் வாங்கும் சக்தி 'PURCHASING POWER'அறவே இல்லாமல் ஆனது.எங்கும் வறுமை ஏக்கம்.

அரசியல் தலைவர்களும் மற்றவர்களும் சிறையில். ஏராளமான வியாபாரிகளும் சிறையில். பொதுமக்கள் காடுகளில் பதுங்குமிடங்களைத் தேடி ஓடினார்கள். எங்கே வியாபாரம் தழைக்கும்? வாழ்வாதாரத்திற்கு வழிபிறக்கும்?

முன்னாளில் அரசியல்வாதிகள், தாங்கள் சம்பாதிப்பதற்காக எங்களைப் பயன்

படுத்தினார்கள். இப்போது அதிகாரிகளின் கொள்ளை. அரசியல்வாதிகள் சம்பாதித்தாலும் சில காரியங்கள் கைகூடின. இன்றைய அதிகாரிகள் பணத்தைப் பிடுங்குகின்றார்கள் அவர்களால் எதுவும் செய்திட இயலுவதில்லை, காரணம் அவர்களுக்கு கஷ்மீரைப் பற்றி எதுவும் தெரியவில்லை. அவர்கள் அத்தனை பேரும் கஷ்மீருக்கு அந்நியமானவர்கள், அசிங்கமான எண்ணங்களைச் சுமப்பவர்கள்.


இந்தியாவை பொறுத்தவரை காஷ்மீர் ஒரு பெரிய அரசியல் ஆயுதம். காஷ்மீரில் பாகிஸ்தானை பூச்சாண்டியாக காட்டி வாக்கு அரசியல் இந்தியா முழுக்க நடத்தப்படும். இதனை நேரடியாக செய்வது பாஜக. மறைமுகமாக செய்து வந்தது காங்கிரஸ்.

இந்தியாவில் காஷ்மீரத்தை தவிர்த்து மற்ற பகுதிகளில் காஷ்மீரை பற்றி மிக மோசமான பிம்பம் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்டு வந்தது. அந்த பிம்பம் இந்தியா முழுக்க இந்து - முஸ்லிம் பிளவை உருவாக்க பேருதவி செய்தது.

உதாரணத்திற்கு இதற்கு அடித்தளமிட்டது காங்கிரஸ். அதனை பயன்படுத்தி இந்து முஸ்லிம் பிளவை உருவாக்கியது பாஜக.




நூல்: கஷ்மீரின் பாதி விதவைகள்

தொகுப்பு: மு.குலாம் முஹம்மது

பக்கங்கள்: 140 பக்கங்கள்

விலை: 70/- (கொரியர் கட்டணம் தனி)

கட்டாயம் வாசியுங்கள்!!!


### கஷ்மீர் பொருளாதார கூட்டமைப்பு

(KEA - KASHMIR ECONOMIC ALLIANCE )

இப்படியொரு கூட்டமைப்பு கஷ்மீரில் செயல்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டமைப்பின் சார்பில் பேசியவர்கள், ஆகஸ்ட் 5, 2019 க்குப்பின்னுள்ள (இருபத்தி மூன்று) 23 மாதங்களில் 11(பதினொரு) மாதங்கள் கடைகள், வியாபார நிறுவனங்கள் தொழில் கூட்டங்கள் இவை எதுவும் திறக்கப்படவில்லை. இன்னொரு நான்கு மாதங்கள், கஷ்மீரின் தன்னாட்சி விதியை (370) நீக்கியதால் நடந்த மக்கள் கொந்தளிப்பால் வியாபார தளங்கள் பூட்டப்பட்டு கிடந்தன.

இப்படி கஷ்மீரில் தொடர்ந்து நடந்த அமளிகளால், வியாபார நஷ்டங்கள் (70,000) எழுபது ஆயிரம் கோடி. இதில் 50,000 ஐம்பதாயிரம் கோடி கடைகளும், ஆலைகளும் அடைக்கப்பட்டதால் ஏற்பட்ட நஷ்டம். (20,000கோடி) இருபதாயிரம் கோடி விற்பனைகள் வீழ்ந்து போனதால் ஏற்பட்ட இழப்பு.

விற்பனையில் வீழ்ச்சி என்பது - மக்களின் வாங்கும் சக்தி குறைந்து (LOSS OF PURCHASING POWER - HENCE LOSS OF DEMAND) வறுமையும் வாட்டமும் தொற்றிக் கொண்டதால் ஏற்பட்டது.

ஆகஸ்ட் 5 2019க்கு முன் அரசாங்கம் பொருள்களை வாங்கும்போது ,கஷ்மிர் நிறுவனங்களிடமே வாங்கும். இப்போது கஷ்மீருக்கு வெளியே உள்ள நிறுவனங்களிடம்தான் வாங்குகின்றது. அரசாங்கம் நாங்கள் அந்த பொருள்களை விற்பனை செய்ய முடியவில்லை. நஷ்டம் வந்துவிட்டது. நஷ்டத்தில் நடக்கும் வியாபார நிறுவனங்களால் "CORPORATE" கார்ப்பரேட் நிறுவனங்களுடன் போட்டி போட்டிட இயலவில்லை.அதனால் நாங்கள் எங்கள் அங்காடிகளை (MARKETS) கார்ப்பரேட்டுளுக்கு இழந்து வருகின்றோம்.

அரசியல்வாதிகளோடு பெரும் வியாபாரி களையும் கைது செய்துள்ளார்கள். ஏன்? இந்தக் கைதுகள் என அங்கலாயிக்கின்றார்கள் வியாபாரிகள். அவர்களில் பலர் இன்றும் சிறையில்.

அரசியல்வாதிகளை டெல்லிக்கு அழைத்துப் பேசிய பிரதமர் மோடி, வியாபாரிகளையும், தோட்டக்கலைஞர்களையும், விவசாயிகளையும் அழைத்துப் பேசி இருக்கலாம் .(அப்போதும் ஒன்றும் நடந்திருக்காது)

### வேலையில்லாத் திண்டாட்டம்

அக்கறையுள்ள குடிமக்களின் குழுமம் (CONCERNED CITIZENS GROUP) இளைஞர்களிடையே நிலவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியும் ஆய்வுகளை நடத்தியுள்ளது. அதில் இன்டர்நெட் முடக்கம், வியாபாரங்கள் இல்லாமை, பள்ளிக் கல்லூரிகள் மூடல், இவற்றால் இளைஞர்கள் விரக்தி வயப்பட்டு நிற்கின்றார்கள். இந்த விரக்தியில் அவர்கள், ஒன்றிலோ தற்கொலை செய்துகொள்ள வேண்டும் அல்லது வேறுவழிகளைத் தேடிட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

(FRONT LINE : AUG 27,2021)

### “ஊபா சட்டம்” என்ற தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளின் தடை சட்டம்(UAPA)

இந்தக் காட்டுமிராண்டி சட்டம் கஷ்மீரில் எடுத்தற்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றது. குழந்தைகள் (JUVENILE) கூட இந்தச் சட்டத்தில் கைது செய்யப்படுகிறார்கள், எனக்கூறி இருக்கின்றார்கள், கஷ்மீரில் உள்ள வழக்கறிஞர்கள்.

யாரைக் கைதுசெய்தாலும், நீதிமன்றங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் சிறையில் தள்ளி விடுகின்றன. இதில் அவர்கள் காவல்துறையின் “ரப்பர் ஸ்டாம்பு” என்ற நிலையிலேதான் செயல்படுகிறார்கள். இளைஞர்களே இந்த ஊபா சட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்படுவதால், அவர்கள் இன்னும் அதிகமான விரக்தி வயப்பட்டு நிற்கின்றார்கள். இது எங்கே போய் முடியும் என தெரியவில்லை என ஆதங்கப்படுகின்றார்கள் அங்குள்ள வழக்கறிஞர்கள்.(IBID)

**- MGM.**

# தற்கொலை செய்துகொள்ளும் நமது ராணுவ வீரர்கள்



## தங்களோடு போர்செய்யும் ஆயுதந்தாங்கிய படைவீரர்கள்

அடுத்தடுத்து நடந்த அந்தத் தற்கொலை செய்திகள் அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தின. முதலில், இந்தத் தற்கொலை செய்திகள் கஷ்மீரின் குப்புவாரா பகுதியில் இருந்த நமது இராணுவ வீரர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

நமது இந்தியாவிற்கும், சீனாவிற்குமிடையே உள்ள எல்லைப் பகுதியில் காவலில் நின்றவர்தான் அவர். இந்தத் தற்கொலை மெல்ல, மெல்ல அந்தப்பகுதி மக்களிடையே செய்தியானது.

பின்னர் ஒரு கள ஆய்வாக உருவெடுத்தது. இதுவரை எத்தனை இராணுவ வீரர்கள் தற்கொலை செய்துள்ளார்கள் என்பது ஆய்வுக் கூடங்களின் ஆய்வுப் பொருளாக மாறியது.

பாராளுமன்றத்தில் விவாதமான பின்னர் பல உண்மைகள் மக்கள் மன்றத்திற்கு வந்தது. இராணுவ வீரர்கள் தற்கொலை செய்து கொள்வதன் காரணங்களை அறிந்து, அதனைத்தடுக்க முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால்...?

டிசம்பர் 2020ம் ஆண்டு நடந்த இரண்டு தற்கொலைகளைத்தான் இங்கே குறிப்பிட்டோம். இரண்டு இராணுவ வீரர்கள் தங்களைத் தாங்களே சுட்டுக் கொன்றார்கள்.

இது கஷ்மீரின் குப்புவாரா பகுதியில் நடந்தது. தொடர்ந்து பி. சி. பாரிந்தர் சிங் என்பவர் - இவர் நமது எல்லைப் பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்.

ஒரு நாள் கழித்து சந்திராபாட்டில் என்பவர் கஷ்மீரின் ஜவூரா கிராமத்தில் வைத்துத்தன் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.

இது கஷ்மீரின் வடக்குப் பகுதியில் இருக்கின்றது. அடுத்து கஷ்மீரின் குப்புவாரா பகுதியில் மேஜர் ஃபாசுல்லாஹ் கான் என்பவர் சீன எல்லைப் பகுதியில் தற்கொலை செய்தார். இப்படி எண்ணற்றத் தற்கொலைகள். இந்த தற்கொலைகள் ஒரு புதிய விதியாக மாறிவிட்டது.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக நடப்பனவாக இல்லை. இதனை மொத்த வருத்தத்தோடு ஆய்வாளர் ஆனந்த் பக்டோ இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"In Kashmir the Trend Unfortunately Seems more of a Norm than of an Abreaction" (Front Line : Feb 26,2021)

அக்டோபர் திங்கள் 2020ம் ஆண்டு மூன்று வாரத்தில் ஆறு இராணுவ வீரர்கள் தங்களிடமிருந்த துப்பாக்கியால் சுட்டுக் கொண்டார்கள்.

இந்தத் தற்கொலைகள் இவர்கள் பணிக்குச் சென்ற இடங்களில் நடந்தன என்றால், அவர்கள் தங்கள் "HQ - Head Quarters" என்ற தலைமை அலுவலகத்தில் வைத்து தற்கொலை செய்து கொண்டார்கள்.

கஷ்மீர் தலைநகர் சிரீநகரில் வைத்து R.G.நாயுடு என்ற தலைமை காவலர் தனது அலுவலகத்தில் வைத்து தன்னைச் சுட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து ஜாஜ்ஜித்சிங் என்ற இராணுவ வீரர் ஜெண்டார்பால் மாவட்ட தலைநகரில் வைத்துத் தன்னைச் சுட்டுக் கொண்டார்.

22 வயதான ராஷ்கிட் குமார் கஷ்மீர் எல்லை மாவட்டமான பாரமுல்லாஹ்வில் வைத்து தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்.

இன்னொரு இராணுவ ஜவான் M.K.முல்லியராஜ் 25வயது. இவர் சீனாவின் எல்லை (LOC)இல் நவ்காம் பகுதியில் வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது அக்டோபர் 11, 2020ம் ஆண்டில் நடந்தது. அடுத்தநாளே அபித்குமார் என்ற இராணுவ வீரர் தற்கொலை செய்து கொண்டார்.

அடுத்து மத்திய சிறப்பு படை (CRPF)ஐ சார்ந்த நாத் என்பவர் தற்கொலை செய்து கொண்டார்.

International | Kashmir | Latest News

# indian crpf officer commits suicide in bhaderwah

By Editor News - September 2, 2020 · 80 · 0



இவர் சிரீநகரிலுள்ள ஷர்காரி முகாமில் வைத்துத் தற்கொலை செய்து கொண்டார்.

இப்படி இராணுவ வீரர்களும், பாதுகாப்புப் படையினரும் தொடர்ந்து தங்களை மாய்த்துக் கொள்வதால் அவர்களைப் பற்றிய ஆய்வுகள் தேவைப்பட்டன. பழைய தகவல்கள் எல்லாம் தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றில் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன.

மார்ச் 2020ல் இது பற்றிய மிகப்பெரிய விவாதம் நமது நாடாளுமன்றத்தில் வந்தது. அப்போது நமது இணை பாதுகாப்பு அமைச்சர் சிரீபத் நாயக் 2019ம் ஆண்டில் மட்டும் 95பேர் தற்கொலை செய்துள்ளார்கள் என குறிப்பிட்டார்.

அதேபோல், 2018ம் ஆண்டில் 107 வீரர்களும், 2017ம் ஆண்டில் 103 இராணுவ வீரர்களும் தற்கொலை செய்துள்ளார்கள். கடந்த 10 ஆண்டுகளாக இதேபோல் இராணுவ வீரர்கள் தற்கொலை செய்து வருகின்றார்கள் என்றார்.

2010ம் ஆண்டுக்கும் 2019ம் ஆண்டுக்கும் இடையில் 1110 தற்கொலைகள் இராணுவ வீரர்களிடையே நடந்திருக்கின்றது என்றார். (Front Line 26, Feb 2021)

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையின் படி மூன்று நாட்களுக்கு ஒரு இராணுவ வீரர் தற்கொலை செய்துவருகின்றார். இந்த நிலை கடந்த 10 ஆண்டுகளில் அப்படியே இருந்தாலும் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றன.

## காரணங்கள்

அரசு சொல்லும் காரணங்கள் வழக்கம் போல தற்கொலை செய்து கொண்டவர்களையே குறை காண்பதுதான். அவர்களின் சொந்தக் காரணங்கள், குடும்பப் பிரச்சனைகள், பணப் பிரச்சனைகள் இவைதாம் காரணம் என்கின்றார்கள்.

காலப்போக்கில் பல ஆராய்ச்சி நிறுவனங்கள், இந்தத் தற்கொலைக்கான காரணங்களைக் கண்டு பிடிக்கத் தலைப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை:

மனோகர் பரிக்கர் இராணுவ பாடங்களுக்கான ஆய்வு நிறுவனங்கள் - Manokar parikkar Institute for Defence Studies and Analysis (IDSA)

ஒருங்கிணைந்த சேவை நிறுவனங்களின் மையம் United Service Institutions of India (USI)

இந்த ஆய்வு நிறுவனங்கள் பல உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தன. இதில் K.D.திஷிஷ் என்பவர், (IDSA) என்ற மேலே நாம் குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்தவர்.

அவர் கூறுகின்றா:

"ஆயுதந்தாங்கிய படைகளில் பணியாற்றுபவர்கள் எதிரிப்படைகளோடு போரிடத்தான் பயிற்சி பெற்றார்கள். ஆனால் அவர்களை கஷ்மீர் போன்ற நம் சொந்த நாட்டின் ஒரு பகுதியில் போரிட நிறுத்தும்போது அவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. யார் போரிட வருபவர், யார் அப்பாவி என்பதைக் கண்டுகொள்ள முடிவதில்லை."

அந்த அறிக்கை இன்னும் தெளிவாக இப்படிக் குறிப்பிடுகின்றது;

They are deployed in carrying out operations against our own people

which fought against our own people stands out "At was with the Self "

(Front Line - Feb 26,2021)

நமது மக்களுக்கு எதிராகவே ஆயுதங்தாங்கிப் போராடுவது மிகையான மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது.

நீண்ட நாட்களாக அப்பாவிகளையே கொலை செய்து கொண்டிருப்பது அவர்களைத் தற்கொலையின் பக்கம் இழுத்துச் செல்கின்றது.

கஷ்மீர் போன்ற இடங்களில் இதுவே இராணுவ



வீரர்களின் தற்கொலைக்கு காரணம் என்பதை, மனோகர் பரிக்கரின் இராணுவ பாடங்களுக்கான ஆய்வு நிறுவனம் உறுதிப்படுத்துகின்றது.

இந்த ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் D.C. திஷித் இப்படி எழுதுகின்றார்.

இது போன்ற அப்பாவிகளோடு போடுகின்ற சண்டை, எதிரி யாரென்றே தெரியாமல், அவர்களைப் பற்றிய தெளிவான உளவுமில்லாமல் பயங்கர ஆயுதங்களோடு களத்தில் நின்று, போராடச் சொல்வதும் அதில் விழும் பிணங்களும் அவர்களின் மனநிலையில் சொல்லொண்ணா மன அழுத்தத்தைக் கொண்டு வருகின்றது.

இப்படிப்பட்ட யுத்தத்தை இந்த ஆய்வு மையம்,LICO (Low Intensity Conflict Operations) என்கின்றது. இதே காரணங்களைத்தான் ஒருங்கிணைந்த சேவை மையங்களின் நிறுவனமும் குறிப்பிடுகின்றது. அத்தோடு சில நிருவாக சீர்கேடுகளை சுட்டிக்காட்டுகின்றது. இந்த காரணங்கள் கஷ்மீரை போன்ற பல வடகிழக்கு மாகாணங்களுக்கு பொருந்தும்.

### அரசின் முயற்சிகள்

2012ம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையில் நடந்த ஆட்சியின் ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் A.K.அந்தோணி நிருவாக சீர்கேடுகளே படைவீரர்களின் தற்கொலைகளுக்குக் காரணம் என நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார். நிருவாக சீர்கேடுகளை சீர்செய்யும் முயற்சிகளையும் மேற்கொண்டார்.

நிருவாக சீர்கேடுகளால் இராணுவ வீரர்களுக்கு ஏற்படும் விரக்தி, மன உளைச்சல் இவற்றிற்கு தீர்வு தந்திட விரைவு குழுக்களும், விரைவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் தற்கொலை செய்துகொள்வது குறைவதில்லை.

ஒரு கட்டத்தில் இராணுவ வீரர்களின் மனநிலைகளைச் சீர்செய்ய 400 மனநல மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு இராணுவ வீரர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இப்போதைய அரசும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறுகின்றது.

ஃபிரண்ட் லைன் பத்திரிகை, காங்கிரஸ் அரசும், இன்றைய அரசும் கொண்டு வந்த பல்வேறு தீர்வுகள் நடப்பில் வரவில்லை என குறைபட்டுக் கொள்கிறது.

ஆனாலும் யாரும் எந்த அரசும்,காங்கிரஸ் அரசாக இருந்தாலும் இன்றைய ஒன்றிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசும் உண்மையான காரணங்களை அறிந்தும் அறியாததைப் போலவே நடக்கின்றது.


பல நூறு ஆண்டுகளாக நாமும் நம்மைப் போன்ற பத்திரிகையாளர்களும் ஒரு தீர்வை முன்வைத்து வருகின்றோம். அது,

கஷ்மீர் மக்களின் இதயங்களை வென்று நம்மோடு இணைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்பாவிகளோடு போர் தொடுப்பதை நிறுத்தவேண்டும்.

இதனை செவிமடுப்போர் யாருமில்லை.

இனிமேலாவது செய்வார்களா? என பார்ப்போம்.

**- MGM.**




# காஷ்மீரின் தர்பார் மாற்றங்கள் (Darbar Move)

1872ம் ஆண்டில் கஷ்மீரை ஆண்ட மன்னர், ரன்பிர் சிங் ஓர் ஏற்பாட்டை செய்தார். கஷ்மீருக்கு இரண்டு தலைநகரங்கள் என்றாக்கினார். ஒன்று சிரீநகர், இன்னொன்று ஜம்மு. சிரீநகர் கோடைகால தலைநகர். அங்கு கோடை நாள்கள் குளுகுளு வென்று இருக்கும். ஜம்மு குளிர்கால தலைநகர். அங்கு குளிர்காலத்தில் உஷ்ணம் மிதமாக இருக்கும். இந்த நிலையையே ஆங்கிலேயர்களும் பின்பற்றினார்கள்.

இந்தியா ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து விடுதலையடைந்த பின்னரும் இந்த நிலையே தொடர்ந்து நீடித்தது. மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை சிரீநகர் தலைநகர். நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஜம்மு பகுதி தலைநகர்.

இப்படி தலைநகரை கொண்டதை மக்கள் அனைவரும் வரவேற்றார்கள். காரணம் இரு தரப்பு மக்களிடையேயும் நல்லுறவை வளர்ப்பதற்காக அமைந்தது.

சிரீநகரை மையமாகக் கொண்ட கஷ்மீர் முஸ்லிம்கள் அதிகமாக வாழும்பகுதி. ஜம்மு இதர மத நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் வாழும் பகுதி. தலைநகர் இரண்டாக இருந்த மக்கள் சிரீநகருக்கும் - ஜம்முவுக்குமிடையே போய் வந்து கொண்டிருந்தார்கள். இதனால் பரஸ்பர உறவுகள் வளர்ந்து கொண்டிருந்தன.

இன்றைய பாசிச அரசு மக்களிடையே மதத்தின் அடிப்படையில், பிரிவுகளை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடித்துக்கொண்ட அரசு. ஆகவே அவர்கள் இப்போது அதே தலைநகர் மாற்றத்தை, ரத்து செய்துவிட்டார்கள். இதற்கு பல சாக்குப்போக்குகள் பொய் புழுகல்கள் இவற்றை வழக்கம் போல் அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றுள் ஒன்று ஒவ்வொருமுறை தலைநகரை மாற்றிடும்போது ரூபாய் 200கோடி செலவாகின்றது என்பதாகும்.

“149 வருடமாக நடந்து வரும் ஓர் நல்ல சமூக உறவுகளுக்கும், தேசத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வகைசெய்யும் ஒரு செயல் இது. இதில் ஆகும் 200கோடி ரூபாய் அதனால் விளையும் நன்மைகளை வைத்துப்பார்த்திடும் போது ஒன்றுமில்லை எனலாம்.” என்கின்றார்கள். ஜம்மு, கஷ்மீர் மக்கள். இதை நாம் ஏற்கனவே குறிப்பிட்ட, அக்கறையுள்ள குடிமக்களின் குழுமம் மிகவும் தெளிவாகவே பதிவு செய்திருக்கின்றது. (Front Line : Aug 27,2021)

இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஜம்மு பகுதியில் கஷ்மீர் அரசு தொழிலாளர்களுக்கு வழங்கி இருந்த குடியிருப்புகளை ரத்துசெய்திருக்கின்றார்கள். காரணம் - இவர்களுக்கு அங்கு வாக்குரிமை வந்துவிடக்கூடாது, என்பதே! இதனால் இவர்கள், தாங்கள் கஷ்மீரில் உருவாக்கியிருக்கும் அப்னி கட்சிக்கு எதிரான வாக்குகள், ஜம்மு பகுதியில் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். என்பது பல ஆய்வாளர்கள். குறிப்பாக அக்கறையுள்ள குடிமக்கள் குழுமத்தின் கணிப்பாகும்.

இப்படிப்பட்ட தகிடுதத்தங்களையெல்லாம் செய்து அவர்கள் கஷ்மீரில் எப்போது தேர்தல் (ஒன்றிய அரசின் பகுதி என்ற அளவில்) வந்தாலும் அவர்களின் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி அமைக்க வழி தேடுகின்றார்கள்.

ஆனால் நடந்து முடிந்த DDC District Development Council என்ற ஊரக வளர்ச்சி குழும தேர்தல்களில், இவர்களின் தகிடுதத்தங்கள் கிஞ்சிற்றும் நிலைக்க வில்லை. கஷ்மீர் மக்களின் கூட்டணியாகிய குப்கார் கூட்டணியே அதிகமான இடங்களை வென்றது.


இந்தத் தோல்விக்குப்பின் பிரிதொரு பித்தலாட்டத்தை செய்து வருகின்றார்கள் தங்களுக்குக்கான சாதகமாக, சூழல் வரும்வரை தேர்தல்களைத் தாமதப்படுத்துவதே அந்தப் பித்தலாட்டம். இதற்குள் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி இவர்கள் காட்டிவரும் இரண்டு லட்சம் குடியிருப்புகளில் இவர்களுக்கு வேண்டிய வர்களைக் குடியமர்த்திவிட்டார்கள்.

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**






இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

“அன்பார்ந்த வாசகர்களே! இந்தப் பகுதியில் நாம் இஸ்லாம் ஆட்சியில் அமர்ந்துவிடாமல் மேலைநாட்டவர்கள் அதாவது இஸ்லாத்தின் எதிரிகள், என்னென்ன வசதிகளைச் செய்து வருகின்றார்கள் என்பதை இந்தப் பகுதியில் பார்த்து வருகின்றோம். அதில் துனீசியாவில் எப்படி இஸ்லாம் தழைத்தபோது, அதைத் தட்டிக் கவிழ்த்தார்கள் என்பதைப் பார்ப்போம்.”

# ஹபீப் போர்கிபா

“திருக்குர்ஆன் திருநபியின் பெருவாழ்வு: இவற்றின் அடிப்படையில் ஒர் நல்லாட்சியை அமைப்போம்!”

இப்படி உறுதிமொழிந்து, குருதியால் எழுதிக்காட்டி முஸ்லிம் நாடுகளில், மக்களின் கவனத்தையும் கருத்தையும் கொள்ளை கொள்வார்கள் ஆட்சியாளர்கள்.

ஆட்சிக்கு வந்ததும் அனைத்தையும் மறந்து விடுவார்கள். மட்டுமல்லாமல் இஸ்லாத்தின் பரம்பரை எதிரிகள் செய்யத் துணியாத வற்றையெல்லாம் இவர்கள் செய்யத் துணிந்து விடுவார்கள்.

முஸ்லிம் நாடுகளின் வரிசையிலே இடம்பெறும் துனீஸியாவைப் பொறுத்தவரை இது அப்படியே பொருந்தும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடான துனீஸியா 1956ம் ஆண்டு வரை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. இந்த ஆதிக்கத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்தார் ஒரு போர்வீரர். அவரது பெயர் ஹபீப் போர்கிபா.

துனீஸிய மக்கள் மீது காலனி ஆதிக்கம் பூட்டிய கால்விலங்கை அறுத்திட ஹபீப் போர்கிபா பயன்படுத்திய பேராயுதம் வேறொன்றுமில்லை, திருக்குர்ஆன் தான்.

வெள்ளிக்கிழமை வெள்ளமெனத் திரண்டு வந்து பள்ளிவாயிலில் அலைமோதும் கூட்டத்தில் “குத்பா” எனும் வெள்ளிக்கிழமைப் பேருரையை ஹபீப் போர்கிபா நிகழ்த்துவார். அவ்வுரையில் திருமறையின் திருவசனங்கள் பிரவாகமெடுத்து ஓடும். இஸ்லாமிய உணர்வு பொங்கிப் பெருகிவரும்.

புத்தாடை புனைந்து புனிதம் பேணிவந்து படைத்தவனைத் தொழுதுவிட்டு வீடுதிரும்பும் திருக்கூட்டம், விடுதலை உணர்வு ததும்பும் ஹபீப் போர்கிபாவின் உரைகேட்டு போர்க்கோலம் பூணும், எங்கும் விடுதலை உணர்வுகள் ஆர்ப்பரிக்கும்.

“அந்நியன் உங்களை அடக்கி ஆண்டிட நீங்கள் முடங்கிக் கிடந்துவிடுவதா!” “எழுமின்,விழுமின்!” என்றெல்லாம் போர் முரசு கொட்டி மக்களைத் தட்டியெழுப்புவார் ஹபீப் போர்கிபா. மலரவேண்டும் இஸ்லாமிய ஆட்சி துனீஸியாவில் என லட்சியம் போதிப்பார் ஹபீப் போர்கிபா! இத்தோடு நிற்கவில்லை அவர். இஸ்லாமியப் பண்பாட்டின் அருமை பெருமைகளை விளக்கி எழுத்துக்கணைகளையும் ஏவிவிட்டார்.

இந்த வரிசையில் அவர் எழுதிய நூல்களில் ஒன்று “ஹிஜாப்” என்ற இஸ்லாமிய ஆடை அமைப்பின் சிறப்பை விளக்கும் நூலாகும். 1936ல் இதை எழுதினார். இந்த நூலில் பெண்கள் தங்கள் உடலை முழுமையாக மறைத்திடுவதால் ஏற்படும் ஏராளமான நன்மைகளைக் கோடிட்டுக் காட்டினார். உடலை முழுமையாக மறைத்திடாமல் வீட்டைவிட்டு வெளியே வரும் பெண்களை கடுமையாகச் சாடினார்.

துனீஸியாவில் அந்நிய ஆதிக்கம் அகற்றப்பட வேண்டும். இஸ்லாம் துனீஸியாவில் அரியணை ஏறிடவேண்டும் என்றெல்லாம் ஹபீப் போர்கிபா முழங்கிய இலட்சியத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு துனீஸிய விடுதலை இயக்கத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர் முஸ்லிம்கள்.

பிரெஞ்ச் ஆதிக்கத்தைப் புறம்கண்டனர். விடுதலையும் அடைந்தனர். ஹபீப் போர்கிபா பிரெஞ்ச் ஆதிக்கத்திற்கும் அடக்கு முறைகளுக்கும் எதிராகக் காட்டியத் துணிவு, பேசிக் காட்டிய இஸ்லாமிய எழுச்சி, இவற்றிற்குப் பதிலாகவும் பரிசாகவும் துனீஸியாவின் ஆட்சியை அவருடைய கைகளிலேயே ஒப்படைத்தார்கள் முஸ்லிம்கள்.

1957ம் ஆண்டு நவம்பர் 8ம் நாள் நடந்த பொதுத்தேர்தலில் ஹபீப் போர்கிபாவின் தஸ்தூர் கட்சிக்கே முழுமையான ஆதரவைத் தந்தனர் மக்கள். தேர்தலில் துனீஸியாவில் உள்ள 90



நாடாளுமன்ற இடங்களையும் ஹபீப் போர்கிபாவின் நியோ தஸ்தூர் கட்சியே வென்றது.

1964, 1969 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களிலேயும் ஹபீப் போர்கிபாவிற்கே முடிசூட்டினார்கள் மக்கள்.

1974ம் ஆண்டு வரை துனீஸியாவின் நிரந்தர ஆட்சியாளராக ஆக்கினார்கள்.

ஹபீப் போர்கிபா பிரெஞ்ச் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கும் ஆட்சியை நிரந்தரமாகப் பிடித்துக் கொள்வதற்குமே இஸ்லாத்தைப் பயன்படுத்தினார் என்பது அவருடைய பிற்கால நடவடிக்கைகளால் ஊர்ஜிதமாயின.

ஏனெனில் தான் நிரந்தர ஆட்சியாளராக ஆனபிறகு இஸ்லாத்தையும் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ முனைந்தவர்களையும் அந்த அளவிற்கு எதிர்த்தார், ஏகடியம் பேசினார்.

ஹபீப் போர்கிபா துனீஸியாவின் ஆட்சித் தலைவர், ஆனால் அவரால் துனீஸியாவின் பொருளாதாரத்தை பிரான்ஸ், பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க இயலவில்லை.

ஆனால் பிரான்ஸ் - பிரிட்டன் இவற்றின் அடிமைகளாகவே ஆகிப்போனார்.

ஹபீப் போர்கிபாவின் சொந்த பலவீனங்களையும், பொருளாதார வளங்களையும் பயன்படுத்தி, மேலைநாட்டவர்கள் தங்கள் தத்துவங்களையும், பலவீனங்களையும் தாராளமாக புகுத்தினார்கள்.

ஹபீப் போர்கிபா காலப்போக்கில் இஸ்லாத்தின் எதிரியாகவே ஆகிப்போனார்.

மேலைநாட்டு ஆபாசக் கலாச்சாரம், ஆடம்பரம், சுகபோக வாழ்க்கை ஆகியவற்றின் நிரந்தர அடிமையானார்.

பெயரளவில் என்னவோ இஸ்லாம்தான் அரசின் மதம். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ முயற்சிப்பவர்கள், இஸ்லாத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்பவர்கள் இவர்களெல்லாம் அரசின் பரம்பரை எதிரிகளாகக் கருதப்பட்டனர். சிறை பிடிக்கப்பட்டனர். சித்திரவதை செய்யப் பட்டனர்.

இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பது ஓர் இமாலய உண்மை. அந்த இறைவனையே இல்லை என்று மறுக்கும் கம்யூனிசத்தை கொள்கையாக கொண்டவர்களுக்கு இருக்கும் உரிமைகள் கூட முஸ்லிம் நாடான துனீஸியாவில் இஸ்லாமிய இயக்கங்களுக்கும், இஸ்லாமிய வழியில் வாழ விரும்பும் முஸ்லிம்களுக்கும் இல்லை .

1981ம் ஆண்டு துனீஸியாவின் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் முஹம்மது ஹெர்மல் என்பவருக்கு சிகப்புக் கம்பள வரவேற்பு தந்தார் ஹபீப் போர்கிபா. அதே நாளில் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்த சுமார் 3000 பேரை எந்த முகாந்திரமுமில்லாமல் கைது செய்து கொட்டடிகளில் அடைத்துச் சித்திரவதை செய்தார்.

அதே ஹபீப் போர்கிபா ஆட்சியில் அமர்ந்த பின் பர்தா அணிந்து வந்த ஒரு பெண்ணின் பர்தாவை நடுரோட்டில் வைத்துக் கிழித்து அந்த பெண்ணை அவமானப்படுத்தினார்.

பள்ளிக்கூடங்களிலும், பணிமனைகளிலும் ஏராளமான பெண்கள் சிறைபிடிக்கப்பட்டனர், ஏளனம் செய்யப்பட்டனர். இவர்கள் செய்தகுற்றம்வேறொன்றுமில்லை இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிந்திருந்தனர். இத்தோடு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒரு மனைவிக்கு மேல் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என விதி வகுத்தார் ஹபீப் போர்கிபா.


மேலைநாட்டுக் கலாச்சாரத்தின் அடிவருடியாகத் திகழ்ந்த இவர், இஸ்லாமிய ஆடை முறைகளுக்கெதிராகவும், பலதார மணத்திற்கெதிராகவும் தான் பாய்ந்தார் என்றில்லை.

இறைவன் அருளிய திருமறையையே "முன்னுக்குப்பின் முரணானது" என இகழ்ந்தார்.

புனித ரமளான் மாதம் நோன்பு நோற்கும் காலம் தொலைக்காட்சியில் தோற்றம் தந்து பகல் வேளையில் பழரசம் அருந்தினார் போர்கிபா. மக்களை அறைகூவி அழைத்து "பார்த்தீர்களா நான் நோன்பு நோற்பதில்லை, நீங்களும் நோன்பு நோற்க தேவையில்லை" என நோன்பின் புனிதத்தைப் பழித்து புத்திமதி சொன்னார்.

இத்தோடு "நோன்பு நோற்பது மனித ஆற்றலைக் குறைக்கும். நாட்டின் உற்பத்தியைக் குறைக்கும்" என்றெல்லாம் புரட்டுப் பொருளாதாரம் பேசினார்.

காலப்போக்கில் ஹபீப் போர்கிபாவின் ஆடம்பரமும், போக விளையாட்டுக்களும் எல்லா எல்லைகளையும் தாண்டிச் சென்றன.



**Bourguiba Toasts Modernism With Fruit Juice at Time of Fast**

**Deplores Traditional Rite of Ramadan—Says Tunisians Tolerate Non-Observance**

By THOMAS F. BRADY
Special to The New York Times.

TUNIS, March 5—President Habib Bourguiba of Tunisia sipped fruit juice in his office at noon today.

"I can be more useful to my country if I am not sitting in a corner yawning and hungry because of Ramadan," he said.

The gesture was significant because strict Islamic observance requires abstention from all food and drink and even from cigarettes from dawn to sundown during the holy month of Ramadan.

தன்னுடைய 84வது பிறந்தநாள் விழாவில் பொதுப்பணத்தை அள்ளிக் கொட்டிப் போக்கித்துக் கிடந்தார் ஹபீப் போர்கிபா. மக்கள் பணத்தை மழையாய்ப் பொழிந்து இவர் களித்துக் கிடந்தபோது நாடு வறுமையின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தது.

தன்னுடைய பேரக் குழந்தையின் பிறந்த நாளின்போது கோலாகலமாக விழா எடுத்தார் ஹபீப் போர்கிபா. தங்கத்தில் தொட்டில் போட்டு தோரணங்கள் கட்டித் தாலாட்டி மகிழ்ந்தார். அத்தனையும் மக்கள் பணம்!

அதேநேரத்தில் அந்நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

70 லட்சம் மக்கள் மட்டுமே வாழும் துனீஸியாவில் 5 லட்சம் பேர் வேலையின்றி வாடுகின்றனர். 1,64,150 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட துனீஸியா, வெளிநாடுகளில் 45,000கோடி ரூபாய்க்கு மேல் கடன்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாமல், இவரது முதல் மனைவி வசீலா இறந்தபிறகு இவரது மைத்துனி கெய்னப் சவ்சி துனீஸியாவின் ஏகபோக அதிபதியாகவே செயல்பட்டார். அதிகாரத்தை தனது கைகளிலே எடுத்துக்கொண்டு நாட்டு மக்களை ஆட்டிப்படைத்தார்.

இப்படி ஹபீப் போர்கிபாவின் கபளீகரங்கள் கரைபுரண்டோடினாலும் மேலை நாட்டவர்களும், மேலைநாட்டவர்களுக்குத் துதிபாடும் பத்திரிகைகளும் ஹபீப் போர்கிபாவை "முன்னேற்றத்தின் முன்னோடி" எனப் புகழ்ந்தன.

எடுத்துக்காட்டாக "நியூஸ்வீக்" ஏடு ஹபீப் போர்கிபாவை இப்படி வர்ணிக்கின்றது :

"An indefatigable reformer,he transformed Tunisia from a backward improverished into a model of Social progress " (NEWS WEEK November 16, 1987)

அதாவது, "அவர் ஒரு சலிப்பற்ற சீர்திருத்தவாதி. அவர் பின்தங்கிய வறிய நாடாகிய துனீஸியாவை சமூக வளர்ச்சியின் ஒரு முன்மாதிரியாக ஆக்கிக் காட்டினார்."

ஹபீப் போர்கிபாவிற்கு இந்தப் புகழாரம் ஏன் தெரியுமா? அதையும் "நியூஸ்வீக்" ஏடே சுட்டிக்காட்டுகின்றது :

"Tunisia under Bourgiuba has been a constant friend of both France and United States" (Nov: 16,1987)

அதாவது, "போர் கிபாவின் கீழ் துனீஸியா, பிரான்ஸ்,அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிரந்தர நண்பனாக இருந்து வந்தது."

ஹபீப் போர்கிபா துனீஸியாவில் நடத்திக் கொண்டிருந்த கலாச்சார சீரழிவுகளுக்கும் பொருளாதார நாசங்களுக்கும் ஆடம்பர, ஆர்ப்பாட்டங்களுக்கும் எதிரே கிளர்ந்தெழுந்தது அங்கே இருந்த இஸ்லாமிய இயக்கம். அந்த இயக்கத்தின் பெயர் "இஸ்லாமிய எழுச்சி இயக்கம்." இந்த இயக்கம் வெளிப்படுத்தும் இஸ்லாமிய எழுச்சி துனீஸியாவை மட்டுமல்ல உலகையே உலுக்கி வருகின்றது.

தலையங்கம்



# சமூகநீதி நாள்

## பெரியார் பிறந்தநாள்!

17.09.2021 அதாவது பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாள் என்று அறிவித்துள்ளார், தமிழக முதல்வர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழலில், பெரியாரை இப்படி உயர்த்திப்பிடிப்பது அவசியம். அவசரம். இதற்கு மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைகள் தாம், இன்றைய திராவிடத்தை குறிப்பாக தமிழகத்தை வழிநடத்துகின்றது. தந்தை பெரியார் அமைத்து தந்தவையே அடிப்படை.

பெரியாரின் சீரிய பார்வையில் இந்தியாவின் விடுதலை நாள் 15 ஆகஸ்ட் 1947ல் கிடைத்தது அல்ல, மாறாக அந்நாள் ஓர் ஆதிக்கசக்தி இடமிருந்து, அதிகாரம் இன்னொரு ஆதிக்கசக்திக்கு மாற்றப்பட்ட நாள், என்பதுதான். சாதிய அடுக்குமுறையும், அடக்கமுறையும், அடிமைமுறையும் ஒழியும் வரை, இந்தியா சுதந்திரம் அடைந்ததாக கொள்ளமுடியாது.

இதிலும் பெரியார் உறுதியாக இருந்தார். அதற்காக உழைத்தார். இந்த வகையில் இந்தியா இன்னும் சுதந்திரம் அடையவில்லை என்பதே உண்மை. 75ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாறு இதற்கு சாட்சி. அதல்லாமல் இந்தியா 2014 முதல் பாசிசத்தின் பிடிக்குள் போய்விட்டதால் புதிய அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும் தொடங்கிவிட்டன. தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த போக்குகளின் இப்போதையே பார்வையை வழக்கறிஞர் லஷபதி ராய் அவர்கள் அண்மையில் வெளியிட்ட ஆய்வு நூலாம் "நாடார்கள் நிறம் கறுப்பா? காவியா?" என்பதில் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். அவருடைய கணிப்பின்படி, இந்துத்துவா என்ற பெயரில் இப்போது பின்னப்படும் மாயவலையின் முடிவில், சனாதன அடக்குமுறையும், அடுக்குமுறையும் நிலைநிறுத்தப்படும். இப்போது முஸ்லிம் அல்லாத அனைவரையும் அரவணைத்துப்போவதுபோல் அள்ளிக்கொட்டி போடும் வேஜம் எல்லாம், பின்னர் சனாதனம் எனும் விஜத்தைக் கொட்டத்தான். இந்த அடிமைமுறை புதிய வலிவும், பொழிவும் பெறலாம், எதிர்வரும் இந்தியாவில்.

இந்தப் பெரும் சதிக்கு தமிழகத்தில் தழைத்து தலைநிமிர்ந்து நிற்கும் திராவிடம்தான் தடை, கொள்கைரீதியான தடை. இந்த திராவிடத்தின், சமூக நீதிக்கானப் போராட்டம் நீண்ட நெடியதொரு வரலாற்றைக்கொண்டது. சமுதாய எதிர்ப்பு என தொடங்கியது, அரசியல் பரிணாமம் பெற்று நீதி கட்சியின் வடிவில் சமுதாயத் தளத்தில் பல சாதனைகளை நிகழ்ந்தன.

தாசி முறை ஒழிப்புச் சட்டம், சுயமரியாதை திருமணங்கள், சட்டம், கல்விப்பெறும் உரிமை, இடஒதுக்கீடு, அதனால் வந்த சமுதாய அங்கீகாரம், சற்றே பொருளாதார முன்னேற்றம். இது இந்தியாவின் இதர பகுதிகளிலும் பிரதிபலித்தது. அங்கேயும் படிப்படியாக அரசியல் தளத்திலும் வெற்றிகளைக் குவித்தார்கள். தலீத் மக்கள் குடியரசு தலைவராக ஆனார்கள். மேதைகளாக ஆனார்கள். ஆனாலும், தீண்டாமையின் சுவடுகள் அழியவில்லை சமுதாயதளத்தில் உறுதியாகவே நிற்கின்றது.

நமது இன்றைய குடியரசு தலைவரான ராம்நாத் கோவிந்த் அவர்கள் ஒரு கோயிலுக்குள் நுழைய முற்பட்டபோது அவர் அனுமதிக்கப்படவில்லை. திருப்பி அனுப்பப்பட்டார். ஆனால் இந்த குடியரசு தலைவர் அவர்கள் அஜ்மீர் தர்காவுக்கு சென்றபோது அவர் கருவரை வரை அனுமதிக்கப்பட்டார்கள். (விரிவான தகவல்களுக்கு வைகறை வெளிச்சம் மாத இதழை பார்க்கவும்)

ஓய்வு பெற்ற குடியரசு தலைவர், ஆர்.கே.நாராயணன் அவர்கள் (1997-2002). ஓய்வு பெற்றபின் கங்கை தீர்த்தத்தால் தெளித்து குடியரசு தலைவர் குடியிருப்பு மாளிகையை, சுத்தப்படுத்தினார்கள். காரணம் அவர் பட்டியிலனத்தைச் சார்ந்தவர். தீட்டுப் பட்டுவிட்டதாம்.

காலமெல்லாம் தலீத் மக்களுக்காகப் பாடுபட்டவர்கள் ஷெகஜீவன் ராம். அவர்கள் ஒன்றிய அரசின், பல்வேறு அமைச்சகத்திலும், (கேபினட் ரேங்) அமைச்சராக இருந்தவர்கள், பட்டியிலனத்தைச் சார்ந்தவர்கள்.

அவர் சம்பூர்நாத் என்றவருடைய சிலையை நமது ஒன்றிய அரசின் அமைச்சர் என்ற அளவில், திறந்துவைத்தபோது சிலை தீட்டுப்பட்டுவிட்டது, என தீர்த்தம் தெளித்து சுத்தப்படுத்தினார்கள்.

ஆக, வசதிகளும், வாய்ப்புகளும், பதவிகளும் வந்தாலும், தீண்டாமை தீர்வதில்லை. எல்லா பதவிகளோடும் அது தொற்றிக்கொள்கின்றது, தொடர்ந்து வருகின்றது.

பெரியாரின் மருந்து

இதனால் தான் தந்தை பெரியார் அவர்கள் இன இழிவு ஒழிய இஸ்லாம் ஒன்றே நன்மருந்து என அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள். இத்தோடு நிக்கவில்லை பெரியார் அவர்கள், இதை தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார்கள்.அவருடைய உயிரையே பறித்து விடுவோம் என மிரட்டினார்கள் பலர். நான் உயிருக்குப் பயந்தவனல்ல, என்பதை அழுத்தம் திருத்தமாக சொன்னார்கள்.

சிலர் உங்களுடைய கீர்த்தியும் கித்தாபும் குறைந்துபோகும் என்றார்கள். நான் அதைப்பற்றியும் கவலைப்படவில்லை, எனப் பொட்டில் அறைந்தால் போல் கூறினார்கள். இன்னும் ஒருபடி மேலேப் போய் சீர்திருத்தவாதிகள், இதுபோன்ற எதிர்ப்புகளையும், மிரட்டல்களையும், உருட்டல்களையும் சந்திக்காமல் எதையும் சாதிக்க முடியாது, என்றார்கள்.

இப்படியெல்லாம் எதிர்ப்புகளை எதிர்கொண்டு, இன இழிவு ஒழிய இஸ்லாம் ஒன்றே நன்மருந்து என முழக்கமிட்டார்கள் தந்தை பெரியார் அவர்கள்.

பெரியார் அவர்களின் உண்மையான அக்கறை

அன்று சீலையம்பட்டியில் (இன்றைய தேனி மாவட்டம்) ஒரு பெரும்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தை ஏற்றபோது, அங்கே தன் சொந்த செலவில் பயணம் செய்து, அந்த மக்களைப் பாராட்டினார்கள்.

மீலாதும் பெரியாரும்

மீலாது விழாக்களில் அதாவது இறைவனின் இறுதி தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் பிறந்தநாள் விழாக்கள் என அறியப்படுபவை. இவற்றில் கலந்துகொண்டார்கள். பின்னர் அவற்றிற்கு தலைமை தாங்கினார்கள். ஒரு கட்டத்தில் பெரியாரே மீலாது விழாக்களை நடத்தினார்கள். (குடியரசு இதழில் இவை மிகவும் துல்லியமாக பதியப்பட்டுள்ளன)

இத்தோடும் நிற்க்கவில்லை பெரியார் அவர்கள்.

முஸ்லிம்களின் பிரச்சனைகளில்

முஸ்லிம் எதிர்கொண்ட பிரச்சனைகளிலும், முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்தார்கள் தந்தை பெரியார்.

அண்ணல் அம்பேத்கரும் பெரியாரும்

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் கருத்துக்களையும், முயற்சிகளையும் தொகுத்து மக்களுக்குத் தெரிய தந்தார்கள் பெரியார் அவர்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் போராட்டம் இடைவிடா முயற்சிகள் இவற்றின் வழி அம்பேத்கர் அவர்களை தமிழகத்திற்கு இன்னும் சொன்னால் தென்னகத்திற்கு அறிமுகப்படுத்தியதால் தமிழகத்தில் தென்னகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு, ஒரு பெரும் கூட்டம் ஆதரவாளர்கள் உருவானர்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மதமாற்றத்தைப் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்திய போது, விரைந்து சென்று இஸ்லாத்தை முதல் விருப்பமாகக் கொள்ளும்படி பரிந்துரைத்தார்கள் தந்தை பெரியார் அவர்கள்.

பெரியார் இன இழிவை ஒழிப்பதில் உறுதியாக இருந்தார்கள். அதற்கு இஸ்லாமே தீர்வு என்றார்கள். அந்த வகையில், இஸ்லாம் ஒன்றே வழி. நாம் இன்றளவும் எடுத்த இதர எல்லா முயற்சிகளும் தோல்வியே சந்தித்திருக்கின்றன.

சமூகநீதி நாளில் பெரியாரை உறுதியாக பின்பற்றுவோம். ஷாதிய அடுக்குமுறையை ஒழிப்போம்.

திருமா ஆய்வு

அண்மையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் தன் முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்விலும், இந்த முடிவையே தீர்வாக சொன்னார்கள் என்பது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

# இஸ்லாமும் அறிவியலும்

வானிலுள்ள கோளங்களை படைத்திருப்பதில் பல படிப்பினைகள் உள்ளது. சிந்திப்போருக்கு இரவு, பகல் நிகழ்வுகள், என்னுடைய படைப்பினங்களை ஆய்வு செய்யுங்கள் என மனிதனை சிந்திக்க தூண்டும் இறைவசனம் திருமறையில் பல உள்ளன. திரு பி.ஏ.கிருஷ்ணன் நான் உஸ்பெகிஸ்தானில் இருக்கும் கி.வா.நகரத்திற்கு சென்றிருந்தேன். 19வது நூற்றாண்டில் அடிமை வியாபாரத்திற்கு பேர் போன நகரக்கோட்டைக்கு வெளியே ஒரு சிலை அதன் அருகே சென்று பார்க்கும் போது அல் குவாரிஸ்மியியின்ச் சிலையைப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது.

### அல் குவாரிஸ் மில் - யார் இவர்?

ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் வாழ்ந்த இவ்வறிஞர் அல்ஜிப்ராவின் தந்தை என அறியப்படுவார். சந்திரனில் ஒரு பள்ளத்தாக்கு இவர் பெயரால் அறியப்படுகிறது. அவர் எழுதிய புத்தகங்கள் பல புகழ் பெற்றவை. “இந்திய எண்களைக் கொண்டு கணக்கு” என்ற புத்தகத்தின் மூலம் இப்போதைய அரேபிய எண்கள் என்ற இந்திய எண்கள் உலகம் முழுவதும் அறியப்படுகிறது. இரண்டாவது லிஜு - அல்ஸிந் ஹிந்த் என்று அறியப்படும் வானவியல் அட்டவணை. சூரியன் சந்திரன் மற்றும் அவர் காலத்தில் அறியப்பட்டிருந்த ஐந்து கிரகங்களின் பாதைகளின் அட்டவணை இவருக்கு முன்னாலேயே எட்டாவது நூற்றாண்டில் பிரம்மகுப்தரின் பிரம்மசித்தாந்தம் என்ற வானவியல் நூல் அல்ஃபசாரி என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டது. இவ்வட்டவணைதான் அரேபியர்கள் தாங்களாக தயாரித்த முதல் அட்டவணை.

குவாரிஸ்மி வானவியல் கணிதத்தோடு நின்றுவிடவில்லை. “உலகின் அமைப்பு” என பூகோள புத்தகத்தையும் எழுதினார். இரண்டாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்டிரியாவில் தாலமி கிரேக்க மொழியில் எழுதிய “பூகோளம்” என்ற புகழ்பெற்ற புத்தகத்தை தழுவி எழுதிய அப்புத்தகம் உலகத்தின் இரண்டாயிரத்துக்கும் அதிகமான நகரங்களைப் பற்றி பேசுகிறது.

### உலுக்பெக்

உஸ்பெகிஸ்தானில் மற்றொரு புகழ்பெற்ற நகரம் சாமர்கண்ட். இந்த நகரின் மற்றொரு விஞ்ஞானியான உலுக் பெக்கின் சிலை இங்கேயிருக்கிறது. இவர் தைமூரின் பேரன். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அரசரான அவருக்கு அறிவியலில் தீராத ஈடுபாடு. “மதங்கள் பணிபோல் மறந்துவிடும். பேரரசும் அழிந்துவிடும். ஆனால் அறிவியல் நூல்கள் காலம் உள்ளவரை நிற்கும்” என்ற புகழ்பெற்ற மேற்கோளுக்கு சொந்தமான உலுக்பெக் எழுதிய “ஸிஜ்கல்தானி” என்ற நட்சத்திரங்களின் அட்டவணை இரவில் பாலைவனங்களில் பயணம் செய்பவர்களுக்கு உறுதுணையாக கருதப்பட்டது. இப்புத்தகத்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருக்கிறது. ஷாஜஹான் காலத்தில் இப்புத்தகத்தை தழுவி லிஜ். இ. ஷாஜஹானி என்ற புத்தகம் எழுதப்பட்டது. இந்த புத்தகத்தை “சித்தாந்த சிந்து” என்ற பெயரால்



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

“நித்தியானந்தர்” என்பவர் வடமொழியில் மொழிபெயர்த்தார்.

உலுக்பெக் வானவியல் ஆய்வுக்கூடம் ஒன்றை சாமர்கண்டில் அமைத்தார். இந்த ஆய்வுக்கூடத்தின் பாணியில் டெல்லி ஜெய்பூரில் நகரங்களில் இருக்கும் ஐந்தர்மந்தர் - மந்திரம் யந்திரம் என அழைக்கப்படும் வானவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

### அறிவுக் கூடம்

அறிவைத்தேடுங்கள் என்றும் அது மிகவும் அவசியம் என்றம் நபிகள் நாயகம் பணித்தார்கள். எந்த சந்தேகமுமில்லை. “இல்ம்” என்று அழைக்கப் படும் அறிவைக் குறிக்கும் அரேபியச் சொல்லும் அதைச் சார்ந்த மற்ற சொற்களும் 700கும் மேல் புனித குர்ஆனில் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஆண்ட அரசர்கள் இதை நன்கு அறிந்திருந்தார்கள். கலீபா அல்மைமூன் 830ம் ஆண்டில் பாக்தாத் நகரில் “பாய்ந் அல்ஹிக்மா” என்று அழைக்கும் அறிவுக்கூடத்தை அமைத்தார். இரண்டு இலட்சம் தினார்கள் செலவில் அமைக்கப்பட்ட அக்கூடம் அறிவியல் ஆய்வு மையமாகவும், மொழிபெயர்ப்பு மையமாகவும் இயங்கியது. கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் ஹூசைன் இப்னு ஐஸக் (ஜான் ஐஸக்கின் மகன் என்பது இந்த பெயரின் பொருள்) என அழைக்கப்பட்ட கிஜீஸ்தவர். இவரது தலைமையில் கேலன், அரிஸ்டாட்டில், பிளாட்டோ, ஹிப்போகிரேட்ஸ், தாலமிடியஸ், காரிமீஸ் போன்ற அறிஞர்களின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன.

ஹூனைனுக்கு புத்தக எடைக்கு எடை தங்கம் அன்றைய அரசால் வழங்கப்பட்டதாம். கிரேக்க லத்தீன் நூல்களில் பல தப்பிப்பிழைத்து திரும்ப மேற்குலகிற்கு கிடைத்ததென்றால் அதற்கு இஸ்லாமியர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

### அல்ராசியும் அவிசினாவும்

ட்ரக், ஆல்கஹால், ஆல்கலி, ஸிரப் ஷுகர், ஸ்பினாச் போன்ற சொற்கள் அரபி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு கிடைத்தவை. அவையெல்லாம் இஸ்லாமிய மருத்துவப் புத்தகங்களில் புழங்கியவை. இஸ்லாமிய மருத்துவர்களில் தலையாயவர்களாக இருவரை குறிப்பிடலாம். முதலாமவர் எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அல்ராஸி. இவர் பத்து மாதமாக எழுதிய மருத்துவ புத்தகம், உடற்கூறு, அறுவை மருத்துவம், மருந்துகள், நோயறிதல், நோயை கட்டுப்படுத்தும் முறை போன்ற மருத்துவத்தின் எல்லா வகைகளையும் பற்றி கூறுகிறது.

அல்ராசி மற்றொரு புத்தகத்தில் சொல்கிறார், “மருந்துகளின் பயன்களைப் பற்றி சிலர் உண்மையை சொல்கிறார்கள். சிலர் சொல்வது பொய் எனவே நாம் செய்யக்கூடியது நமது அனுபவத்தின் மூலமாக அறிவதுதான். அறிந்ததை அங்கே விட்டுவிடக்கூடாது சேர்த்து பகுத்து வைக்க வேண்டும். எந்த மருந்தின் பயனையும் நாங்கள் மற்றவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நம்ப தயாராக இல்லை. ஆராய்ந்து அதனால் பலன் இருந்தால் மட்டுமே நம்புவோம்.” அல்ராசி ஏழைகளை மறக்கவில்லை. “மருத்துவர்களிடம் போகமுடியாதவர்களுக்கு” என்று ஓர் புத்தகத்தையும் எழுதியிருந்தார்.

இஸ்லாம் தந்த மற்றொரு அறிஞர் பத்து பதினொன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அவிசினா என்று அழைக்கப்படும் இபின் சென்னா. இவரது இரு புத்தகங்கள் இன்று வரை பேசப்படுவவை,

கிதாப் அல்சிபா அறிவியலைப்பற்றியது. மற்றது கிதாப் அல் - கானூன் என்று அழைக்கப்படும் மருத்துவ புத்தகம். இப்புத்தகம் 10 லட்சம் வார்த்தைகளில் அன்றுவரை அறியப்பட்ட மருத்துவ முறைகளைப்பற்றியும் மருந்துகளைப் பற்றியும் சொல்கிறது. பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய நாடுகளிலும் ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளிலும் இவரது புத்தகம் தான் மருத்துவ உலகில் கோலோச்சி வந்தது.

### அல்பிரூனி

இஸ்லாமிய அறிஞர்கள் புனித குரானைத் தவிர வேறு எங்கும் செல்ல மாட்டார்களென்ற தவறான எண்ணம் நம்மில் பலருக்கு உண்டு. இந்த எண்ணத்தில் இருப்பவர்கள் அல்பிரூனி பதினொன்றாம் நூற்றாண்டில் எழுதிய “இந்தியா” என்ற நூலைப்படிக்க வேண்டும். முத்துகளும் கூழாங்கற்களும் கலந்தது இந்திய அறிவியல் என்பது அவரது கூற்று. அறிவியல் பற்றி தெளிவான புரிதல் இருந்தாலும் அதை வகைப்படுத்தி அளிப்பதில் கவனம் காட்டாததைப்பற்றியே அவர் குறிப்பிடுகிறார். பூமியின் ஆரத்தை அன்றே துல்லியமாக அளந்த சகலகலா வல்லுனர் அல்பிரூனி என்பதை நாம் நினைவில் கொள்வோம்.

இஸ்லாமுக்கும் அறிவியலுக்கும் நீண்ட தொடர்பு இருக்கிறது. அது அறுந்து போகாமல் பார்த்துக் கொள்வது இன்றைய இஸ்லாமியர்கள் கையிலுள்ளது.

**பி.ஏ.கிருஷ்ணன்**

“புலிநகக் கொன்றை, கலங்கிய நதி” ஆகியவற்றின் நாவலாசிரியர்

“இந்து” பத்திரிக்கையில் எழுதியதை வைத்து எழுதியது.

# CAA - குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிரான தீர்மானம்



இந்திய அரசால் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை கண்டித்தும் அதனைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரியும் அரசினர் தனித் தீர்மானம் ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செப்டம்பர் 8ம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

அப்போது பேசிய மு.க. ஸ்டாலின்,

1955ம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்படி, குடியுரிமை பெற "மதம்" ஒரு அடிப்படையாக இல்லை. ஆனால், இன்றைய மத்திய அரசு கொண்டுவந்த திருத்தத்தில், மதத்தை ஒரு அடிப்படையாக மாற்றுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், இந்தியாவை "மதசார்பற்ற அரசு" என்கிறது. அதன்படி பார்க்கும்போது, மதத்தை அடிப்படையாகக் கொண்டு எந்த சட்டத்தையும் கொண்டு வர முடியாது. அதனால்தான் இந்த சட்டத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், இந்திய நாடாளுமன்றத்தில் 2019ம் ஆண்டு டிசம்பர் 19ம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019, {Citizenship (Amendment) Act, 2019} என்று பெயர் சூட்டப்பட்டது.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து 2014ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இந்தியாவிற்குள் புலம் பெயர்ந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்ஸிகள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோருக்கு இந்தச் சட்டம் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இஸ்லாமியர் இதில் திட்டமிட்டு தவிர்க்கப் பட்டுள்ளனர். இது மக்களை மத ரீதியாகப் பிரிக்கிறது என்பதால், இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது.

இந்தச் சட்டமானது, நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு, குறிப்பாக மதச்சார்பற்ற தன்மைக்கு, முற்றிலும் எதிரானதாகும் என்ற காரணத்தினாலும், அது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல என்பதாலும் எதிர்ப்பைத் தெரிவித்தோம். இச்சட்டத்தினை எதிர்க்கும் வகையில், அது நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, அதனை எதிர்த்து இந்த மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என கோரிக்கை வைத்தோம். ஆனால், அக்கோரிக்கை முந்தைய அரசால் ஏற்கப்படவில்லை.

அகதிகளாக வருபவர்களை சக மனிதர்களாகப் பார்க்கவேண்டும், மத ரீதியிலோ, இன ரீதியிலோ, எந்த நாட்டிலிருந்து வருபவர்கள் என்ற ரீதியிலோ அவர்களைப் பிரித்துப் பார்க்கக்கூடாது என்பதுதான் சரியான பார்வையாக இருக்கும். வாழ்க்கையை இழந்து, சொந்த நாட்டில் வாழ முடியாமல், வேறு நாட்டுக்கு வருபவர்களிடம் பாகுபாடு காட்டுவது அகதிகளுக்கு நன்மை செய்வது ஆகாது. இது ஏற்கெனவே துன்பப்பட்ட மக்களை மேலும் துன்பத்துக்கு ஆளாக்கிப் பார்ப்பதாகும். அரசியல்ரீதியான பாகுபாட்டை, சட்டரீதியான பாகுபாடாக உறுதிப்படுத்துவது மிகமிகத் தவறானது ஆகும்.

அதிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறார்கள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்தை




சேர்ந்தவர்களெல்லாம் வரலாம் என்றால், இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு தடை விதித்தது ஏன்? இதுதான் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம்.

இதனால்தான் இந்த சட்டத்தை எதிர்க்கிறோம்.

இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டில் வாழ முடியாமல் தமிழகம் தப்பி வந்து முகாம்களிலும், வெளியிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப நினைக்காதவர்கள், இங்கு குடியுரிமை பெற்று வாழலாம் என்று நினைப்பவர்களது உரிமையை இந்தச் சட்டம் பறிக்கிறது.

ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதை விட, வஞ்சனையுடன் செயல்படுகிறது. அதனால்தான் இதனை எதிர்க்க வேண்டி உள்ளது.

இந்தியாவின் சுதந்திரம் என்பது, அனைவரும் சேர்ந்து போராடியதால் கிடைத்தது. இத்தகைய உன்னதமான நல்லிணக்க மரபிற்கு ஊறு விளைவிக்கும் வகையில், இந்திய மக்களிடையே பேதத்தைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது. ரத்து செய்யப்பட வேண்டியது என நாம் கருதுகிறோம்.

மேலும், இச்சட்டத்தின் நீட்சியாக தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (National Population Register) தயாரிக்கும் பணியினையும், அதனடிப்படையில் தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens) தயாரிப்பதையும் ஒன்றிய அரசு முழுவதுமாகக் கைவிடவேண்டும் எனவும் நாம் கருதுகிறோம்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் ரத்து செய்ய வேண்டும் என மத்திய அரசை இம்மாமன்றம் வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்," என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பிறகு, இது தொடர்பான தீர்மானத்தை அவையில் மு.க. ஸ்டாலின் வாசித்தார்.

"ஒன்றிய அரசு கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019, இந்திய நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தில் வகுத்தளிக்க பட்டுள்ள மதச்சார்பின்மை கோட்பாட்டிற்கும், நம் நாட்டில் நிலவி வரும் மத நல்லிணக்கத்திற்கும் உகந்ததாக இல்லை என்று இப்பேரவை கருதுகிறது.

மக்களாட்சித் தத்துவத்தின்படி ஒரு நாட்டின் நிர்வாகம் என்பது அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களின் கருத்தினையும் உணர்வுகளையும் உணர்ந்து அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டமானது அகதிகளாக இந்நாட்டிற்கு வருபவர்களை அவர்களின் நிலை கருதி அரவணைக்காமல், மத ரீதியாகவும், எந்த நாட்டிலிருந்து வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இந்திய நாட்டின் ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் போற்றிப் பாதுகாக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மை கோட்பாட்டினை நிலை நிறுத்தவும், ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019ஐ ரத்து செய்திட ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது" என அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் அவையில் முன்வைக்கப் படுவதற்கு முன்பாகவே, நேரமில்லா நேரத்தின் போது தங்களைப் பேச அனுமதிக்கவில்லை எனக் கூறி அ.தி.மு.க உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருந்தனர்.

இந்தத் தீர்மானத்திற்கு பா.ஜ.க எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தது. அவைக்கு வெளியில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், "அந்தச் சட்டம் இஸ்லாமியர்களுக்கு எதிரானது அல்ல" என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பிறகு பேரவையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**நன்றி - பிபிசி**




# தாலிபான்களின் தந்தி டீவி பேட்டி

**20 ஆண்டுகளுக்கு பிறகு ஆப்கானிஸ்தானை கைப்பற்றியுள்ளீர்கள். மக்கள் மத்தியில் உங்களுக்கு எந்தளவுக்கு ஆதரவு உள்ளது? இன்னும் நிறைய மக்கள் ஆப்கானை விட்டு வெளியேறிக் கொண்டே இருக்கின்றார்களே?**

*நாங்கள் ஆட்சியில் இல்லாத 20 வருடங்களில் ஒவ்வொரு மாகானத்திலும், கிராமத்திலும் ஆப்கான் மக்களுடன் தான் இருந்தோம். அப்போது அமெரிக்க படைகளுக்கு எதிரான பல்வேறு போராட்டங்களில் மக்கள் எங்களுக்குத்தான் ஆதரவாக இருந்தார்கள். காபூல் நகரத்தை நாங்கள் கைப்பற்றிய பிறகு எங்கள் கைகளில் முத்தமிட்டு மக்கள் உற்சாகமாக எங்களை வரவேற்றார்கள். டீ, ரொட்டி போன்ற உணவுகளை அவரவர்களின் வீடுகளிலிருந்து எங்களுக்கு கொண்டு வந்து தந்தார்கள்.*

*ஆப்கானை விட்டு வெளியேறியவர்கள் உண்மையில் ஆப்கானியர்களே கிடையாது. அவர்கள் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள், ஊழல் செய்தவர்கள். திருடர்கள். நாங்கள் கடுமையான சட்டங்களை அமல்படுத்த தயங்க மாட்டோம் என்பதாலும், அவர்களுக்கு இனி இங்கு பாதுகாப்பு இல்லை என்பதாலும் தான் அவர்கள் வெளியேறியுள்ளனர்*

**எப்போதும் நீங்கள் துப்பாக்கிகள் போன்ற பயங்கர ஆயுதங்களுடனேயே வலம் வருகின்றீர்களே! அது மக்களை அச்சுறுத்தாதா?**

*கஷ்மீரில் பாதுகாப்பில் ஈடுபட்டுகொண்டிருக்கும் இந்திய ராணுவத்தினரிடம் இந்த கேள்வியை என்றாவது கேட்டுள்ளீர்களா? ஆப்கான் இப்போது அவசர நிலையில் உள்ளது. நிறைய இடங்களில் முந்தைய அரசு ஏற்படுத்தியிருந்த நிறைய தடுப்புகளை, கெடுபிடிகளை அகற்றியுள்ளோம். மூடப்பட்டு கிடந்த தெருக்கள், சாலைகள் திறக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பையும், அமைதியையும் உணர்கிறார்கள். மக்கள் நாங்கள் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்கிறார்கள். மகிழ்ச்சியாக உள்ளனர்*

**ஜனநாயக முறைப்படி ஆட்சியமைக்க மாட்டோம் என்கிறீர்கள். உங்கள் நாட்டு மக்களுக்கும், மற்ற நாடுகளுக்கும் என்ன உத்திரவாதம் அளிக்க முடியும் உங்களால்?**

*ஆப்கானில் இஸ்லாமிய ஷரியத் சட்டத்தை நிலை நிறுத்த 40 வருடங்கள் நாங்கள் போராடிள்ளோம். எங்களுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை. மக்களுடைய பிரச்சனைகளுக்கு ஜனநாயகத்தில் தீர்வு காண முடியாது. ஆனால் இஸ்லாமிய ஷரியத் சட்டம் மக்களுடைய பிரச்சனையை தீர்க்கும்.*

ஜனநாயக முறையிலான அரசானது தவறானது.

**உங்களுடைய அரசில் பெண்களுக்கு முக்கியத்துவம் இருக்குமா? ஆட்சி அதிகாரத்தில் பெண்களும் இடம்பெறுவார்களா?**

உலகத்தில் உள்ள எந்த சமூகத்தை விடவும் நாங்கள் பெண்களை அதிகமாக நேசிக்கிறோம். சமூகத்தினுடைய சுமைகளை பெண்களின் தோல்கள் மேல் சுமத்த கூடாது என்று நினைக்கின்றோம். எங்கள் தாயாகவும், சகோதரியாகவும், வாழ்க்கை துணைவியாகவும் இருக்கின்ற பெண்களை மிகவும் மதிக்கின்றோம். மேற்கத்திய நாடுகளில் நடப்பது போல பெண்களை, பொம்மைகளாக பயன்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை. இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் தினமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. எத்தனையோ வன்புணர்வு வழக்குகள் பதியப்படுகிறது! இஸ்லாமிய ஷரியத் சட்டத்தின் அடிப்படையில் ஆட்சி செய்யும் ஆப்கானில், இதுபோன்ற பெண்களுக்கு எதிரான குற்றங்களை முழுமையாக ஒழிப்போம்.

**ஆப்கானில் அமைந்துள்ள அரசு பற்றி பல நாடுகள் இன்னும் மௌனமாகவே உள்ளன. இந்த சூழலை நீங்கள் எப்படி கையாலப்போகிறீர்கள்?**

உலகில் உள்ள எல்லா நாடுகளிடையே நல்ல உறவு முறையை வளர்த்துக்கொள்ளத்தான் நாங்கள் விரும்புகின்றோம். குறிப்பா எங்களுடைய அண்டை நாடுகளுடன். சீனாவும், பாகிஸ்தானும் எங்களை வரவேற்றுள்ளனர். ரஷ்யா நேர்மறையான சிகனல்களை கொடுத்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகள், சில அரபு நாடுகள், ஈரான், ஜெர்மனி போன்ற நாடுகளும் எங்களோடு நல்ல உறவை வளர்த்துக்கோள்ள வேண்டும் என்று தான் நினைக்கிறார்கள். மற்றவர்கள் எங்களை எதிரிகளாக பார்க்காத வரை, உலகில் எங்களுக்கு எதிரிகளே கிடையாது. எங்களுடைய நிலப்பரப்பை மற்றவர்களுக்கு எதிராக பயன்படுத்தமாட்டோம் என்று உலக நாடுகளுக்கு உத்திரவாதம் அளிக்கின்றோம். அதை காக்கவும் செய்வோம். எங்களுடைய அண்டை நாடான பாகிஸ்தானுடன், எல்லை, மொழி, மதம், கலாச்சாரம் என்று நிறைய ஒற்றுமைகள் உள்ளன. எனவே பாகிஸ்தானுடன் நாங்கள் உறுதியான உறவோடுதான் இருந்தாக வேண்டும். ஆனால் இதை இந்தியாவிற்கு எதிரான செயல்பாடாக பார்க்கக்கூடாது. எங்களோடு நல்லுறவை பேண விரும்பும் எந்த நாட்டோடும், நாங்களும் நட்புறவை மேம்படுத்த உறுதியான முயற்சியை எடுப்போம்.

**கல்வி நிலையங்களில் இருபாலர் கல்வியை ஏன் தடை செய்தீர்கள்?**

இருபாலர் கல்வி எங்கள் மதத்திற்கு எதிரானதாக இருப்பதால் அதை தடை செய்துள்ளோம். கணவன் - மனைவி, தாய் - மகன், சகோதரன் - சகோதரி என இப்படி நெருங்கிய உறவாக இருக்கின்ற ஆண் - பெண் மட்டுமே பேசலாம் என்றும், சேர்ந்து இருக்கலாம் என்றும் எங்கள் மதமும், கடவுளும் போதிக்கின்றது. இப்படியான எந்த உறவும் இல்லையென்றால் சேர்ந்திருத்தல் கூடாது. இது எங்கள் மத நம்பிக்கை. இதை யாரும் கேள்வி கேட்க முடியாது.

**தாலிபான்கள் பற்றிய பிம்பம் பொதுவாக மிகைப்படுத்தி காட்டப்படுவதாக நினைக்கின்றீர்களா?**

நாங்கள் காட்டுமிராண்டிகள், தீவிரவாதிகள், மக்களுடைய எதிரிகள் என்று மக்கள் மத்தியில் பரப்பிவிட்டார்கள். ஆனால் இதற்கு நேரெதிராக காபூல் குடிமக்கள் எங்களுக்கு எல்லா உதவி களையும் செய்கிறார்கள். முன்பின் அறிமுகமில்லாத மக்கள் கூட எங்களிடம் அன்பு செலுத்துகிறார்கள்.

**தாலிபான்கள் மத்தியிலேயே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வருகிறதே! இதுகுறித்த உங்களது கருத்துகள் என்ன?**

இதில் எந்த உண்மையும் இல்லை. எங்களுக்குள் பிரச்சனையோ, மோதல்களோ இல்லை. அப்படி ஏதேனும் நடந்திருந்தால் என்னை போன்றவர்கள் ஊடகங்களிடம் சொல்லியிருப்போமே! நாங்கள் ஒற்றுமையாக உள்ளோம். ஒருவருக்கொருவர் மறியாதை கொடுக்கின்றோம். எங்கள் தலைமை பிறப்பிக்கும் உத்தரவுகளை அடுத்த நிமிடமே செயல்படுத்துகின்றோம். தாலிபான்களுக்கு மத்தியில் நடந்த மோதல்களில் இறந்து விட்டதாக சொல்லப்பட்ட எங்களது சகோதரர்கள், இப்போதும் அவரவர்களில் வேலைகளை செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

**- தந்தி டீவி பேட்டி - 21/09/2021**

# இந்து அமைப்புகளுக்கு நிவாரண நிதி கட்டுரையாளருக்கு கொலை மிரட்டல்



- விஷ்வ ஹிந்து பரிஷத் அமெரிக்கா
- யேகல் வித்யாலயா பவுண்டேசன் USA
- இன்பினிட்டி பவுண்டேசன் (Infinity Foundation)
- சேவா இன்டர்நேஷனல்
- ஹிந்து அமெரிக்கன் பவுண்டேசன்.

அமெரிக்காவில் இயங்கி வரும் இந்த ஐந்து அமைப்புகளும் கொரோனா நிவாரண நிதியாக 833,000 டாலரை (6 கோடியே 18 இலட்சம்) சிறுதொழில் நிர்வாக குழுமத்திடமிருந்து (Small business administration)பெற்றுள்ளன. இந்தியாவில்

ஹிந்து மேலாதிக்கத்தை திணிக்கும் மத அமைப்புகளோடு இந்த ஐந்து அமைப்புகளும் தொடர்புடையவை.

கோவிட் 19 பெருந்தொற்றினால் பாதிப்படைந்த தொழில்களுக்கு பொருளாதார உதவி அளித்திடவும், தொழிலாளர்களை தக்கவைத்து வேலை வழங்கிடவும் கடன்களை கொடுத்து சிறிய நிறுவனங்களுக்கு உதவி செய்தது SBA. இதன் வழியாகவே நிதிகளை பெற்றுள்ளன ஐந்து அமைப்புகளும்.

### விஷ்வ ஹிந்து பரிஜத் அமெரிக்கா

தோராயமாக 1,71,430 டாலரை (1 கோடியே 27 இலட்சம்) இந்த அமைப்பு பெற்றுள்ளது. அமெரிக்காவில் 23 இடங்களில் இயங்குகின்றது. இந்தியாவில் இயங்கும் விஸ்வ ஹிந்து பரிசத்துடன் தொடர்பு இல்லை. அதன் கிளை அமைப்பும் நாங்கள் அல்ல என்று அவர்களின் இணைய தளத்தில் கூறிக்கொண்டாலும் அவர்களின் நம்பிக்கைகள், குறிக்கோள்கள் இவற்றினால் உந்துதல் பெற்றே அமெரிக்காவில் தோற்றம் பெற்றது எனக் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக இந்தியாவில் நடைபெற்ற பல கலவரங்களில் விஷ்வ ஹிந்து பரிஷத் இந்திய அமைப்பின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தியாவை இந்து நாடாக மாற்ற வேண்டும் என்று தொடர் பிரச்சாரமும் இவ்வமைப்பு செய்து வருகிறது.

### யேகல் வித்யாலயா பவுண்டேசன் USA

RSS அமைப்புடன் தொடர்புடைய இவ்வமைப்பு 71,462 டாலரை (53 இலட்சம்) பெற்றுள்ளது. இந்தியாவில் பெரும்பாலும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகள், கிராமப்புறங்களில் இவ்வமைப்பின் பள்ளிக்கூடங்கள் அமைந்துள்ளன. இதன் வழியாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீர்மானங்களை பரப்புகின்றது, பள்ளிப்பருவ மாணவர்களிடம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான வெறுப்புகளை விதைக்கின்றது என யேகல் வித்யாலயாவின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சமூகத்தில் நிலவும் நல்லிணக்கத்தை குலைக்கவும், அடிப்படை வாதங்களை பேசும் அரசியல் கொள்கைகளை விதைக்கவும், மதத்தின் அடிப்படையில் சமூகத்தில் பகைமையை உருவாக்கவும் யேகல் வித்யாலயா ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது எனக் கூறுகின்றது. மனிதவள மேம்பாட்டு துறையினால் நிறுவப்பட்ட ஒரு குழுவின் 2009ம் ஆண்டு அறிக்கை.

### இன்பினிட்டி பவுண்டேசன் (Infinity Foundation)

ஆர்.எஸ்.எஸ். அமைப்போடு தொடர்புடைய, இந்து தேசியவாதிகளின் இன்னொரு அமைப்பு இது. 51,872 டாலர் (38 இலட்சம்) கொரோனா நிவாரண நியீயாக இந்த அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை நிறுவியவர் ராஜிவ் மல்ஹோத்ரா. வலதுசாரி இந்து அமைப்புகளை விமர்சிக்கும் கல்வியாளர்கள், அறிஞர்கள் இவர்களை தனது கருத்துக்கள் மூலம் குறி வைப்பவர். பிரிவினை கருத்துக்களை வெளியிடுபவர். மற்றவர்களின் படைப்புகளை திருடுகிறார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உள்ளது. எனினும் கௌரவப் பேராசிரியராக

ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டியில் நியமிக்கப் பட்டார். இந்து தேசியவாதிகளின் கொள்கைகளை கல்வி நிலையங்களில் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் உதவித் தொகைகளை வழங்குகின்றது இந்த அமைப்பு.

### சேவா இன்டர்நேஜனல்

*150,621 டாலரை (1 கோடியே 11 இலட்சம்) கொரனோ நிவாரண நிதியாக இவ்வமைப்பு பெற்றுள்ளது. இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்குகின்றது சேவா இன்டர் நேஷனல்.*

*ரமேஷ் புத்தாதா - இந்திய அமெரிக்கர், தொழிலதிபர். ஆர்.எஸ்.எஸ்.-இன் அமெரிக்க பிரிவான இந்து ஸ்வயம் சேவக்கின் துணைத் தலைவர் (HSS). சேவா இன்டர்நேஷனல் தலைமை பொறுப்பில் பங்கு வகிப்பவர்.*

### ஹிந்து அமெரிக்கன் பவுண்டேசன்

*மொத்தமுள்ள 5 அமைப்பிலும் இதற்கு பெருந்தொகை 3,88,064 டாலர் (2 கோடியே 88 இலட்சம்) கிடைத்துள்ளது. மோடி அரசு கொண்டு வரும் சட்டங்களுக்கு எதிராக அமெரிக்காவில் விமர்சனங்கள் எழும்பொழுது தன்னுடைய லாபியின் மூலம் மோடி அரசுக்கு எதிரான கருத்துக்களை தடுக்கிறது.*

*சமீபத்தில் அறிவிக்கப்பட்ட குடியுரிமை திருத்த சட்டம் அடிப்படையிலே பாகுபாடு கொண்டது என விமர்சித்தது அமெரிக்கா. ஆனால் சட்டத்திற்கு ஆதரவாக லாபி செய்தது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யும் சட்டத்திற்கு ஆதரவாகவும் கருத்துக்களை முன்வைத்தது.*

*தங்களை ஒரு நடுநிலையான அமைப்பு என அவர்கள் கூறிக்கொண்டாலும் வெளிப்படை யாகவே ஆர்.எஸ்.எஸ். இயக்க உறுப்பினர்களிடம் தொடர்பு வைத்துள்ளது*

HAF. *இதன் இயக்குனர்களின் குழுமத்தில் ஒரு உறுப்பினராகவும், மேலும் இதன் பொருளாளராகவும் செயல்படுகிறார் ரமேஷ் புத்தாதவின் மகன் ரிஷி.*

*புத்தாத குடும்ப நிறுவனத்தின் வருமான வரி தாக்கலின்படி, இவ்வமைப்பு சேவா இன்டர் நேஷனலுக்கு 47,500 டாலரையும் (35 இலட்சம்), இந்து அமெரிக்கன் பவுண்டேஷனுக்கும், இந்து சுயம் சேவக் அமைப்பிற்கும் தலா 30,000 டாலரையும் நன்கொடையாக 2018ல் அளித்து உள்ளது.*

*கோவிட் நிவாரண நிதியை குறித்து ஐந்து அமைப்புகளிடம் கருத்துக்களை கேட்க அல்ஜசீரா முயன்றுள்ளது. ஹிந்து அமெரிக்கன் பவுண்டேசனும், யேகல் வித்யாலயா பவுண்டேசனும் கருத்து கூற மறுத்து உள்ளன. போன், இமெயில், மெசேஜ் இவற்றின் வழி பலமுறை தொடர்புகொள்ள முயன்றும் இன்பினிடி பவுண்டேஷனிடமிருந்து பதில் இல்லை.*

*விஷ்வ ஹிந்து பரிஷத் அமெரிக்கா அமைப்பும் சேவா இன்டர்நேஷனலும் பதில் அளித்துள்ளன. "லாப நோக்கம் இல்லாமல் இயங்கும் ஒவ்வொருவரும் இதற்காக விண்ணப்பித்தனர் அவ்வாறே நாங்களும் விண்ணப்பித்தோம். கேர்ஸ்* (CARES - coronavirus aid , relief and economic security act- *அமெரிக்காவில் 2020 மார்ச்சில் கொண்டு வரப்பட்டது) சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி இத்தொகையை நாங்கள் பிரித்துக் கொடுப்போம். அரசிடம் இருந்து பெறப்படும் தொகையை அமெரிக்காவிற்கு வெளியே நடக்கும் எந்தவித செயல்பாடுகளுக்கு செலவு செய்ய மாட்டோம்" என அல்ஜசீராவிடம் கூறியுள்ளார்* VHPA- *வின் தலைவர் அஜய் ஷா.*

*உங்கள் அமைப்பு ஆர்.எஸ்.எஸ். ஸோடு தொடர்புடைய இயக்கங்களுக்கு நிதி உதவியை அளிக்கின்றதா என்ற கேள்விக்கு "நாங்கள் அரசின் விதிகளை கடைபிடித்தே இந்தியாவில் செயல்படும் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு நிதியை அனுப்புகின்றோம்" என்றுள்ளார் ஷா.*

*கொரோனா தொற்று காலத்தில் தொழிலாளர்கள் பணியில் நீடித்திடவே நிதிகளை பயன்படுத்த முடிவு செய்துள்ளோம் என்று கூறியுள்ளார் சேவா இன்டர்நேஷனலின் தொலைத்தொடர்பு இயக்குனர் வித்யசாகர். ஆர்.எஸ்.எஸ். தொடர்பு குறித்த கேள்விக்கு,*

*"உலகம் முழுவதும் உள்ள லாப நோக்கமற்ற பதிவு செய்யப்பட்ட இயக்கங்களுடன் இணைந்து செயற்படுகின்றோம்" என்று அல்ஜஸீராவிடம் அவர் கூறியுள்ளார்.*

*இந்தியாவில் முஸ்லிம்கள் மற்றும் இதர சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரத்தை மேலும் ஊக்குவிக்க இந்தக் கொரோனா நிவாரண நிதிகள் சென்றடைய கூடும் என தன்னுடைய கவலையை வெளிப் படுத்தியுள்ளார்.*

Hindus for Human Rights *என்ற அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரான சுனிதா விஸ்வநாத். இஸ்லாமோபோபியா, இன்னும் இதர வெறுப்பு களை கக்கும் எந்த ஒரு அமெரிக்கா நிறுவனத் திற்கும் நிவாரண நிதிகள் சென்றடையக் கூடாது என்றும், அவர் அல்ஜஸீராவிடம் கூறியுள்ளார்.*

சங்பரிவார் அமைப்போடு தொடர்பில் இருந்த அமெரிக்க இந்து இயக்கங்களை குறித்த அறிக்கை ஒன்றை 2014ல் வெளியிட்டது தெற்காசிய குடிமக்கள் இணைய தளம் (South Asian Citizen web).

2001-2014க்கு இடைப்பட்ட காலங்களில் பெறப்பட்ட வருமான வரி ஆவணங்களை ஆய்வு செய்ததில் அமெரிக்க தொண்டு நிறுவனங்களிடமிருந்து கோடிகணக்கில் பணம் ஆர்.எஸ்.எஸ். தொடர்புடைய இயக்கங்களுக்கு சென்றுள்ளதை அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

SACW அறிக்கையின் படி, யேகல் வித்யாலயா பவுண்டேசன் 27 மில்லியன் டாலரும் (200 கோடி) விஷ்வ ஹிந்து பரிஷத் அமெரிக்கா 3.9 மில்லியன் டாலரும் (28கோடி) 2001-2012க்கு இடைப்பட்ட காலங்களில் அனுப்பியுள்ளது.

அதே காலகட்டத்தில் சேவா இண்டர்நேஷனல் 3.3 மில்லியன் டாலரை (24கோடி) இந்தியாவில் இயங்கும் வலதுசாரி அமைப்புகளுக்கு அனுப்பியுள்ளது. இந்து மேலாதிக்க கருத்துக்களை பரப்பிட பல்கலைக் கழகங்களுக்கும் ஆராய்ச்சி யாளர்களுக்கும் இன்பினிட்டி பவுண்டேசன் வழங்கிய தொகை 1.9 மில்லியன் டாலர் (14 கோடி).

தன்னுடைய பல்வேறு அமைப்புகளின் மூலம் வெளிநாட்டிலிருந்து நிதிகளை நீண்ட காலமாக பெற்றுக் கொண்டிருக்கின்றது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு என்கிறார் அரவிந்த் ராஜகோபால். இவர் நியூ யார்க் பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறையின் பேராசிரியராக பணிபுரிகிறார்.

அமெரிக்காவிலிருந்தும், இதர பகுதிகளில் இருந்தும் பெருமளவிலான பணங்கள் VHP அமைப்பிற்கு வந்து குவிகின்றன. அங்கிருந்து ஆர்.எஸ்.எஸ். கைகளுக்கு வருகிறது என 1990களில் பணியாற்றிய வருமான வரித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாக அல்ஜசீராவிடம் தெரிவித்துள்ளார் ராஜகோபால்.

முன்னாள் வருமான வரித்துறை அதிகாரியான விஸ்வபந்து குப்தாவைதான் ராஜகோபால் குறிப்பிடுகிறார். தன்னுடைய வருமானங்களையும் செலவுகளையும் வெளிப்படுத்த வேண்டுமென VHP அமைப்பிற்கு 1990ல் தாக்கீது அனுப்பியவர் குப்தா. அதன் பின்பு இவர் பணியிடமாற்றம் செய்யப் பட்டார். பிஜேபியின் அழுத்தம் காரணமாக பணியிடை நீக்கமும் செய்யப்பட்டார். வெளிநாடுகளில் இயங்கும் தங்கள் அமைப்பின் மூலம் இந்து அமைப்புகளுக்கு பணம் வருவதில்லை என்பதை யாரும் நம்ப மாட்டார்கள் எனத் தெரிவிக்கின்றார் ராஜகோபால்.

அல்ஜசீராவில் மேற்கண்ட கட்டுரையை ஹமீத் நாயக் எழுதிய பின்பு, எப்படி இந்து மேலாதிக்கத்தை திணிக்க விரும்பும் குழுக்களோடு தொடர்புடைய அமைப்புகள் நிதிகளை பெறுகின்றன என்ற கேள்வி அமெரிக்காவில் உள்ள செயற்பாட்டார்களிடம் எழுந்தது.

"கோவிட் 19 பெருந்தொற்றினால் மனித உயிர்களையும், பொருளாதார இழப்புகளையும் சந்தித்த குடும்பங்கள் அமெரிக்க முழுவதும் பரிதவிப்பில் இருக்க, எப்படி வன்முறைகளையும் மேலாதிக்கத்தையும் செயல்படுத்தும் அமைப்புகளை முன்னிலைப்படுத்தும் அமெரிக்க நிறுவனங்கள் கோவிட் நிவாரண நிதியை பெறுகின்றன?" என்ற கேள்வியும் அவர்களிடையே எழுந்துள்ளது. எனவே இதில் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்திடம் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

கஷ்டப்பட்டு வேலை செய்து வருமான வரி செலுத்தும் அமெரிக்கர்களின் பணம் வெறுப்பையும், துன்புறுத்தல்களையும் இன படுகொலைகளையும் இந்தியாவில் அவிழ்த்து விடுவதற்கு பயன்பட்டுவிடக்கூடாது என்பதை உறுதிசெய்ய விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஹமீத் நாயக் எழுதியதை இந்து தேசியவாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அல்ஜசீராவில் வந்த கட்டுரைக்கு எதிராக லீகல் நோட்டீஸ் (legal notice) ஒன்றை ஏப்ரல் 19 அன்று அனுப்பியுள்ளது ஹிந்து அமெரிக்கன் பவுண்டேசன். இதனை தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட ஹமீத் நாயக், "தன்னுடைய பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை என்று கோவிட் நிவாரண நிதிகளை பெற்றவர்கள் திடீரென்று டிரம்பிற்காக வாதாடிய சட்ட நிறுவனத்தை தங்களுக்காக வாதாடுவதற்கு நியமிக்கும் அளவிற்கு பணத்தை பெற்றுள்ளனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களிலும் ஹமீத் நாயக்கிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இந்து வலதுசாரி அமைப்புகள் குறித்து இனிமேலும் எழுதக்கூடாது என்று மிரட்டியுள்ளனர். அமெரிக்க சட்ட அமலாக்க முகமையிடம் கொலை மிரட்டல் குறித்து முறையிட்டுள்ளார் ஹமீத். எனினும் தொடர்ச்சியாக சமூக வலைதளங்களில் அவருக்கு துன்புறுத்தல்கள் தொடர்கின்றன. அல்ஜசீராவும் ஹமீதுடன் துணை நிற்போம் என்று கூறியுள்ளது.

ஆதாரம்: Aljazeera 2, 8 ஏப்ரல் 2021,

The Sisat daily

**- அபூஹாசின்**



# ஐரோப்பிய இளைஞர்களும் அரபு கலாச்சாரமும்

புகைப்படத்தில் இருப்பவர் முஸ்லிமல்ல. ஐரோப்பிய இளைஞர்!

ஐரோப்பிய நாட்டு இளைஞர்கள் இஸ்லாமிய நாடான அந்தலூசியா எனப்படும் ஸ்பெயினுக்குத் தான் கல்வி கற்பதற்காக செல்வார்கள்.

ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து மாணவர்கள் ஸ்பெயினுக்கே சென்றுள்ளனர்.

ஸ்பெயினில் கல்விக் கற்று சொந்த நாடு திரும்பிய ஐரோப்பிய இளைஞர் தனது நண்பர்களிடத்தில் "நான் அந்தலூஸ் சென்று கல்விக் கற்று வந்தேன்" என்று பெருமிதத்தோடு கூறுவார்.

அன்றைய ஐரோப்பாவில் அந்தலூஸிலிருந்து கல்விக் கற்று திரும்பவது நம் காலத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுத் திரும்புவதற்கு சமம்.

இவ்வாறு கல்விக் கற்று திரும்பும் மாணவர்களது பேச்சில் சில அரபு மொழி வார்தைகள் கலந்திருக்கும்.

இன்னும் சில இளைஞர்களோ தாங்கள் ஸ்பெயின் நாட்டில் கற்று வந்தவர்கள் என்று காண்பிப்பதற்காக வேண்டுமென்றே சில அரபி வார்த்தைக்களை தங்களது பேச்சுகளோல் கலந்து பேசுவார்கள்.

இன்னும் கூடுதலாக சொன்னால், இளைஞர்கள் தங்களது நாட்டு பெண்களைக் கவர்வதற்காக கூட தங்களுக்குள் அரபு மொழியில் உரையாடி கொள்வார்கள்.

ஏன் காதலைக் கூட அரபு மொழியிலேயே தெரிவிப்பார்கள்.

இன்றைக்கு தமிழன் கூட காதலை ஆங்கிலத்தில் "ஐ லவ் யூ" என்று சொல்லித்தானே வெளிப் படுத்துகிறான். அதுபோல ஐரோப்பிய இளைஞர்கள் காதலை அரபியில் தான் வெளிப்படுத்துவார்கள்.

இதன் விளைவாக கிறிஸ்துவ ஆலயங்கள் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டது:

"நம் நகரத்து இளைஞர்கள் முஸ்லிம்களது நகரங்களுக்கு சென்று கல்விக் கற்று நமது நகரத்திற்கு திரும்பியதும், தாங்கள் புகழ்பெற்ற முஸ்லிம்களது கல்வி நிலையங்களிலிருந்து கல்வி கற்று வெளியேறியவர்கள் என்று பிறருக்கு தெரிவிக்கும் பொருட்டு தங்களது மொழியோடு அரபு வார்த்தைகளையும் கலந்து பிறரோடு உரையாடுகின்றனர்."

"இவ்வாறான வழக்கத்தை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு நிறுத்திக் கொள்ளவில்லை என்றால் அவர்கள் அனைவரும் சுவனம் செல்வதை விட்டும் தடுக்கப்பட்டவர்கள் என்று கிறிஸ்துவ ஆலயம் அவர்களது பெயர் பலகையை வெளியிடும்."

பிரபல எழுத்தாளர் சிக்ரட் ஹுன்கே கூறுகிறார்:

"எங்களது இளைஞர்கள் அரபுகளுடைய ஆடை அணிவதையும் அரபு மொழி பேசுவதையும் மிகப்பெரிய பெருமையாக கருதுகின்றனர்."

இத்தாலியில் மக்கள் கூடும் இடத்தில் எல்லாம் இது மிகப்பெரிய பாவம் என்றுக் கூறி இதற்கு எதிரான பிரச்சாரத்தை பாதிரிமார்கள் முனைப்போடு செய்தும் கூட இதே நிலை தொடர்ந்தது.

ஆதாரம்: ஷம்சுல் அரப் தஷ்ரிகு அலல் கர்ப். முகத்திமா இப்னு கல்தூன். பாகம்:23. பக்கம்: 529.

**தமிழில்:**

**மௌலவி நியாசுதீன் புகாரி, நத்வி.**



# இஸ்லாமும் பெண்களும்

மகளிர் மன்றம்

ஆன்மீக ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் ஆண்களும் பெண்களும் சமம் என்கின்றது இஸ்லாம். இதனை ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டோம். உடல் ரீதியான விஷயங்களில் மட்டுந்தான் ஆண்களும் பெண்களும் வேறுபடுகின்றார்கள். இது இயற்கையானது, அறிவுப்பூர்வமானது.

ஆண்கள் ஆண்மைக்கே உரிய பணிகளைச் செய்திட வேண்டும், சுமைகளை சுமந்திட வேண்டும். ஆண்கள் ஆண்மையுடன் சுமத்திட வேண்டிய சுமைகளை மென்மையான பெண்கள் மேல் சுமத்திடக் கூடாது. பெண்களின் மென்மை அதைத் தாங்கிடாது.

குடும்பங்களின் பொருளாதார சுமையைச் சுமந்திட வேண்டியது ஆண்கள்தாம். பெண்கள் அல்ல. வீடும், வீட்டைப் பராமரிப்பதுமே பெண்களின் தலையாயக் கடமை. தேவையானதை சம்பாதித்து தருவது ஆண்களின் கடமை.

மகப்பேறு பெண்களுக்கே உரியது. பெற்றக் குழந்தைகளை பேணி வளர்ப்பதும், கல்வியைக் கொடுப்பதும், குணசீலர்களாக ஆக்கிக் காட்டுவதும், பராமரிப்பதும் அவள் செய்யும் மிகப்பெரிய சமுதாய சேவை. அவளது கடமை. இதனை அவளினும் சிறப்பாக யாரும் செய்திட இயலாது. அத்தோடு அத்தியாவசியமான சமுதாயப் பணிகளை திறம்பட செய்திட இயலும் என்றால்

அவளுக்கு அவகாசமிருந்தால், அவசியமிருந்தால் அவசியம் அதை அவள் செய்யலாம்.

ஆனால் குடும்ப வாழ்வைக் குலைத்திடவோ அங்கு செய்திட வேண்டிய சேவைகளைப் புறக்கணித்திடவோ கூடாது.

அவள் கணவனுக்காக நிறைவேற்றிட கடமைகள் உண்டு. கணவனிடமிருந்து பெற்றிட வேண்டிய உரிமைகளும் உண்டு. இவற்றின் முறைமைகளை அவள் பொதுவாழ்வு என்ற போர்வையில் தாக்கித் தகர்திடக்கூடாது.

ஆணும் பெண்ணும், கணவனும் மனைவியும் மிகவும் சீரிய அன்பு, பாசம், பரிவு, விட்டுக் கொடுத்தல் ஆகிய பண்புகளால் குடும்பத்தை அலங்கரிக்க வேண்டும்.

ஒற்றுமையாய் ஒன்றாய்ப் பிணைந்தவர்களாய், குடும்ப வாழ்வின் குதூகலத்தை அடுத்தடுத்தக் கட்டங்களுக்கே கொண்டு சென்றிட வேண்டும்.

அடுத்து ஒரு முக்கியப் பிரச்சனை. அது குடும்பத்தின் நிருவாகப் பொறுப்பை யார் சுமப்பது?

இதில் பொதுவான நிருவாக நியதி ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்றானால் குடும்ப நிருவாகம் சீராக அமையாது. குளறுபடிகள் பெருகும். நிருவாகம் நிலைகுலையும் குடும்பம் அல்லாடும்.

இதனால் நிருவாகம் ஒருவருடைய கையில் மட்டுமே இருந்திட வேண்டும். முடிவுகள் கலந்தாலோசிக்கப்பட்டு எடுக்கப்படவேண்டும். ஆனால் அறுதி முடிவை எடுப்பவர் ஒருவராகத் தான் இருந்திட வேண்டும்.

கண்ணியத்தைப் பொருத்தவரை இஸ்லாம் தாய்க்கு மிக அதிகமான கண்ணியத்தைத் தருகின்றது. இதில் தந்தையை விடவும் அதிகமான கண்ணியம் தாயாருக்குத்தான் தரப்படுகின்றது. சகோதரனை விட சகோதரிக்கும், மகனை விட மகளுக்குமே அதிக கண்ணியமும் முக்கியத்துவமும் தரப்படுகின்றது இஸ்லாத்தில்.

ஆனால் குடும்ப நிர்வாகத்தைப் பொறுத்தவரை அறுதி அதிகாரம் தந்தைக்கே தரப்படுகின்றது. காரணம் குடும்பத்தின் அறுதி பொறுப்பை சுமப்பவர் தந்தைதான். அவர்தான் மனைவியை மகிழ்ச்சியாக வைத்திட வேண்டியவர். அவர்தான் குடும்பத்தின் வாழ்வை நியாயமான வசதிகளோடு வைத்துக் கொள்ள வேண்டியவர்.

இதில் அவர் தன்னால் இயன்றதையெல்லாம் செய்யவில்லை என்றால், அல்லாஹ்வின் தண்டனைக்கு உள்ளாவார்.

மனைவி அடிமை அல்ல, மாறாக அவள் இல்லத்தின் அரசி. (THE QUEEN OF THE HOUSE) என்பது இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்)அவர்களின் பிரகடனம்.

இறைவன் கூறுகின்றான் :

*பெண்களுக்குக் கடமைகள் இருப்பதுபோல், அவர்களுக்கு அதிக உரிமைகளும் உண்டு. ஆயினும் ஆண்களுக்கு அவர்கள்மீது ஒரு படி உயர்வுண்டு. அல்லாஹ் வல்லமையும், ஞானமும் மிக்கவன். (அல்குர்ஆன் 2 : 228)*

முஹம்மத்(ஸல்) அவர்களைப் பொறுத்தவரை பெண்கள் பாவத்தின் பிறப்பிடமல்ல. அவர்கள் (முஹ்ஃசனா) ஷைத்தானிடமிருந்து (ஆண்களைப்) பாதுகாப்பவர்கள்.

தாயின் காலடியில் சுவர்க்கம் இருக்கின்றது. (நபிமொழித் தொகுப்பு நசயீ) எனப் பிரகடனப் படுத்தியதன் மூலம் இறைவனின் தூதர் அவர்கள் பெண்மைக்கு எங்குமமில்லா பெருமையைச் சேர்த்து விட்டார்கள்.

அறிவைத் தேடிப்பெறுவது முஸ்லிம் ஆண்கள் மீதும், முஸ்லிம் பெண்கள் மீதும் கடமையாகும். (நபிமொழி தொகுப்பு இப்னுமாஜா)

திருமணம் செய்வதைவிட திருமணம் செய்யாதிருப்பதே சிறந்தது என சில மதங்கள் போதித்தன என்பதை முன்னர் சுட்டிக் காட்டினோம்.

ஆனால் இஸ்லாம் திருமணத்தை சிலாகித்துக் கூறுகின்றது. ஆண்களின் ஒழுக்கத்திற்கு அதுவே சிறந்த அரண்.

“திருமணம் செய்து கொள்வது என்னுடைய வழிமுறை அதை நிராகரிப்பவன் என்னைச் சார்ந்தவனல்ல.” என்பது இறைவனின் இறுதித்தூதர் அவர்களின் தகைமைசால் போதனை. (நபிமொழி தொகுப்பு புகாரி,முஸ்லிம்)


“ஒருவன் திருமணம் செய்து விட்டால் மார்க்கத்தில் பாதியை நிரப்பிவிட்டான்.” (நபிமொழி தொகுப்பு பைஹக்கி)

திருமணங்களே குடும்ப வாழ்வின் அடிப்படை. அவைதான் சமுதாயங்களை உருவாக்கும். நல்ல ஒழுக்கத்தின்-ஒழுக்கமுள்ள சமுதாயத்தின் அடித்தளம்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்

**எம்.ஜி.எம்.**

தொடர் 10




# உச்சநீதிமன்றத்தின்

## தாழ்ச்சியும் வீழ்ச்சியும்

*14.* நீதிமன்ற அவமதிப்பு குறித்து, அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு *129*ல் தரப்பட்டுள்ள அதிகாரங்கள் நீதிமன்ற நிருவாகத்தை நல்ல முறையில் அமைத்திடப் பயன்படுத்திட வேண்டும். அல்லாமல், நீதிமன்றம் தன்னுடைய செயல்களுக்குப் பொறுப்புடன் பதில் சொல்லிட வேண்டும் என்ற பொறுப்பைத் தட்டிக்களிப்பதற்கு பயன்படுத்திடக்கூடாது.

*15.* முதன்மை நீதிபதி C.J *1964*-ல் இப்படிக் குறிப்பிட்டார்;

“நீதிமன்ற அவமதிப்பில் தண்டிப்பதற்கு இருக்கும் அதிகாரத்தை நாம் மிகவும் கவனமுடன் பயன்படுத்திட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அடிக்கடி இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திடக்கூடாது. சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் இவற்றைப் பார்த்திடாமலும் இந்த அதிகாரத்தைப் பயன் படுத்திடக் கூடாது. எடுத்ததற்கெல்லாம், நீதிமன்ற அவமதிப்பு எனக்கூறி இந்த அதிகாரத்தைப் பயன் படுத்திடக்கூடாது. கோபத்திலும், எரிச்சலிலும் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திடக்கூடாது. அப்படி பயன்படுத்தினால், அது இன்னும் அதிகமான நீதிமன்ற அவமதிப்புகளையும் இன்னும் அதிகமான நீதிமன்ற விமர்சனங்களையும் பெற்றுத் தரும். அறிவுடைய நீதிபதிகள் தாங்கள் வழங்கும் தீர்ப்புகளால் மக்களிடையே நல்ல மதிப்பையும் மரியாதையும் சம்பாதித்துக் கொள்வார்கள்.”

“அச்சமற்ற, தைரியமான, வீரியமான தீர்ப்புகளை வழங்குபவர்கள், அவர்கள் தங்கள் அணுகு முறைகளில் காட்டிடும் நடுநிலைத்தன்மை, கண்ணியம், நேர்மை இவையெல்லாம் நன்மதிப்பைப் பெற்றுத்தரும். இவற்றைக் கடைபிடிக்கும் நீதிபதிகள் தங்கள் கண்ணியத்தை மட்டுமல்ல நீதித்துறையின் கண்ணியத்தையே உயர்திடுவார்கள்.”

*16.* பாராததீகாந்தா Vs ஒரிசா உயர்நீதிமன்ற பதிவாளர் வழக்கு. *1974*ல் *(403)* நீதிபதி கிருஷ்ண அய்யர் அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

“*65* உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றங்களும், மக்களின் கருத்து சுதந்திரத்தை மிகவும் கவனத்துடன் பாதுகாத்திட வேண்டும். அந்தக் கருத்துச்சுதந்திரம் நீதித்துறைக்கு எதிராக இருந்தாலும் சரியே! நீதித்துறையின் மேலுள்ள கண்ணியம் பாரம்பரியமானது. தொன்றுதொட்டே

வந்துகொண்டிருப்பது. நீதிமன்ற அவமதிப்புகாகத் தண்டிக்கும் அதிகாரம் கைவரப்பெற்ற உயர்ந்த இடத்திலுள்ள நீதித்துறையினர், அது தங்களைப் பாதுகாப்பதற்கு தரப்பட்ட அதிகாரம் என எடுத்துக் கொள்ளக் கூடாது."

"நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளைக் கையாளுவது, மதிநுட்பம் நிறைந்த ஒரு கடமை. மிகுந்த பொறுமையுடனும், சகிப்புத் தன்மை யுடனும், விருப்பு வெறுப்பற்ற நிலையிலும் கையாண்டிட வேண்டியவை. இதில் நாம் மிகைத்த பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்."

நீதி என்பது நமது நீதிபதிகளின் பாட்டன் சொத்தல்ல. நீதி வழங்குவதில் காட்டிடும் வெளிப்படைத்தன்மையில்தான் நீதிபதிகளும், நீதியும், பெருமை பெறும் என்பதை உணர்ந்து செயல்பட்டிட வேண்டும்."

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

**குறிப்பு** :

உச்ச நீதிமன்ற நீதிபதியாக, நீதிபதி ரமணா அவர்கள் பதவியேற்றபின் நீதிமன்றங்களின் மீதும் நீதித்துறையின் மீதும் மக்கள் நம்பிக்கை மெல்ல மெல்ல உயர்ந்து வருகின்றது.

அவர் பதவி ஏற்றிட வரும்போது, அவருடைய நண்பர் மிகவும் சவால் நிறைந்த ஒரு காலகட்டத்தில் தலைமை நீதிபதி பொறுப்பை ஏற்கின்றாய் நெஞ்சுரத்தோடும், நடுநிலையோடும் நடந்துகொள் என்றார்களாம். அப்படியே நடந்து கொள்வேன் எனக் கூறினார்களாம். அப்படியே நடந்தும் வருகின்றார்கள்.

சாதாரணமாக முந்தைய நீதிபதிகள், அரசை பகைத்துக் கொள்ள வேண்டாம் என பாராமுகமாக இருந்த வழக்குகளையெல்லாம் தைரியமாக எடுத்துத் தீர்க்கமான நடுவுநிலையோடு தீர்ப்புகளை வழங்கி வருகின்றார்கள்.

பல தீர்ப்புகளை பத்திரிகைகள் தங்கள் தலையங்கங்கள் வழி பாராட்டி வருகின்றன.

**நீதிக்கு தலை வணங்க மறுக்கும் ஒன்றிய அரசு**

நாட்டில் மூத்த அதிகாரிகளையும் தனது அநீதிகளை எதிர்ப்பவர்களையும், நாட்டு நலனில் அக்கறை கொண்டு விழிப்புணர்வு கட்டுரைகளை எழுதும் எழுத்தாளர்களையும் உளவு பார்த்தது மோடியின் பாசிச அரசு, அதுதான் பெகஸஸ் ஊழல். "இந்த பெகஸஸ் வழி திரட்டப்பட்ட தகவல்களையும் தங்கள் உரிமைகளுள் தலையிட்டமைக்குத் தண்டனையும் வழங்கிட வேண்டும் ஒன்றிய அரசுக்கு" என பல வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டன.

## மாறிவரும் நீதித்துறையின் முகம்! நிலைக்குமா?

நமது நீதித்துறை பாசிசத்தின் பிடியிலிருந்து மெல்ல மெல்ல விடப்படுகின்றது என எடுத்துக் கொள்ளலாமா?

தலைமை நீதிபதி N.V.ரமணி அவர்கள் 27.9.2021 அன்று ஓர் அதிரடி அறிவிப்பைச் செய்தார்கள்.

மூத்த வழக்கறிஞர்கலெல்லாம், கார்ப்பரேட்டுகளின் அதாவது பெரும் முதலாளிகளின் வழக்குகளை உடனே எடுக்க வேண்டும் என முந்திக் கொண்டு வந்தபோது தலைமை நீதிபதி அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

"ஏழைபாளைகளின் வழக்குகள் நிரம்பவே கிடப்பில் கிடக்கின்றன. அவற்றுள் பிணைகள் கேட்கும் வழக்குகள், கீழ் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பெற்று, நிவாரணம் தேடி உச்ச நீதிமன்றம் வந்தவர்களின் வழக்குகள், இப்படி நிறைய வழக்குகள் கிடப்பில் கிடப்பதை எடுக்க போகின்றேன்" எனக் கூறியுள்ளார்.

என்ன நடக்கப்போகின்றது? பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்த வழக்குகளை தீரத்துடன் விசாரித்தது நமது உச்ச நீதிமன்றம் விபரங்களைத் தந்திடும்படி ஒன்றிய அரசுக்கு ஆணை பிறப்பித்தது. ஆனால் ஒன்றிய அரசு எந்தத் தகவலையும் தந்திட இயலாது என ஓர் அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. இப்படி பல நீதிமன்ற ஆணைகளில் நீதிக்குத் தலை வணங்க மறுக்கின்றது இன்றைய பாசிச அரசு. இவற்றிற்கெல்லாம், என்ன நடக்கப்போகின்றது என ஆவலுடன் நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**இன்னும் பல வழக்குகள்**

நமது உச்ச நீதிமன்றத்திற்குச் சவாலாக இன்னும் பல வழக்குகள் இருக்கின்றன. அவற்றில் மூன்று வழக்குகள் மிகைத்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றன.

1. காஷ்மீரின் தன்னாட்சியை அகற்றிய அதாவது அரசியல் சாசன சட்டம் பிரிவு 370 அகற்றிய வழக்கு.

2. CAA என்ற குடியுரிமைத் திருத்தச் சட்டம் பற்றிய வழக்கு.

3. விவசாய சட்ட வழக்கு. இவற்றில் என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# வாயுவினால் அல்ல... அது வயிற்றுப் புண்ணினால் வருவது!

முதுமையில் பல நோய்களின் தொல்லைகள் மாறுபட்டுக் காணப்படும். வயிற்று வலி இல்லாமலே ஏற்படும் வயிறு மற்றும் குடற்புண்கள், ஏப்பம், அஜீரணம் மற்றும் வாய்வு போன்ற தொல்லைகளே அதனுடைய அறிகுறிகளாக இருக்கலாம்.

### வயிறு, குடலில் புண்கள் வருவதற்கான காரணங்கள்

- மரபுநிலை - பரம்பரை நோயால் வருதல்.
- அமிலம் மிகுதியாகச் சுரத்தல், அது குடலில் புண்ணை உண்டாக்கும்.
- இரைப்பை உட்பாகத்தை உறுதிப்படுத்தும் திறன் குறைதல். இதனாலும் இரைப்பையில் புண் உண்டாகலாம்.

பல்வேறு மருந்துகளாலும் இரைப்பைப் புண் உண்டாகலாம்.ஆஸ்பிரின் போன்ற வலிபோக்கி மாத்திரைகளைத் தொடர்ந்து உண்டால் இரைப்பைப் புண் உண்டாகும்.

புகைப்பிடிப்பதனாலும் மது அருந்துவதனாலும் இரைப்பையிலும் குடலிலும் இருக்கும் புண்கள் மேலும் தொல்லைகளைக் கொடுக்கும்.

சமீப காலத்தில் எச்.பைலோரி (H.pylori)என்னும் கிருமி வயிற்றைப் பாதிப்பதால் புண்கள் உண்டாகிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

### அறிகுறிகள்

இரைப்பைப் புண் நோயின் முக்கிய அறிகுறி வயிற்று வலியாகும். அப்புண் இருப்பவருக்கு உணவு உண்ட ஒரு மணிநேரத்திற்குள் வயிற்று வலி உண்டாகும். இரவில் மட்டும் வலி மிகுதியாக இராது.

குடற்புண் உள்ளவர்களுக்குப் பசி எடுக்கும் போதெல்லாம் (உணவு உண்ட 3-4 மணிக்களுக்குப் பின்) வயிற்றுவலி ஏற்படும். உணவு உண்டதும் வலி குறையும். இந்நோயாளர் நள்ளிரவில் வயிற்று வலியால் அவதிப்படுவார். இரைப்பை, குடற் புண்கள் உள்ளவர் ஆன்டாசிட் மருந்தினை உண்டாலோ, வாந்தி எடுத்தாலோ வயிற்று வலி குறைந்துவிடும். வயது முதிர்ந்தவர்க்கு இதுபோன்ற அறிகுறி ஏதும் இல்லாமலேயே இரைப்பை குடற்புண்கள் இருக்கலாம்.

உணவிற்குப் பின் வயிற்றுப்பொருமல், உப்புசம், குமட்டல் பசியின்மை, நெஞ்சு எரிச்சல், விவரிக்க இயலாத ஒருவித தொல்லை போன்ற துன்பங்கள் இருக்கலாம்.

உடலும் இளைக்கலாம். உடல் திறனற்றுப் போகலாம். ரத்தசோகை ஏற்படலாம். வழியின்றி வாந்தி வரலாம். சில நேரங்களில் எவ்வித முன் அறிகுறியுமின்றித் திடீரென்று இரத்தவாந்தியோ, புண்ணில் ஓட்டையோ ஏற்பட்டுத் தாங்க முடியாத வயிற்று வலியும் வரக்கூடும்.

நெடுநாட்களாக இரைப்பைக் குடற்புண் இருந்தால் புண்ணுள்ள இடங்களில் அடைப்பு உண்டாகத் தொடர்ந்து வாந்தி வந்து கொண்டே இருக்கும்.

**பரிசோதனைகள்**

பேரியம் மாவுப்படம் மூலமும், நுண்குழாயை வாய் வழியாக செலுத்தியும் இந்நோயை எளிதில் கண்டு கொள்ளலாம். வயிற்றில் புண் இருப்பின், அதிலிருந்து ஒரு பாகத்தை எடுத்து பயாப்சி பரிசோதனை செய்வதன்மூலம் வயிற்றுப் புண்ணில் புற்றுநோய் உள்ளதா என்பது உறுதி செய்யப்படும். மேலும் இப்பரிசோதனை மூலம் வயிற்றுப் புண்ணுக்கு எச்.பைலோரி தொற்று ஒரு காரணமா என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

**சிகிச்சை முறைகள்**

1. ஆஸ்பிரின் போன்ற வலி போக்கு மாத்திரைகளையும், புகை பிடிப்பதையும், மது பானங்களையும் உடனே நிறுத்த வேண்டும்.

2. உணவுப் பத்தியத்தினால் மட்டும் புண்கள் விரைவில் குணமடைவதில்லை என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர். எனினும் காரம்,புளிப்பு, கொழுப்பு மிக்க உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

3. அடிக்கடி மிகுதியாகக் கோபப்படுபவருக்கும், எதற்கெடுத்தாலும் பதற்றம் அடைபவருக்கும், காலம் கடந்து உணவு உண்பவருக்கும் இரைப்பை குடற்புண்கள் வர அதிக வாய்ப்புண்டு. அதனால் கோபத்தையும் பதற்றத்தையும் குறைக்க வேண்டும்.


4. காலத்தோடு உணவை உட்கொள்ளவும் பழகிக் கொள்ளவேண்டும்.


5. மருந்து வகைகளினாலும் புண்களை குணமாக்க முடியும். ஆன்டாசிட்ஸ் மருந்தின் மூலம் வலி குறையும். இதற்கு அடுத்ததாக ஏ2 மருந்துகள் (சிமெட்டிடின், பேமோட்டிடின்,ராணிட்டிடின்) ஆகியவை வயிற்றில் சுரக்கும் அமிலத்தைக் குறைத்து வயிற்று வலியில் இருந்து நல்ல நிவாரணம் கிடைக்க உதவும். ஓமிபிரேசோல் (Omeprazole), லான்சோபிரேசோலே (Lansoprazole), ராபிபிரசோல் (Rabeprazole) மாத்திரைகள் மூலம் வயிற்றுவலிக்கு தக்க நிவாரணம் அளிக்க முடியும். இந்த மருந்துகளின் தீய விளைவுகள் அதிகமில்லை. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குக்கூட அவற்றை உபயோகிக்கலாம்.

6. எச்.பைலோரியினால் வரும் வயிற்றுப் புண்ணுக்கு தகுந்த கிருமிநாசினியை உபயோகிக்க வேண்டும். இதற்கு மூன்று அல்லது நான்கு மருந்துகள் கலந்த மாத்திரைகளை காலையிலும் மாலையிலும் சுமார் இரண்டு வார காலத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இந்தத் தொல்லையிலிருந்து 80 சதவிகிதம் குணமாக்கலாம்.

7. குடலில் அடைப்பு ஏற்பட்டாலோ, தொடர்ந்து மருந்து உண்டும் பயனாளிக்காவிட்டாலோ அறுவைசிகிச்சை தேவைப்படும்.






# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்

# முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - எஸ்.எம்.முஸ்ரிப்

எஜாஜ் ஷேஹ் என்பவரை டெல்லி சிறப்புப்படை, ஷஹரன்பூர் (உ.பி)யில் செப்டம்பர் -6, 2014 அன்று கைது செய்தார்கள். கைது செய்துவிட்டு, அவரை 2011 டெல்லி ஜாமியா மஸ்ஜித் தாக்குதல் வழக்கில் தேடப்பட்ட குற்றவாளியாக அறிவித்தார்கள். அவர்கள் 2010 டெல்லி ஜாமியா மஸ்ஜித் தாக்குதல் வழக்கில், வசிம் என்றொரு பெயரைச் சேர்த்திருந்தார்கள். அதனால் எஜாஜ் ஷேக்கு வசிம் என்றொரு புனைப்பெயர் இருப்பதாக அறிவித்தார்கள்.

அதன்பின் எஜாஜ் ஷேஹ் இந்தியாவைச் சார்ந்த டெக்கி - பொறியாளர் என்றும் ஹவாலா பண பரிமாற்றம் செய்பவர் என்றும் இந்தியன் முஜாஹித் என்ற அமைப்பின் இரகசிய உறுப்பினர் என்றும், அவர் ஜவாரி பஜார் குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டவர்களுக்கு சில போலி ஆவணங்களைத் தயாரித்து தந்தவர் என்றும் கதை கட்டி விட்டார்கள்.

இத்தனைக்கும் அவனுக்கு எதிராக உள்ள ஒரே ஆதாரம்,அவனுடைய ஒப்புதல் வாக்குமூலம். இது, பொடா போன்ற MCOCA என்ற சட்டத்தின் கீழ் பெறப்பட்டது. இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் பின்னர் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் அவர் ரியாஸ் பட்கல் என்பவருக்கு இ-மெயில்களை அனுப்பியதாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, அவருடைய இ-மெயில்கள் சிலவற்றைக் காட்டினார்கள். அவற்றில் சட்டத்திற்குப் புறம்பானவை எதுவுமில்லை. அவரை அந்தக் குற்றத்தோடு இணைக்க எந்த சாட்சியமும், தடயமும் கிடைக்காததால் காவல்துறையினர் விசாரணையைக் காலந்தாழ்த்திக் கொண்டே இருக்கின்றனர். இத்தனைக்கும் இது சம்மந்தமான குற்றப்பத்திரிகையை பிப்ரவரி மாதம் 2015ம் ஆண்டே தாக்கல் செய்துவிட்டார்கள். ஆனால் விசாரணையை 2018ம் ஆண்டு வரை தொடங்கவில்லை.

இதனால் எஜாஜ் ஷேக் பூனாவிலுள்ள சிறப்பு மோக்கா நீதிமன்றத்தில் செப்டம்பர் - 2018ம் ஆண்டு தன்னை வழக்கிலிருந்து விடுவிக்கும்படி ஓர் மனுவை தாக்கல் செய்தார். ஆனால் அவர் தில்சுக் நகர் குண்டு வெடிப்பு 2013ல் தண்டிக்கப் பட்டிருந்தார்.

இதனை அத்தியாயம் 8ல் விவாதித்திருக் கின்றோம். மேலும் ஜெர்மன் பேக்கரி வழக்கிலும் (2010) குற்றம்சாட்டப்பட்டவராக இருக்கின்றார்.

2. டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அப்துல் சுப்ஹான் குறைஷி (எ) தௌவ்ஹீத் -ஐ 22, ஜனவரி 2018 அன்று டெல்லியில் வைத்து கைது செய்தது என்பதே. இந்தக் கைது தனக்குக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நடந்தது என்றது.

தொடர்ந்து அவிழ்த்துவிட்ட புருடாவில் அவர் ஒரு கம்ப்யூட்டர் பொறியியலாளர் (இன்ஜினியர்) என்றும், அவர் தனது அபார மூளையை (IED)ஐ.ஈ.டி என்ற வகை வெடி குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தினார் என்றும், அவர் (சிமி)இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தில் 1999ல் சேர்ந்தார் என்றும் கூறியது. புருடா அத்தோடு நிற்கவில்லை, இன்றளவும் அவர் ரியாஸ் பட்கல் என்பவருடன் சேர்ந்து (IMI) இந்தியன் முஜாஹிதின் என்ற அமைப்பை உருவாக்கினார். பின்னர் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் தலைவரானார்.

**உண்மை என்ன?**

அவர்தான் 2008 அஹமதாபாத் குண்டு வெடிப்பின் மூளை. அஹமதாபாத் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் அவர் நேபாளம் சென்று அங்கிருந்து சவூதி அரேபியாவுக்குப் பறந்தார். அவர் (NIA) தேசிய புலனாய்வு முகமையினரால் தேடப்படுபவர். காரணம், அவர் ஆறு மாநிலங்களில் 2006 முதல் 2011 வரை நடந்த குண்டுவெடிப்புகளில் சம்பந்தப்பட்டவர்.

இந்தக் குண்டுவெடிப்புகளில் மும்பை புறநகர் ரெயில் குண்டுவெடிப்பு 2006, வாரணாசி (உ.பி.)குண்டுவெடிப்பு 2007, ஹைதராபாத் குண்டுவெடிப்பு 2008, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு-2011, மும்பை குண்டுவெடிப்பு, ஜவாரி பஜார் குண்டுவெடிப்பு ஆகியவையும் அடங்கும். அவர் அஹமதாபாத் தொடர் குண்டுவெடிப்புகளுக்குப் பொறுப்பேற்று ஓர் மின்னஞ்சலையும் அனுப்பியிருந்தார். இப்படியெல்லாம் பெரும் புராணம் ஒன்றை அவருக்குப் பின்னால் கட்டிவிட்டார்கள். (ஆதாரம்-Indian Express, Pune,23-01-2018),(IE 24-01-2018)

3. இன்னொருவர் அரிஸ்கான் (எ) ஜுனைத் என்பவரை டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு 14 -பிப்ரவரி,2018ல் உத்திரகாண்டில் வைத்து கைது செய்ததாக அறிவித்தது. இந்த கைது அப்துல் சுப்ஹான் குறைஷி தந்த தகவலின் அடிப்படையில் நடந்ததாகக் கூறியது. இவர் குண்டுகளை செய்வதில் நிபுணர் என்றும், இந்தியன் முஜாஹிதீன்களின் ஆசம்கார்க் கிளையினை சார்ந்தவர் என்றும் கதைகளைக் கட்டிவிட்டார்கள்.


டெல்லி சிறப்புக் காவலர்களின் கூற்றுப்படி அவர், டெல்லியிலுள்ள கிரேட்டர் கைலாஷ் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் எம் பிளாக்கில் குண்டு வைத்தார். அதேபோல் இன்னும் பல இடங்களில் குண்டு வைத்தார் என 13, செப்டம்பர் - 2008ல் பெரிய கதைகள் கட்டப்பட்டன. பல குண்டுவெடிப்பு வழக்குகளில் புனையப்பட்ட குற்றப்பத்திரிகையில் அவருடைய பெயர் இடம் பெற்றிருந்தது.

2007 உத்தரபிரதேசக் குண்டுவெடிப்பு ஆகியவற்றிலும் இவருக்குப் பங்குண்டு என்றார்கள். இவர் 2008ல் இந்தியாவிலிருந்து தப்பி ஓடிவிட்டார். அதுவும் பாட்லா ஹவுஸ் எதிர் தாக்குதலில் இரண்டு அப்பாவி முஸ்லிம் மாணவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர்தான் தப்பி ஓடினாராம்.

முதலில் நேபாளத்திற்கும் பின்னர் சவூதி அரேபியாவுக்கும் ஓடினாராம். 2017ல் யாருக்கும் தெரியாமல் இந்தியாவிற்குள் வந்து இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பிற்கு உயிர் தந்தாராம்.

(ஆதாரம் - The Times of India, Pune,15-Feb -2018, The Indian Express, Pune,15-02-2018)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்....**




இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!

# NIA / UAPAக்கு எதிரான மக்கள் இயக்கம்



## வழக்கறிஞர், சமூக உரிமைப்போராளி

# ஹென்றி தீபன்

சிறப்பு பேட்டி

*வைகறை வெளிச்சம் பத்திரிகையின் சார்பாக மக்கள் கண்காணிப்பகம் (People watch) இயக்குனர், வழக்கறிஞர் மற்றும் மனித உரிமைப் போராளி ஐயா ஹென்றி தீபன் அவர்களுடனான ஒரு சிறப்பு நேர்காணல்.*

*ஐயா இன்றளவில் ஊபா (UAPA) சட்டத்தின் கீழ் ஸ்டேன் சுவாமி, சுதா பரத்வாஜ், ஆனந்த் டெல்டும்ப்டே போன்றவர்கள் பீமா கொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.*

*இதில் ஸ்டேன் சுவாமி அவர்கள் என்னை NIA வின் கைதின் காரணமாக உடல் நலம் குன்றி கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார்.*

*ஸ்டேன் சுவாமிக்கு எதிராக மிகப்பெரிய மனித உரிமை மீறல் நடந்துள்ளது என அனைவரும் போராடினார்கள். அதில் உங்களுடைய மக்கள் கண்காணிப்பகம் (people watch) என்ற அமைப்பும் இதற்காக போராடி இருக்கின்றது.இது சம்பந்தமான விளக்கத்தை தெளிவாக கூறுங்களேன்.*

நீங்கள் ஸ்டேன் சுவாமி வழக்கை பற்றி ஆரம்பித்ததால் நான் அதை ஒட்டிய தகவல்களை கூற விரும்புகிறேன். ஸ்டேன் சுவாமி வழக்கில் ஈடுபட்டது தனி அமைப்புகள் கிடையாது. தேசிய ரீதியிலான ஒரு கூட்டியக்கமே இதனை எடுத்து செய்தது. இவர்கள் ஸ்டேன் சுவாமிக்காக ஆதரவு கொடுக்கிறோம் என்ற எண்ணத்தில் மட்டும் இதனை எடுத்து செய்யவில்லை.

பல மதங்களைச் சார்ந்தவர்கள், பல இயக்கங்களைச் சார்ந்தவர்கள், பல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இந்த விஷயத்தைப் பற்றி பேச வேண்டிய நேரம் இதுதான்.

இப்பொழுது பேச தவறிவிட்டோம் என்றால், சரித்திரத்தில் நாம் தவறு செய்தவர்களாக இருக்கக் கூடாது என்ற காரணத்தினால், நாட்டினுடைய பல இடங்களில் (UAPA) ஊபாவிற்கு எதிரான குரல்கள், நீதிமன்றங்கள் UAPA வழக்குகளை நடத்துவது பற்றிய விமர்சனங்கள், உச்சநீதிமன்றத்தின் மௌனம், சிறையில் இருக்கக்கூடிய நிலைகள் அதன் விளைவாக கொடூர சித்திரவதை அடைந்து இவர்கள் சிறை அதிகாரிகள் வேண்டுமென்றே

கவனக்குறைவாக இருந்ததன் காரணமாக ஏற்பட்டவைகள் ஒன்றல்ல இரண்டல்ல பலருக்கு உடல்நலம் மிகமோசமாக இருந்தது.

ஸ்டேன் சுவாமி இறந்துவிட்டார், வரவர ராவ் காப்பாற்ற பட்டார். ஹெனி பாபு காப்பாற்றப் பட்டார். ஆனால் ஸ்டேன் அவர்களினுடைய வயதின் காரணமாக அது முடியாமல் போய் விட்டது.

ஆகவே இது ஓர் பேரியக்கமாக இந்த தேசத்தில் கிளம்பி இருக்கிறது. இந்த தேசத்தில் கிளம்பி இருக்கக்கூடிய இந்த இயக்கத்திற்கு ஐ.நா சபையினுடைய மனித உரிமை உயர் கமிஷனர் அவர்கள், ஐ.நா சபையின் மனித உரிமை காப்பாளர்களினுடைய சிறப்பு அதிகாரி அவர்கள், ஐ.நா சபையுடன் நெருக்கமாக பணி செய்கின்ற பல அமைப்புகளும், இந்த தேசத்தில் நடக்கின்ற இனைந்து கொண்டு செல்லுகின்ற UAPA சட்டத்திற்கு எதிராகவும், NIA விற்கு எதிராகவும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் முழு ஆதரவு கொடுக்கிறார்கள் என்பது தான் நமக்கு கிடைதிருக்கக் கூடிய பெருமை.

இந்த போராட்டங்கள் கொரோனா கால கட்டத்தில், இணையவழியில் நடந்திருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் லட்சகணக்கான மக்கள் திரளுகின்ற இயக்கமாக இந்த இயக்கம் கண்டிப்பாக மாறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அதன் விளைவாக UAPA சட்டம் கண்டிப்பாக நீக்கப்படும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

தடா சட்டத்தை வீழ்த்தியவர்கள் நாம்தான். பொடா சட்டத்தை தூக்கி எரிந்ததும் நாம்தான். பின்பு பாராளுமன்றத்திற்கு வந்திருக்கலாம், அதன் பின்பு அரசியல் கட்சிகள் செயல் பட்டிருக்கலாம்.

தமிழகத்தில் இருக்கக் கூடிய நாம், தமிழகத்தில் தி.மு.க தலைமையில் நடக்கக்கூடிய இந்த ஆட்சி, இந்த தேசத்திற்கு சரியான ஒரு பணி செய்ய வேண்டுமென்றால், UAPA சட்டத்திற்கு எதிராக தன்னுடைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் பேச வைக்கவேண்டும். NIAவிற்கு எதிராக பேச வைக்கவேண்டும்..

சரித்திரத்தில் முன்னே ஒரு காலகட்டத்தில் ஒரு நிலைப்பாடு எடுத்தோம் என்றெல்லாம் கவலைப்படாமல், தவறுகளை ஏற்றுக்கொண்டு முன்னேறி செல்வதுதானே ஒரு சரியான அரசியல் பாதையாக இருக்கும் என்ற பின்னனியில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன், பழைய சரித்திரத்தை தூக்கி எரியுங்கள். இப்பொழுது புதிய சரித்திரத்தை நீங்கள் உண்டாக்க வேண்டுமென்றால் NIAவிற்கு எதிராக, UAPAவிற்கு எதிராக குரல் கொடுக்கக் கூடிய ஒரு கட்சியாக, ஒரு கூட்டணியாக, மக்களுடன் திரளக்கூடிய ஒரு அமைப்பாக உங்களுடைய அமைப்பு இருக்க வேண்டும்.

*தற்பொழுது இந்த வழக்கைப் பொறுத்தவரை உச்சநீதிமன்றம் ஓர் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இந்த UAPA என்ற சட்டத்தில் யாரை கைது செய்தாலும் ஆறு மாததிற்கு அவர்களுக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என்று. இதனால் பல உயர்நீதி மன்றங்கள் குற்றம் செய்யாதவர்களுக்கும் ஜாமீன் வழங்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. இதை பற்றிய உங்களது கருத்து என்ன?*

உச்சநீதி மன்றம் ஒரு குறுகிய கண்ணோட்டத்தில் ஆனால் சட்டத்திற்கு உட்பட்டு சட்டத்தை கொண்டுவந்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்பினார்களோ அதை அப்படியே செயல்படுத்துகின்ற ஒரு நீதிமன்றமாக இதுவரையிலும் செயல்பட்டிருக்கிறது.

இது சரி என்று சொல்லவில்லை. ஆனால் சட்டத்திற்கு புறாம்பாக செய்யவில்லை. சட்டத்திற்கு உட்பட்டு செய்தார்கள்.

சட்டத்தை இயற்றிய கட்சிகள், நடவடிக்கை களை கொண்டுவந்த கட்சிகள் என்ன மாற்றங்கள் கொண்டு வந்தார்களோ அந்த மாற்றங்களை முழுமையாக அமலாக்கம் செய்தது. அதன் விளைவாக UAPA சட்டம் பாய்ந்தால் அவனை வெளியே எடுக்க முடியாது என்ற ஒரு நிலையை கொண்டு வந்தார்கள்.

இது தான் உச்சநீதிமன்றம். ஆனால் ஒன்றை மட்டும் மறந்திட வேண்டாம். தமிழகத்தில் சில வித்தியாசங்கள் உண்டு. நம்முடைய திருமுருகன் காந்தி அவர்கள் 2018ம் ஆண்டு ஐ.நா. சபைக்கு செல்கிறார், ஐ.நா. சபையில் பேசுகிறார். தாயாகத்துக்கு திரும்புகிறார். பெங்களூர் விமானநிலையத்தில் இறங்குகிறார். கைது செய்கிறார்கள். கைது செய்த பிறகு அவரை குற்றவியல் நடுவர் (Magistrate) முன் நிறுத்துகிறார்கள்.

குற்றவியல் நடுவர் காவலில் வைக்க மறுத்து விடுகிறார். நீங்கள் கைது செய்து கொண்டு வந்ததால் உங்களுக்கு இன்னும் 24மணி நேரங்கள் மீதமிருக்கிறது. அந்த காலகட்டத்தில் வேண்டுமானால் அவரை நீங்கள் விசாரிக்கலாம். .ஆனால் அந்த 24மணி நேரத்திற்கு பிறகு அவரை நீங்கள் வைத்திருக்க முடியாது என்று கூறிவிட்டார். பிறகு ராயப் பேட்டை காவல் நிலையத்தில் வைத்துவிட்டு சிறிது நேரத்தில் விட்டுவிட்டார்கள்.

வெளியே சென்ற பிறகு அடுத்த காவல் குழு அவரை கைது செய்துவிட்டது. இவ்வாறு கைது செய்ததோடு அவர் மீது போடப்பட்ட வழக்குகளோடு UAPA வையும் சேர்த்து போட்டு விட்டார்கள்.

இதில் நான் என்ன பெருமையாக சொல்ல வருகிறேன் என்றால், அவர் சிறையில் பல மாதங்கள் இருந்தார். அவருக்கு எதிராக போடப்பட்ட பல சாதாரண வழக்குகள் அனைத்திலும் ஜாமீன் வாங்குவதற்காக தமிழ்நாடு முழுவதும் அலையவிட்டார்கள்.

அவருக்கு உடல்நலம் மிகவும் பாதிக்கப் பட்டது. மோசமான சூழ்நிலையில் வேலூர் சிறையில் வைத்திருந்தார்கள். நானும் அந்த நேரத்தில் அவரை சென்று பார்த்துள்ளேன். அவரை பார்க்கவே ரொம்ப கஷ்டமாக இருக்கும்.

அதே சமயம் அந்த குற்றவியல் நடுவர் UAPA வழக்கு வரும்போது, UAPAவில் அவரை காவலில் வைக்க முடியாது என்று கூறி UAPAவில் அவரை விடுதலை செய்தார்கள். இது தமிழகத்தில் நடந்தது.

இதை நான் எதற்கு கூறுகிறேன் என்றால், உச்ச நீதிமன்றம் கூறினால், அது உச்ச நீதிமன்றம். நம்முடைய நீதிபாதி முடியாது என்று கூறிவிட்டார்.

இந்த வாரத்தில் ஒரு கட்சியை சேர்த்த தோழர் ஒருவர் குடும்பத்தோடு சிறுமலைக்கு செல்கிறார். அங்கு தன் மகள் மற்றும் மருமகனோடு புகைப்படம் எடுத்து துப்பாக்கி பயிற்சிக்கு வந்திருப்பதாக போடுகிறார். இது தேவையில்லாத வேலை. இதை நான் ஆதரிப்பதாக நினைக்க வேண்டாம்.

நமது காவல்துறை எப்படி காய்ந்து போய் இருக்கிறார்கள் என்றால், வழக்கு போடவில்லை என்றால் அவர்களுக்கு பிரச்சனை ஆகிவிடும் என்பதற்காக அவர் மீது 124 ,125 ,505 ,507 போன்ற வழக்குகளை போடுகிறார்கள். இது எங்களுக்கு தெரிய வந்தது. நாங்கள் உடனே தலையீடு செய்வதற்காக முயற்சி செய்தோம். அங்கேயும் ஒரு நடுவர் அன்று இரவு 10.30 மணிக்கு ரிமாண்டிற்கு வரும் பொழுது 125 வழக்கு நிரூபிப்பதற்கு நீ என்ன ஆதாரம் வைத்திருக்கிறாய்? 505 IPCக்கு என்ன வைத்திருக்கிறாய்? 507ற்கு என்ன வைத்திருக் கிறாய்? என்று கேட்க, காவல் துறையினர் வாக்குமூலம் வைத்திருப்பதாக கூறுகிறார்கள். நீதபதி நீங்கள் என்ன ஆதாரங்கள் சேகரித்தீர்கள் என்று கேட்டு ரிமாண்ட் எடுக்கவில்லை.

எனவே உச்சநீதிமன்றம் உச்ச நீதிமன்றமாக செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நமக்கு இருக்கிறது. ஆனால் அது அவ்வாறு செயல் படவில்லை என்பதுதான் நமக்கு வருத்தம்.

ஆனால் வித்தியாசமாக செயல்படுகின்ற, யோசித்து செயல்படுகின்ற அதே சட்டத்தை வித்தியாசமாக பயன்படுத்துகின்ற நீதிபதிகள் (Judicial magistrate) இதே தமிழ் மண்ணில் இருக்கின்றார்கள் என்பது நமக்கு பெருமையாக உள்ளது.

அதே சமயம் உச்ச நீதிமன்றம் வித்தியாசமாக செயல்பட முடியும் என்பதை இது காட்டுகிறது. ஆனால் செய்யவில்லை. செய்ய முடியும், செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். கூடிய சீக்கிரத்தில் இந்த இயக்கம் அவர்களை செயல்பட வைக்கும். ஜூலை 24ம் தேதி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் திரு.ஆலம், திருமதி அஞ்சனா பிரகாஷ், திரு.வி.கோபால கௌடா, திரு.மதன். பி.லோக்கூர், திரு.தீபக் குப்தா ஆகிய ஐந்து உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் இந்த UAPA சட்டத்தை குப்பையில் எறிய வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

இப்பொழுது இருக்கக் கூடிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அரசியல் சட்டத்திற்கு எற்றார் போல் செயல்படுவதற்கு நிந்தித்தார்கள் என்றால் தீர்மானம் செய்தார்கள் என்றால் செயல் படுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது.

*உச்ச நீதிமன்றம் நீதமாக நடந்திருந்தால் ஸ்டேன் சுவாமி காப்பாற்ற பட்டிருப்பாரா?*

ஸ்டேன் சுவாமி உச்ச நீதி மன்றத்திற்கு போகவில்லை.அவர்அந்த நிலைக்கு செல்ல வில்லை. ஆனால் சுதா பரத்வாஜ், ஆனந்த டெல்கும்டே மற்றும் சிலர் போனார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தும் உச்ச நீதிமன்றம் எதுவும் செய்யவில்லை.

அவர்களையும், மெடிக்கல் கிரௌன்சிலில் ஜாமீன் கேட்டுள்ளீர்கள் ஆனால் உங்களுக்கு சாதாரணமாகவே ஜாமீன் கிடைக்கும் பாம்பே உயர்நீதி மன்றத்தில் போய் வாதடிக் கொள்ளுங்கள் என்று கூறியது. அவர்களுக்கு ஜாமீன் கொடுக்கும் வாய்ப்புகள் இருந்தும் கொடுக்காமல் விட்ட உச்ச நீதிமன்றதின் இந்த செயல் வேதனை அளிக்கிறது.

*பீமா கோரகான் வழக்கில் மிக பெரிய கலவரம் நடந்தது. அந்த கலவரத்தில் அங்குள்ள இந்துத்துவா அமைப்பினர் கலவரத்தில் ஈடுபாடுகிறார்கள் ஆனால் கம்யூனிஸ்டைச் சேர்ந்த அனந்த் டெல்கும்டே மற்றும் சுதா பரத்வாஜ், ரோனா வில்சன் போன்றவர்கள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். இப்படி ஒருதலைபட்சமாக செயல்படுவதை எப்படி பார்க்கிறீர்கள்?*

இது அனைத்தும் பொய் என்று நிரூப்பிக்கப்பட்டுவிட்டது. நீங்கள் ரோனா வில்சன் என்ற பெயரை தெரியாமல் எடுத்துவிட்டீர்கள். ரோனா வில்சன் வழக்கும், சுரேந்திர கட்லிங் வழக்கும், ஸ்டேன் சுவாமி வழக்கும் ஏன் சுதா பரத்வாஜ் வழக்கும் இன்னும் பலரின் வழக்குகளும் பீமா கோரகான் சம்பவத்தை ஒட்டி தீர்மானம் செய்யப்பட்ட வழக்குகள் இல்லை.

இப்பொழுது அவர்களுடைய கம்ப்யூட்டர் அமெரிக்காவில் உள்ள அமைப்புக்கு ஆய்வுக்கு அனுப்பப்பட்ட பிறகு அவர்கள் கொடுத்த அறிக்கையில் ரோனா வில்சனின் கம்ப்யூட்டர் 2015ம் ஆண்டு இன்டெர்பியர் ஆகியுள்ளது.

ஸ்டேன் சுவாமி அவர்கள் சார்ந்திருந்த பாதிரியார்கள் அதாவது ஏசு சபை அமைப்பினர் என்ன சொல்லிருக்கிறார்கள் என்றால், ஸ்டேன் சுவாமி இறந்து விட்டார் என்பதற்காக நாங்கள் அந்த வழக்கை விட்டு விடமாட்டோம். ஏனெனில் ஸ்டேன் சுவாமி நிரபராதியாக இறக்கவில்லை. அவர்கள் குற்றவாளியாக கருதப்பட்டிருந்த நிலையில் தான் இறந்தார். எனவே அவர் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்க இறுதிவரை நாங்கள் இந்த வழக்கை தொடருவோம் என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே மோடியை கொலை செய்வதற்கான முயற்சி, பீமா கோரகான் முயற்சி இவையெல்லாம் NIA இப்பொழுது சொல்கின்ற பொய்கள். தவிர இந்த பொய்களின் உண்மைகள் எல்லாம் ஒரு காலகட்டத்தில் வெளியில் வரும்.

இங்கு பிரச்சனை என்னவென்றால், அவை வெளிவரும் வரை நீங்களும் நானும் பிரச்சாரம் செய்ய இருப்போமா? என்பது தான். எனவே இதனை வேகபடுத்த வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது.

NIA போடுகின்ற வழக்குகள், NIA விசாரிக்கின்ற வழக்குகள், UAPA பயன்படுத்திகின்ற வழக்குகளில் தண்டனைகள் கிடையாது. அதில் உள்ள நீண்ட செயல்முறை ஆண்டாண்டு காலமாக நீதிமன்றத்திற்கு அலைந்து தங்களை நிரபரதி என நிரூபிப்பதுதான் மிகுந்த சிரமத்திற்குரிய விஷயம். ஆகையால் தான் சொல்லுகிறோம் அனைவரையும் நீங்கள் ஜாமீனில் விடுங்கள். வழக்கை நடத்திக் கொள்ளுங்கள் என்று தான் கூறுகிறோம்.

நாங்கள் வழக்கை வாப்பஸ் வாங்க சொல்லவில்லை. நாங்கள் வாப்பஸ் வாங்க விடமாட்டோம். நீங்கள் வழக்கை நடத்தும் லட்சனத்தை நாங்கள் பார்க்கிறோம். உங்களால் எண்ணிக்கையைக் கூட சரியாக கொடுக்க முடியவில்லை.

2019ம் ஆண்டில் இருக்கக் கூடிய வழக்குகளில் 113 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளாக NIAனுடைய வலைத்தளத்தில் காண்பிக்கிறார்கள். அதிலும் இந்த 2019 என போட்டு பொதுமக்களுக்கு வேகமாக வேலை செய்வதைப்போல் காண்பிக்கிறார்கள். ஆனால் 2019 என குறிப்பிட்டிருந்தாலும் அவை விசாரணை ஆம்பித்ததிலிருந்து உள்ள வழக்குகளே. அந்த வருடத்தில் மட்டும் உள்ள வழக்குகள் அல்ல.

அந்த 113 வழக்குகளிலும், தண்டனை கிடைத்தது 33, விடுதலை செய்யப்பட்டது 64, தள்ளுபடி செய்யப்பட்டது 16. ஆனால் இவை 2019ல் வழக்கு போட்டு அந்த வருடத்தில் முடிந்த கதைகள் அல்ல. இது 10 வருடங்களாக நிலுவையில் இருந்த, 6 வருடங்களாக நிலுவையில் இருந்த வழக்குகளினுடைய கணக்குகள்.

எனவே அவர்கள் காட்டும் 113 வழக்குகளில் 29.2 சதவீதம் கன்விக்ஷன் ரேட் என்று அவர்கள் சொல்வது பொய். உண்மையில் அது 2 சதவீதம் மட்டுமே.

மொத்த வழக்குகளில் தண்டனை வாங்கி கொடுத்த வழக்குகளில் இருந்து கன்விக்ஷன் ரேட் எடுக்காமல் உங்களுக்கு வசதியான ஒரு ஆண்டை 2019, 2020 என ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு எண்ணிக்கையை கொடுத்துக் கொண்டு நாங்கள் இயக்கங்கள், பிரச்சாரங்களில் சொல்லும் எண்ணிக்கையை தவறு என்று சொல்வது சுத்தப் பொய். பொய் சொல்வது நீங்களே! நாங்கள் கிடையாது. இதை சொல்வது நான் இல்லை உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி. திரு.ஆலம் அவர்கள்.மேலும் அவர்கள் இந்த UAPA வழக்குகளை வெளிப்படையாக போஸ்ட்மாட்டம் செய்ய விரும்புகிறேன் என்று கூறுகிறார்.

*நீங்கள் NIAவிற்கு, UAPAவிற்கு எதிரான பிரச்சாரங்களை எடுத்து செல்கிறீர்கள் எனவே மேலும் உங்களிடம் ஒரு தகவலை பற்றி கேட்க விரும்புகிறேன். NIA அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது அதில் 168 நபர்களை நாங்கள் கைது செய்துள்ளோம். அதில் 31 வழக்குகள் தண்டனை பெற்று தந்துள்ளோம். 27 நபர்கள் குற்றவாளி என நிரூபித்துள்ளோம் என்று கூறுகிறார்களே இது எந்த அளவிற்கு உண்மை?*

இதே தவல்களை எடுத்துக்கொண்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேளுங்கள். உங்கள் தகவல்களை பார்த்தோம் மிகவும் பெருமையாக இருக்கிறது. நீங்கள் சொல்லுகின்ற அந்த எண்ணிக்கையை எடுத்துக்

கொண்டு அந்த ஒவ்வொரு வழக்கும் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை கொண்டது, எந்த ஆண்டு குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது, எந்த ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டது என்று பார்த்தோம் என்றால் உண்மை வெளிவந்து விடும்.

2018ல் பீமா கோராகான் வழக்கு பதிவு செய்யப் பட்டது. பாத்தாயிரம் பக்க குற்ற பத்திரிகை போட்டாயிற்று. ஒரு சாட்சியை கூட இன்னும் விசாரிக்கவில்லை.

ஸ்டேன் சுவாமியினுடைய பெயில் பெட்டிசன் செஷன் கோர்ட்டிற்கு வருகிறது. செஷன் கோர்ட்டில் முடிவெடுக்கக் கூடிய நிலையில் மறுபடியும் NIA பிப்ரவரி 2019ல் மேலும் நாங்கள் ராஞ்சியில் போய் விசாரிக்க வேண்டும் என்கின்றார்கள். ஜாமீன் கொடுத்துவிடாதீர் என்று NIA நீதிமன்றத்திற்கு மறைமுகமாக அழுத்தம் கொடுக்கிறது.

*இதற்கான முடிவு என்ன?*

இதற்கு முடிவு மக்கள் இயக்கம் தான். இதுபோன்ற கொடுங்கோன்மையான சட்டங்களை தூக்கி எறிவதற்கு மக்கள் இயக்கங்களை ஒருங்கிணைப்பது, நம்முடைய முயற்சியின் காரணமாக அரசியல் கட்சிகள் பாராளுமன்ற உறுப்பினர்களை பேச வைப்பது, தேசிய மனித உரிமை ஆணையத்தை பேச வைப்பது (தேசிய மனித உரிமை ஆணையம் தடா, பொடா சட்டங்களுக்கு எதிராக பேசியது) நம் பொறுப்பு.

தேசிய மனித உரிமை ஆணையம் தன்னுடைய சர்வதேச அங்கீகாரத்திற்கு ஜெனிவாவிற்கு செல்வார்கள். அப்போது எங்களைப் போன்றவர்கள் அறிக்கை கொடுப்போம். அந்த அறிக்கையில் இந்த கேள்விகள் எல்லாம் நாங்கள் கேட்போம். அவர்கள் பதில் சொல்லி தான் ஆகவேண்டும்.

நமக்குள் உள்ள பல வித்தியாசாங்களை தூக்கி எரிந்து விட்டு, அரசியல் கட்சிகள் முதல் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சட்டத்தை தூக்கி எறிவதற்கான அவசிய காலம் வந்துவிட்டது.

*CAA போராட்டம் அதை தொடர்ந்து டெல்லியில் நடந்த கலவரத்தில் 200 இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் ஆளுகின்ற இந்த பா.ஜ.க. அரசு உமர் காலித் போன்றவர்களை UAPA சட்டத்தில் சிறையில் அடைத்தது பற்றி உங்களுடைய கருத்து என்ன?*

இப்பொழுது நீதிமன்றாங்கள் பேச ஆம்பித்து விட்டன. உச்ச நீதிமன்றம் மௌனம் சாதிக்கிறது என்று கூறினீர்கள். ஆனால் டெல்லி செஷன் கோர்ட் மௌனம் சாதிக்கவில்லை. அது இந்த வழக்குகள் தொடர்பாக மட்டுமின்றி, பல்வேறு வழக்குகள் பற்றி பேச ஆம்பித்து விட்டது. இவை அனைத்தும் ஜோடிக்கப்பட்ட வழக்குகள் என்று கூடிய சீக்கிரத்தில் வெளியில் வரும். ஆனால் இதில் மிகவும் வருத்தமான செய்தி என்னவென்றால் அவர்கள் சிறையில் இருக்கக் கூடிய காலம் நீடித்துக் கொண்டிருப்பதுதான். இதனால் அவர்களது குடும்பங்களும், உறவினர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளகிறார்கள். இவை அனைத்தையும் தாண்டி நாம் கொடுக்கக் கூடிய அழுத்தங்களை ஆழமாகவும், சர்வதேச ரீதியில், ஐ.நா சபையில் கொடுப்பது அவசியம். ஐ.நா. சபையில் பேச வைப்பது அவசியம்.

மோடி ஐ. நா. சபையின் பொது சபைக்கு செல்லும்பொழுது அங்கிருப்பவர்கள் இவரை கேள்வி கேட்க வைப்பது இவையெல்லாம் நம்முடைய பணி. மனித உரிமை பணி என்பது இது தான். இதுபோன்ற பணிகளை செய்வதால் எங்கள் வங்கிகணக்குகளை மூடி வைத்துள்ளார்கள். அவர்கள் நினைக்கிறார்கள் எங்கள் வங்கிக்கணக்கை மூடினால் எங்கள் வாயை மூடிவிடலாம் என்று. ஆனால் அவர்களால் எங்கள் வங்கிக் கணக்கை மட்டும் தான் மூட முடியும். எங்கள் வாயை மூட இயலாது.

உங்களைப் போன்றவர்கள் எங்களுக்கு ஆதரவு தருகிறீர்கள் நாங்களும் உங்களுக்கு ஆதரவை அளிக்கிறோம். நம் செயல்பாடுகள் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கிறது. நாம் எவ்வளவு நாட்கள் வெளியில் இருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதோ அந்த வாய்ப்பு களை சிறையில் இருக்கக்கூடியவர்களை வெளியில் கொண்டு வரும் பணியை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது

*நீங்கள் மக்கள் கண்காணிப்பு அமைப்பு மூலம் UAPA சட்டத்திற்கு எதிராக பல்வேறு இடங்களில் கருத்தரங்கு நடந்துகிறீர்கள். சமீபத்தில் திருச்சியில் கூட நடத்தினீர்கள். ஆனால் ஒரு சில இடங்களில் அனுமதி கிடைத்தாலும், மயிலாடுதுறை போன்ற இடங்களில் காவல்துறை நெருக்கடி தருவது பற்றி உங்கள் கருத்து?*

முதலாவதாக இது மக்கள் கண்காணிப்பகம் மூலம் நடத்தப்பட்டது அல்ல. இது

சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் சார்பாக நடத்தியது. கூட்டியக்கம் என்பது ஒரு பலமான கூட்டியக்கம். பல அரசியல் கட்சிகள், பல அரசியல் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், பெண்கள் இயக்கங்கள், இஸ்லாமிய இயக்கங்கள் எல்லாம் இணைந்து இருப்பதுதான் இந்த கூட்டியக்கம். இதில் நாங்கள் ஒரு சிறு அங்கம். சில இடங்களில் அனுமதி கேட்பது போன்றவற்றில் சிறிய தவறுகள் இருந்திருக்கலாம், தாமதமாக அனுமதி கேட்கப்பட்டு இருக்கலாம். ஆனால் இத்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத பணிகளை தமிழகத்தில் செயந்துள்ளது. தொடர்ந்து செய்யும். அடுத்த முறை அணைத்து மாவட்டங்களிலும் இந்த அமைப்பினை கொண்டு செல்வோம். வெகுஜன மக்களுக்கு இதை கொண்டு சென்றோம் என பதிவு செய்வோம்.

*உங்களுடைய இம்மதிரியான போராட்டங்களுக்கு தமிழக அரசினுடைய ஆதரவு இருக்கிறதா?*

அரசு இதுமாதிரியான விஷயங்களுக்கு நேரடியாக ஆதரவு தர இயலாது. அதானால் தான் சொல்கிறோம் அரசை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய அரங்கங்களில் அவர்கள் பேச வேண்டும்.

*இந்த விஷயம் தொடர்பாக நீங்கள் தமிழக முதல்வரை சந்தித்து பேசி இருக்கீர்களா?.*

ஒவ்வொரு முறையும் பேசிக்கொண்டும், அழுத்தம் கொடுத்துக் கொண்டும் தான் இருக்கிறோம். சென்ற முறையில் அவர்கள் வருவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் இந்த கூட்டியக்கம் தொடங்கும் பொழுது பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி அவர்கள் பங்கேற்றார்கள்.

*ஸ்டேன் சுவாமியை UAPA சட்டத்தில் கைது செய்தற்காக அடுத்தடுத்து என்னென்ன போராட்டங்கள் செய்வீர்கள்?*

தேசிய ரீதியிலான கூட்டியக்கத்தில் இருக்கக் கூடிய பொறுப்பாளர்கள் முடிவு செய்வார்கள்.

*உங்களுடைய இந்த அழுத்தத்தின் காரணமாக சிறையில் உள்ளவர்கள் வெளியில் வர வாய்ப்புகள் உள்ளதா?*

உங்களுடைய, எங்களுடைய என்றெல்லாம் இல்லை.நம்முடைய கூட்டியக்கத்தின் சார்பாக நாட்டிற்கு உள்ளும் வெளியும் நாம் கொடுக்கும் அழுத்தங்களால் கண்டிப்பாக மாற்றம் வரும். நீதிமன்றங்களிலும் மாற்றம் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.




சிஏஏ சட்டத்திற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தோம். இதில் ஜமாத்துல் உலமா சபை, இஸ்லாமிய அரசியல் கட்சிகள் மற்றும் இஸ்லாமிய இயக்கங்கள் அனைத்தும் கலந்து கொண்டன. இஸ்லாமிய இலக்கிய கழகம் சார்பில், கவிக்கோ.அப்துர் ரஹ்மான் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டது.




# கூட்டு முயற்சியோடு கிடைத்த வெற்றி





நமது ஊரில் எத்தனையோ நல சங்கங்கள் பல இருப்பினும் அனைத்தையும் காட்டிலும் கூடுதலாக நோயால், பசியால், கல்வியால், தொழிலால் நலிவடைந்தோருக்கு உதவி, குடும்ப பெண்களுக்கு சுயதொழில், தையல் பயிற்ச்சி, தையல் இயந்திரம் இன்னும் பல நலதிட்டங்கள் அமைத்துக் கொடுத்து அவர்களையும் ஊக்குவிக்கும் ஓர் NGOவாக செயல்படும் ஃபாத்திமாநகர் குடியிருப்பு நலசங்கம் சார்பாக கொரோனோகால களப்பணியாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி *19.09.2021* அன்று பாவா காஸிம் வலியுல்லாஹ் சமூக நல கூடத்தில் நடைப்பெற்றது.

அதில் வல்லோன் இறைவனின் நாட்டம், பொருந்திக் கொள்ளப்பட்ட பணி பலரில் ECHL(Edalai Corono Help line) எனக்கும் (அப்துல் பாசித்/ தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்) சிறந்த சமூக சேவகர் விருது *2021* (Almighty trust) Mohammed Yasirக்கும் வழங்கப்பட்டது... அல்ஹம்துலில்லாஹ்



உங்கள் இல்லம் தேடி

# இஸ்லாம்












## செப்டம்பர் மாதம் தாஅவா சுற்று பயணங்கள்






18.09.2021







22.09.2021



**12.09.2021 அன்று முதல் கோட்டார் இளங்கடை அப்துல் காதர் மருத்துவமனை சமீபம் வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பில் தாலிபான் பிடியில், ஆப்கானிஸ்தான் முஜாஹறித்களின் தியாக வரலாறு, கஷ்மீரின் பாதி விதவைகள் மேலும் வேர்கள் வெளியீட்டகத்தின் பிற வெளியீடுகள் சிறப்பு விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டது.**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002